

மாகாணமெங்கும்
ஆகஸ்டு 6 முதல்...
ஜுபிடரின்
ஆரம்பம்
கன்னியின்
காதலி
ரசிகர்களின் உள்ளத்தைக்
கட்டங்கள்.... கண்ணைக்கவரும்
காட்சி ஜோடனைகள்....
ராம்நாத்-சேகர்
டைரக்ஷன்-ராம்நாத்

சருமத் தடிப்பு சொஸ்தமாகிறது



"சருமத்தடிப்பு, எக்ஸிமா, முதலிய நோய்களுக்கு நான் சிகிச்சை செய்திருக்கிறேன். ஒவ்வொன்றும் வெல்டர்மாவுக்குப் பணிந்தன."

—N. E. (நர்ஸ்)

வழவழப்பானது, பிசுக்கற்றது

முதல் தடவையாக சருமத்தின் மேல் வல்டெர்மாவைத் தடவியவுடனேயே அதிலிருக்கும் இருவித சக்திகளும் — வேலை செய்வதை நீங்களே உணர்வீர்கள். இந்த இருவித சக்திகளில் ஒவ்வொன்றும் பலவித கொடிய கிருமிகளுக்குச் சத்துரு — அநேகவித சரும வியாதிகளுக்கும் மூலகாரணமாகும் கிருமிகளையும் அடியோடு அழித்து விடுகிறது.

எரிச்சல், வேக்காடு அடங்குகிறது. சருமம் மறுபடியும் சுத்தமாகவும், சுகமாகவும், ஆரோக்ய மடைகிறது. எக்ஸிமா, கொப்புளங்கள், வேக்காடுகள், பருக்கள் மற்றும் சருமத்திற்கு அடியில் ஏற்படும் இதர ரோகங்களெல்லாம் சொஸ்தமாகின்றன.

வேறென்ன இருக்கிறது. நீரில்— எண்ணைச் சேர்க்கை என்னும் புதுமையை அடிப்படையாகக் கொண்டு தயார் செய்யப்பட்ட வெல்டர்மா— நோய்கண்ட சருமத்தினுள்ள விஷத்தை வெளியேற்றுவதோடு மீண்டும் நோய் தொத்திவிடாமல் தடுக்கிறது. சரும வைத்திய நிபுணர்களால் பரிசீலனை செய்யப்பட்டது. வல்டெர்மா, கறை உண்டாக்காது. பூசின இடத்தில் புலனாகாது. எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் உபயோகப் படுத்தலாம்.

ஜியாப்ரே மானர்ஸ் அன் கோ., லிமிடெட்

பம்பாய் — கல்கத்தா — டில்லி — மதராஸ்




DOUBLE-ANTISEPTIC

Valderma

THE Non-Greasy BALM


TUSSANOL
for COUGHS
and COLDS
அந்த நர்ஸுக்குத்தான் தெரியும்!
வைத்தியர்களால் பெரிதும் சிபாரிசு செய்யப்
படும் டஸ்ஸனால் குழந்தைகள், பெரியவர்கள், இரும
லுக்கு மிகவும் சிறந்த சஞ்சீவி. டஸ்ஸனால் ஹிதமளிக்
கக் கூடியது. ஹானியற்றது. ருசியானது. வேதனை
யளிக்கும் இருமல், கக்குவான், ஆஸ்துமா, மார்ச்
சளி, நிமோனியா முதலியவைகளுக்கு சிறந்த மாற்று.
TUSSANOL
TUSSANOL
COUGH SYRUP
TS

ஸைலண்ட்!



paillard

Projector G

16 mm. or 8 mm.

பைலார்டு G ஸைலண்ட் ப்ரொஜெக்டரின்
ஆதார அமைப்புகளை ஆராய்ந்து பாருங்கள்

- பக்குவமான இயந்திர சாதனங்களால் பிலிமின் தேய்மானம் குறைவு.
- கலைந்து போகாமல் ஒரே நிதானமாகப் படமெடுக்கும்.
- படம் எடுக்கும் போது வெகு நிசப்தம். எல்லா கரண்டிலும், வோல்டேஜுகளிலும் வேலை செய்யும்.
- நீடித்து உழைக்கக்கூடியது செலவும் குறைச்சல்.
- முன் பக்கமும் பின் பக்கமும் படங்கள் காட்டலாம்.
- நிஸ் சலன படங்களையும் திரையிடலாம். பிலிமை திருப்பி சுற்றும் மோட்டார்.
- 16 mm. 8 mm. & 9½ mm. மூன்று அளவுகளுக்கும் பாகங்களை மாற்றிக் கொள்ளலாம்.
- மாற்றக்கூடிய லென்ஸுகள் மிகவும் அழகிய கேஸில் அடங்கியது.

இந்தியாவிற்கு
பூரண டிஸ்ட்ரிப்யூட்டர்கள்

Allied Photographics Limited பம்பாய் - கல்கத்தா - மதராஸ்



சிறந்த சலவை...
இந்த
OK
ஓ. கே. சலவை சோப்பு
கொண்டுதான்!
OK

கல்கி

பொருளடக்கம்

மலர் 9 இதழ் 1	ஆகஸ்டு 7	விரோதி இ ஆடி 23உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே


பாகிஸ்தானில் இருபதாயிரம் செஞ்சட்டைத் தொண்டர்கள் சிறைப்பட்டுக் கிடக்கிறார்கள். ஆனால் ஜனாப் லியாகத் அலிகான் "அதோ பாருங்கள்! இந்தியாவில் முஸ்லிம்கள் சுதந்திரமின்றிக் கஷ்டப்படுகிறார்கள்!" என்று கூறி உலகத்தை ஏய்க்கப் பார்க்கிறார்!
செஞ்சட்டைத் தொண்டர்கள்
லியாகத் அலிகான்
உலகம்
ஸ்ரீ பிரகாசம் காரு சென்னை மந்திரிகள் சிலர்மீது தயாரித்த புகார் இப்போது சென்னைப் பிரதமர் கனம் குமாரஸ்வாமி ராஜாவின் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. ஸ்ரீ பிரகாசமும் பரிசீலனையில் ஒத்துழைக்கிறார்.
முட்டைக்குள்ளிருந்து என்ன வெளி வரப் போகிறதோ?
பிரகாசம்
புகார்
SHASTRY

கல்கி

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 1

என்ன சேதி?

கொண்டாடுவோம்!

பாரத நாடு சுதந்திரம் பெற்று இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. அடுத்த வாரம் மூன்றாவது வருடம் ஆரம்பமாகிறது. இந்தியா சுதந்திரம் பெற்றதும் பெறாததுமாக சுதந்திர சர்க்கார் பிரளயத்தைப் போன்ற அகதிகள் பிரச்னையைச் சமாளிக்க வேண்டியிருந்தது. தேசத்தையே விழுங்கி விடுவது போல் வந்த அந்த விபரீதத்தைச் சுதந்திர அரசாங்கத் தலைவர்கள் எதிர்த்து நின்று வெற்றிபெற்றார்கள். ஓர் ஆண்டு முடிவதற்குள் மற்றொரு பெரும் ஆபத்து நேர்ந்தது. சத்திய தேவதையே மறைந்தது போல காந்தி மகான் மறைந்தார். அந்த ஆபத்திலிருந்தும் பாரத தேசம் தட்டுத் தடுமாறிக் கரையேறியது. பிறகு, காஷ்மீரத்திலும், ஹைதராபாத்திலும் போர்கள் மூண்டன. அவைகளிலும் இந்திய சர்க்கார் வெற்றியே கண்டார்கள்.

சுதந்திர இந்தியாவுக்கு மூன்றாவது ஆண்டு ஆரம்பமாகும் இந்தச் சமயத்திலே பயங்கரமான உணவுப் பிரச்னை தேசமக்களை எதிர்நோக்கி நிற்கிறது. அந்தப் பிரச்னையைத் தீர்க்க நமது மாபெரும் தலைவர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள். அந்த வழியைப் பின்பற்ற சுதந்திர விழாவின்போது உறுதிகொள்ள வேண்டும் என்று காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானித்திருக்கிறது. ஜனங்களிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் நிலவுவதற்கான முறைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்றும் அந்தக் கமிட்டி கட்டளையிட்டிருக்கிறது. எனவே, நமது தலைவர்களின் கட்டளைகளை நிறைவேற்றும் வகையில் சுதந்திர விழாவைக் கொண்டாடுவோம். சுதந்திர இந்தியா கூடிய சீக்கிரத்தில் சுபிட்ச இந்தியாவாகத் திகழவேண்டும் என்று தெய்வத்தை வணங்குவோம்.

ஈத் பெருநாள்

முஸ்லிம்களுக்குப் புனிதமான ஈத் பெருநாள் இந்தியா முழுவதும் அமைதியாகக் கொண்டாடப்பட்டது. அந்தப் பெருநாளை ஒட்டி இந்தியாவின் கவர்னர் ஜெனரல் ராஜாஜியும் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேருவும் அன்புச் செய்தி அனுப்பினார்கள். அவர்களும் மற்ற மந்திரிகளும், அதன் சம்பந்தமாக இந்திய சர்க்கார் மாளிகையில் நடந்த வைபவத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள். டில்லி ஜும்மா மசூதியில் நடந்த பிரார்த்தனையின் போது பாகிஸ்தான் ஹை கமிஷனர் உள்பட லட்சம் முஸ்லிம்களுக்கு மேல் கலந்து கொண்டார்கள். பம்பாய், சென்னை முதலிய இடங்களிலும் லட்சக்கணக்கான முஸ்லிம்கள் யாதொரு தடையுமின்றி ஈத் பண்டிகையைக் கொண்டாடினார்கள். இந்தியாவில் நிலவிவரும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையையும், இங்கு மற்ற சமூகத்தினரைப் போல் முஸ்லிம்களுக்கும் பூரண சுதந்திரம் இருக்கிறது என்பதையும் ஈத் வைபவங்கள் உலகத்துக்கு நிரூபித்திருக்கின்றன என்பதைப் பாரபட்சமற்ற அமெரிக்கப் பிரமுகர் ஒப்புக்கொண்டு இந்தியாவைப் பாராட்டியிருக்கிறார்.

ஆனால், பாகிஸ்தான் பிரதம மந்திரி ஜனாப் லியாகத் அலிகானின் கூற்று, கண்முன் நிகழ்ந்தவற்றையே முற்றிலும் மறைப்பதாக இருக்கிறது. புனிதமான ஈத் பெருநாளில் சமூகங்களிடையே, தேசங்களிடையே அன்பையும் நட்பையும் வளர்க்க முற்படுவதே பொருத்தமாக இருக்கும். லியாகத் அலியோ வெனில், அந்தப் புனித தினத்தைத் தம்முடைய வழக்கமான பித்தலாட்டப் பிரசாரத்துக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். "இந்தியாவிலுள்ள மூன்றரைக் கோடி முஸ்லிம்கள் ஈத் பண்டிகையைச்


சுதந்திரமாகக் கொண்டாட முடியவில்லை'' என்று மேற்படி புனிததினத்திலே கலப்பற்ற பொய்யைக் கூசாமல் கூறியிருக்கிறார். எனவே, கடுகளவும், ஆதாரமற்ற அந்தக் கூற்று இந்திய முஸ்லிம் தலைவர்களிடையே ஆத்திரத்தை உண்டுபண்ணியதில் ஆச்சரியமில்லை.

பிரமுகர்களின் கண்டனம்

"இந்தியாவில் ஹிந்துக்களுக்கு எவ்வளவு சுதந்திரம் இருக்கிறதோ, அவ்வளவு சுதந்திரம் முஸ்லிம்களுக்கும் இருக்கிறது. எனவே, அனாவசியமாக ஆத்திரத்தை உண்டு பண்ணக்கூடிய பேச்சுகளால் பரஸ்பரம் நம்பிக்கையோ, கட்டுபோ ஏற்பட முடியாது'' என்று ஸர் மிர்ஸா இஸ்மெயில் லியாகத் அலிகானின் விபரீதமான போக்கைக் கண்டித்திருக்கிறார்.

"லியாகத் அலிகானின் நெடுந்தூர வாய்ப் பீரங்கியால் இந்திய முஸ்லிம்களுக்கு அதிகக் கஷ்டமே ஏற்படும். எங்களுடைய நிலைமையை நாங்கள் சமாளித்துக் கொள்ள முடியும். எனவே, லியாகத் அலிகான் போன்றவர்கள் இந்திய முஸ்லிம்களுக்காகப் பரிந்து கொண்டு நீலிக் கண்ணீர் வடிக்க வேண்டாம். அவர்கள் பேசாமல் வாயை மூடிக்கொண்டிருப்பதைக் காட்டிலும் எங்களுக்குச் செய்யும் சிறந்த தொண்டு வேறு எதுவும் இருக்க முடியாது'' என்று இந்திய சர்க்கார் மாஜி மந்திரி சர் சுல்தான் அகமது கூறியிருக்கிறார்.

அகில இந்திய மோமின் மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ அப்துல் காயம் அன்சாரி, பாகிஸ்தான் பிரதம மந்திரியின் பித்தலாட்டம் இந்திய முஸ்லிம்களையே அவமதிப்பதாகும் என்று கூறி, இந்திய முஸ்லிம்கள் யாவரும் ஏகோபித்து அந்தக் கூற்றைக் கண்டிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.



1945-ம் வருஷம் கைக்கொண்ட விசாரணையின் பலனாக மத்திய வகுப்பாரில் எழுபது சத விகிதம் பேர் கடனாளியாக இருக்கிறார்கள் என்று இந்திய சர்க்கார் அறிக்கை கூறுகிறது. அப்படியானால், இன்றைய நிலைமை இன்னும் மோசமாக இருக்கும்.

"இந்திய முஸ்லிம்களை இரத்த சம்பந்தமுள்ள சகோதரர்கள் என்று ஸ்ரீ லியாகத் அலிகான் குறிப்பிடுவதைக் காட்டிலும் அர்த்தமற்ற போலிக் கூற்று வேறு எதுவும் இருக்க முடியாது. "இரத்த சம்பந்தமுள்ள சகோதரர்கள்'' மீது அவ்வளவு பரிவு காட்டும் அவர், ஆப்கன் எல்லையிலுள்ள இரத்த சகோதரர்களான இருபதாயிரம் பட்டாணியர்களையும் வீரரும் தியாகியுமான கான் அப்துல் கபார்கானையும் ஏன் சிறைப்படுத்த வேண்டும்? வெடி குண்டுகளை வீசி இரத்த சகோதரர்களான இரண்டாயிரம் மலைவாசிகளை ஏன் பலியிட வேண்டும்? எனவே, பாகிஸ்தானின் மேற்படி அக்கிரமங்களை யெல்லாம் அறிந்தவர்கள், லியாகத் அலிகானின் நய வஞ்சகத்தையும் பொய்ப் பிரசாரத்தையும் கண்டு ஏமாந்துவிட மாட்டார்கள்'' என்று ஸ்ரீ அன்சாரி அவருக்குச் சரியான சூடு கொடுத்திருக்கிறார். எனவே, பாகிஸ்தானைச் சிருஷ்டிப்பதற்கு அடிப்படையாக இருந்த பொய்யும் பித்தலாட்டமும் இனி எவ்வித பலனையும் அளிக்காது என்பதை லியாகத் அலி கோஷ்டியார் உணர்ந்து கொள்ளாமல், இன்னும் பாழான பழைய பாதையிலேயே போய்க்கொண்டிருப்பது வருந்தத் தக்கது.

வந்தனம்! தலைவர்களே!

சென்னை மந்திரி சபையைப் பற்றிக் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானம் வெளியாகியிருக்கிறது. அதைப் பத்திரிகைகளில் படித்ததும் "வந்தனம்! தலைவர்களே!" என்று நன்றி கூறத் தோன்றியது.

வங்காளத்தில் காங்கிரஸ் ஸ்தாபனம், மந்திரி சபை இரண்டையும் பற்றிய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் முடிவும் வெளியாகியிருக்கிறது. அதைப் படித்ததும் "இரட்டை வந்தனம்! பெரியோர்களே!" என்று கோஷிக்கத் தோன்றியது.

மிக இக்கட்டான, தர்மசங்கடமான, மனதிற்குக் கஷ்டம் தரக்கூடிய விஷயங்களைப் பற்றித் தீர்க்கமாக யோசித்து தர்ம நியாயமாகவும் நாட்டின் நன்மைக்கு உகந்த முறையிலும் காங்கிரஸ் மேலோர்கள் தீர்மானம் செய்திருக்கிறார்கள். "அத்தலைவர்கள் வாழ்க! வாழிய! வாழியரோ!" என்று முக்காலும் வாழ்த்துகிறோம்.

• • •

சென்னை மந்திரி சபை விவகாரம் இத்தகைய தென்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்.

சென்ற வருஷத்தில் மந்திரி பதவி வகித்த சிலர்மீது அவர்களுக்கு முன்னால் அப் பதவி வகித்த காங்கிரஸ்வாதிகள் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்குப் புகார்கள் செய்தார்கள். புகார் கோஷ்டியின் தலைவர் ஆந்திர கேசரி ஸ்ரீ டி. பிரகாசம் அவர்கள்.

புகார்கள் இரண்டு வகையானவை. ஒருவகைப் புகார்கள் மந்திரிகள் அரசாங்க நிர்வாகத்தில் அனுசரித்த கொள்கைகள், கையாண்ட முறைகள் –இவற்றைக் குறித்தவை.

இன்னொருவகைப் புகார்கள் மந்திரிமார்கள் தங்கள் அதிகார பதவிகளைச் சொந்த நலத்துக்கு உபயோகித்துக் கொண்டது பற்றிய ஊழல் வகையரா புகார்கள்.

இந்தப் புகார்களைப் பற்றி விசாரிப்பதற்குக் காங்கிரஸ் காரியதரிசிகளில் ஒருவரான ஸ்ரீ சங்கரராவ் தேவ் சில நாளைக்கு முன்பு சென்னைக்கு வந்திருந்தார். அவருடைய விசாரணை முறை பிடிக்காமல் ஸ்ரீ பிரகாசம் கோஷ்டியார் ஒத்துழைக்க மறுத்தார்கள்.

ஸ்ரீ சங்கர ராவின் விசாரணையினால் புகார்க் காண்டம் தீர்ந்து விடாது என்று பலரும் எதிர்பார்த்தது போலவே ஆயிற்று.

ஸ்ரீ சங்கர ராவ் தம் விசாரணையைப் பற்றிக் காரியக் கமிட்டிக்கு ஓர் அந்தரங்க அறிக்கை அனுப்பினார். அதன் முடிவில், "மேலும் விசாரணை நடத்த இடம் இருக்கிறது" என்று அவர் சிபார்சு செய்திருப்பதாகத் தெரிந்தது.

இதற்கிடையில் ஸ்ரீ சங்கர ராவ் தேவின் அந்தரங்க அறிக்கையை யாரோ ஒருவர் பகிரங்கப்படுத்தி விட்டார். அதைப் படித்துவிட்டுத் தேசமெங்கும் பலர் அழுகிறதா, சிரிக்கிறதா, இரண்டும் செய்யாமல் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போகிறதா என்று திகைத்துத் திண்டாடினார்கள்.

ஸ்ரீ சங்கர ராவின் அறிக்கையானது 'வேலிக்கு ஓணான் சாட்சி' யாகவும், 'பாம்புக்குத் தலை மீனுக்கு வால்' என்ற கதையாகவும், குதிரை யாருடையது என்பது பற்றிக் கோமுட்டி செட்டியார் சொன்ன சாட்சியைப் போலவும் இருக்கிறது. "முன்னால் பார்த்தால் நாயக்கர் குதிரை; பின்னால் பார்த்தால் சாயபு குதிரை! என்னத்தைச் சொல்வது?" என்று சங்கர ராவ் அவஸ்தைப் பட்டிருக்கிறார்.

சென்னைச் சட்டசபை அங்கத்தினர் 114 பேர் சர்க்காரிடம் மோட்டார் வண்டி பெர்மிட் பெற்றார்களாம். அவர்களில் பலர் அதை உடனே லாபத்துக்கு விற்றார்களாம்! "இந்த மாதிரி சென்னையில் மட்டுந்தான் நடந்திருக்கிறது என்று எண்ண வேண்டாம். மற்ற மாகாணங்களிலும் நடந்திருக்கிறது. காங்கிரஸ்வாதிகளுக்கு உதவி செய்வது என்ற முறையில் இப்மாதிரி 'பெர்மிட்டு'கள் கொடுத்திருக்கிறார்கள். இது தவறு என்று வைத்துக் கொண்டால் தவறுதான்; தவறில்லையென்று வைத்துக் கொண்டால் தவ

றில்லைதான்!" என்று ஸ்பஷ்டமாய் விளங்கும்படியாக பட்டைக்கு இரண்டு கீத்து என்ற ரீதியில் ஸ்ரீ சங்கர ராவ் தேவின் அறிக்கை கூறுகிறது.

மோட்டார் பெர்மிட் இருந்த காலத்தில் சில பெரிய ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்கள் கார்கள் வாங்கி விற்றுப் பணம் பண்ணினார்கள் என்ற புகார் எழுந்தது. ஆனால் அதைப் பற்றி நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எப்படி நடவடிக்கை எடுக்க முடியும், எம். எல். ஏ.க்களின் இலட்சணம் இப்படியிருக்கும் போது? "உங்கள் எம்.எல்.ஏ.க்களின் விஷயம் என்ன?" என்று அந்த ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்கள் திருப்பிக் கேட்பார்கள் அல்லவா?

கஷ்டப்பட்ட காங்கிரஸ்காரர்களுக்கு உதவி செய்ய வேண்டியதுதான் என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் அதற்கு வேறு நேர்மையான முறைகளைக் கையாண்டிருக்க வேண்டும். பெர்மிட் முறையினால் அதிகார வர்க்கத்தில் புகுந்துள்ள ஊழல்களைப் பற்றி மக்கள் புலம்பிக் கொண்டிருக்கும் போது எம்.எல்.ஏ.க்கள் அதே முறையினால் லாபம் அடையப் பார்த்தால் ஊழலை எப்படிப் போக்கமுடியும்?

கனம் கோபால் ரெட்டிமீது சொல்லப்பட்ட பத்து லட்சம் ரூபாய் கடன் கொடுத்த புகாரைப் பற்றியும் ஸ்ரீ சங்கர ராவின் அறிக்கை மேற்படி மேற்படியாகத்தான் இருக்கிறது.

"ஒரு காங்கிரஸ்காரர் மந்திரியாயிருப்பதற்காக அவருடைய உறவினர்கள் பெருவாரியாக உள்ள கம்பெனிக்குச் சர்க்கார் கடன் கொடுப்பது தவறாகுமா? காங்கிரஸ்காரர்களிடம் இவ்வளவு உன்னதமான நடவடிக்கையை எதிர்பார்க்க முடியுமா என்பது கேள்வி. என்னைக் கேட்டால், அத்தகைய உன்னதமான நடவடிக்கை வேண்டும் என்றுதான் சொல்வேன். மற்றவர்கள் என்ன அபிப்பிராயப்படுவார்களோ தெரியாது. எல்லாவற்றுக்கும் இதைப் பற்றி மேலும் விசாரணை நடத்துவது நல்லது!" என்று மிக மிகத் தெளிவாகப் பிரச்னைகளை எடுத்துச் சொல்லிக் குட்டை குழப்பியிருக்கிறார் ஸ்ரீ சங்கரராவ் தேவ்.

இனிமேல் புகார் என்று எங்கே கிளம்பினாலும் ஸ்ரீ சங்கர ராவையே விசாரிக்க அனுப்புவது என்று வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி வைத்துக் கொண்டால் எப்பேர்ப்பட்ட புகார் ஆனாலும் சங்கர ராவுக்குப் பயந்து தூக்குப் போட்டுக்கொண்டு செத்துவிடும்! செத்தாலும் விடாமல் அவற்றைத் தொடர்ந்து கொண்டே போக ஸ்ரீ டி. பிரகாசத்தைப் போன்ற விடாக்கண்டர்கள் எல்லா இடங்களிலும் இருக்கமாட்டார்கள் அல்லவா?

சங்கர ராவின் அறிக்கை நமது காரியக் கமிட்டித் தலைவர்களையும் ஒரு மாதிரி திணறச் செய்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆகையினாலேயே அவர்கள் நமது பிரதமர் கனம் குமாரசாமி ராஜாவிடம் மேற்படி புகார்களைப் பற்றி மீண்டும் விசாரித்து அறிக்கை அனுப்பும் கடமையை ஒப்புவித்திருக்கிறார்கள். மறுபடியும் குளறல் ஏற்பட இடமில்லாதபடி ஸ்ரீ டி. பிரகாசம் காருவையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு ஆராயும்படி சொல்லியிருக்கிறார்கள்.

கனம் குமாரசாமி ராஜா அறிக்கை அனுப்பியதும் முடிவான தீர்ப்புச் சொல்லவேண்டிய பொறுப்பை நேரு. படேல், பிரசாத் ஆகிய மும்மூர்த்திகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

இவ்வாறாக, விஷயம் நமது தலைவர்களுக்குள்ளே மேலான தலைவர்களிடம் போகப் போகிறது. அவர்களுடைய முடிவு எதுவானாலும் அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப் பொது மக்கள் சித்தமாயிருக்க வேண்டும். அதற்குப் பிறகும் விவாதத்தை வளர்த்திக் கொண்டிருப்பதில் உபயோகம் இல்லை; தீமை அதிகம் உண்டு.

• • •

கனம் குமாரசாமி ராஜா இந்த விஷயத்தில் மிக நல்ல முறையில் நடந்து கொண்டிருப்பதைப் பெரிதும் பாராட்டுகிறோம். முன்னாலேயே ஒருதலைச் சார்பாகப் பேசி 'எக்ஸ் பார்ட்டி' தீர்ப்புக் கூறிவிடவில்லை. அதே சமயத்தில் 'மாகாணத்தின் பிரதமர்' என்ற முறையில் தமது பதவியின் கௌரவத்தை அழுத்தமாக நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார். அவருடைய முடிவான அறிக்கை பாரபட்சமில்லாத நேர்மைக்கு எடுத்துக் காட்டாயிருக்கும் என்று நம்புகிறோம்.

மொத்தத்தில் சென்னை மந்திரிகளைப் பற்றிப் புகார்கள் எழுந்ததிலிருந்து, ஏற்கெனவே சீர்கெட்டிருந்த சென்னை மாகாணத்தின் கீர்த்தி மேலும் கேட்டை அடைந்திருக்கிறது. மந்திரிகளைப் பற்றிய விசாரணை, புனர் விசாரணை முதலியவற்றினால் நமது

மாகாண சர்க்காரின் கௌரவம் பெரிதும் பங்கம் அடைந்திருக்கிறது. சீக்கிரம் இதற்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும்.

சென்னை அரசியல் சீர்கேட்டைப் பற்றிக் கனம் குமாரஸ்வாமி ராஜா கூறியுள்ள இன்னொரு விஷயம் கவனிப்பதற்குரியது. ஆந்திர காங்கிரஸ் வாதிகளுக்குள்ளேயும் எம். எல். ஏ.க்களுக்குள்ளேயும் கட்சிப் பிளவு பலமாக இருந்து வருகிறது. புகார்கள் எதிர்ப் புகார்கள், நிந்தனைகள், வசை மொழிகள் எல்லாவற்றுக்கும் மேற்படி கட்சிப் பிளவுதான் காரணம். தற்சமயம் தமிழ் நாட்டில் அத்தகைய பிளவு, வேற்றுமை, துவேஷம் ஒன்றும் கிடையாது. ஆந்திரர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டால் சென்னை மாகாணத்தின் நல்ல பெயரைக் காப்பாற்றி விடலாம். — இவ்வாறு நம் பிரதமர் ராஜா கூறுகிறார். தமிழ் நாட்டைக் குறித்து இந்த நல்ல செய்தியைக் கேட்க நமக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. இந்த நல்ல நிலைமை என்றும் நீடித்திருக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்வோமாக.

* * *

சென்னை மாகாணத்தைக் காட்டிலும் வங்காளம் அறிவுத் திறமையில் ஒரு படி மேலானது. அது காரணமாகவே சென்னை நிலைமையைக் காட்டிலும் வங்காளத்தின் நிலைமை அதிக மோசமாகி யிருக்கிறது.

கல்கத்தாவில் நடந்த உப தேர்தலில் காங்கிரஸ் தோல்வி அடைந்தது. உடனே மேற்கு வங்காளப் பிரதமர் டாக்டர் பி. ஸி. ராய் ஆகாச விமானம் ஏறி ஸ்விட்ஸர்லாந்து தேசத்துக்குப் போய்விட்டார். அங்கிருந்தபடி அவ்வப்போது தமது அபிப்பிராயத்தை மட்டும் தெரிவித்துக் கொண்டு வருகிறார். வங்காள காங்கிரஸ் வாதிகளுக்குள் சமரசத்தை உண்டு பண்ண அகில இந்தியத் தலைவர்கள் செய்த முயற்சி ஒன்றும் பலிக்கவில்லை.

எனவே, காரியக்கமிட்டியார் மேற்கு வங்காளத்தில் பொதுத் தேர்தல் நடத்தியே தீரவேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதற்கிடையில் மேற்கு வங்காள மந்திரி சபையையும் மாகாண காங்கிரஸ் கமிட்டியையும் திருத்தி அமைக்க வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

தேச விடுதலைப் போராட்டத்தில் எப்போதும் முன்னணியில் நின்றுவந்திருக்கும் வங்காளம் இந்த நிலைமைக்கு வந்திருப்பதைப் பார்த்து யாரும் துயரப் படாமல் இருக்க முடியாது.

இதற்கிடையில், ஐரோப்பா சென்றிருந்த ஸ்ரீ சரத் போஸ் திரும்பி வந்து விட்டார். வங்காளத்தில் பொதுத் தேர்தல் வரப்போகும் விஷயம் அவருக்குக் குதூகலத்தை அளித்திருக்கிறது. "காங்கிரஸ் தோல்வி நிச்சயம்" என்று அவர் தோள் கொட்டுகிறார்.

வங்காளக் காங்கிரஸ் வாதிகளுக்கு இது ஒரு எச்சரிக்கையாகப் பயன்படும் என்று நம்புகிறோம். தங்களுக்குள் அவர்கள் உடனடியாக ஒற்றுமை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அது மட்டும் போதாது; அப்பழுக்கில்லாத தூய்மையையும் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

"அவ்வளவு உயர்ந்த ஒழுக்கத்தையும் தன்னலமற்ற தியாக நெறியையும் காங்கிரஸ்வாதிகளிடையில் எதிர்பார்க்க முடியுமா? எதிர்பார்ப்பது நியாயமா?" என்று ஸ்ரீ சங்கர ராவ் தேவ் தம் அறிக்கையில் கேட்டிருக்கிறார் அல்லவா? இந்தக் கேள்வியானது காங்கிரஸ் மந்திரிகளின்மீது சொல்லப்பட்டுள்ள எல்லாப் புகார்களையும்விட அதிக அபகீர்த்தியைக் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு அளித்து விட்டிருக்கிறது.

காந்தி மகாத்மா இருபத்தேழு வருஷ காலம் தலைமை வகித்து நடத்திய காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களிடம் அவ்வளவு உயர்ந்த ஒழுக்கத்தை எதிர்பார்ப்பது பொது ஜனங்களுக்கு வழக்கமாகி விட்டது.

சுதந்திரப் போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் காங்கிரஸ் வாதிகள் எப்படித் தூய்மைக்கும் தன்னலத் தியாகத்துக்கும் பெயர் பெற்று விளங்கினார்களோ, அதேமாதிரி மறுபடியும் அவர்கள் ஆக வேண்டும். தத்தம் மனச் சாட்சிக்கு ஒப்பத் தூய்மையுடன் நடந்து கொண்டால் மட்டும் போதாது. பொது மக்களிடையில் சந்தேகம் தோன்றுவதற்கே இடமில்லாத படியும் நடந்துகொள்ள வேண்டும்.

அப்போதுதான் அவர்கள் முன்னர் செய்த தியாகங்கள், தொண்டுகள் எல்லாம் பலனுள்ளவையாகும். தேசமும் முன்னேற்றம் அடையும்.

ஒன்பதாம் ஆண்டு

அன்பார்ந்த 'கல்கி' நேயர்களுக்கு வணக்கம். இவ்விடம் யாவரும் க்ஷேமம். அவ்விடத்து க்ஷேமாதிசயங்களுக்குப் பதில் எழுதவேணும். தபால் கார்டு விலை அதிகமாகிவிட்டதே என்று தோன்றினால் தந்திமூலம் தெரிவியுங்கள். மனத் தந்தியைத்தான் சொல்லுகிறோம்.

எட்டு வருஷத்துக்கு முன்னால் உங்கள் "கல்கி" பத்திரிகை பிரமாதமான தடபுடல்களுக்கு மத்தியில் உதயமாயிற்று. தடபுடல்கள் எல்லாம் எழும்பூர் எஸ். ஐ. ஆர். ரயில்வே ஸ்டேஷனில் வண்டிகள் வந்து புறப்பட்டதனால் ஏற்பட்டவை. எழும்பூரில் எஸ். ஐ. ஆர். ரயில்வே ஸ்டேஷனும் கல்கி காரியாலயமும் சேர்ந்திருக்க முடியாது என்று விரைவிலேயே தெரிய வந்தது. எஸ். ஐ. ஆர். ஸ்டேஷன் அங்கிருந்து கிளம்ப மறுத்தபடியால் "கல்கி" காரியாலயம் கீழ்ப்பாக்கத்துக்கு வந்தது. அதற்குப் பிறகு கீழ்ப்பாக்கத்தின் பிரபலம் முன்னைக் காட்டிலும் மிக்க அதிகமாகியிருப்பதை அனைவரும் அறிவார்கள். நிற்க.

சென்ற எட்டு ஆண்டுகளிலும் "கல்கி' தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் இடைவிடாது தொண்டு செய்து வந்திருக்கிறது. அரசியல் துறையிலும் இலக்கியத் துறையிலும் பணி ஆற்றியிருக்கிறது. கலைகளை வளர்த்துக் கவலைகளைப் போக்க முயன்று வந்திருக்கிறது. உண்மை என்று தோன்றுவதைச் சொல்ல வேண்டும் என்னும் நிர்ப்பந்தத்தைத் தானே ஏற்படுத்திக் கொண்டு அதன் காரணமாகப் பல கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. பல பெரிய மனிதர்களுடைய மனஸ்தாபங்களுக்கும் ஆளாகியிருக்கிறது.

மனிதர்கள் யாராயிருந்தாலும் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் அவர்களிடத்தில் சொந்த முறையில் 'கல்கி' பத்திரிகைக்கு விருப்போ, வெறுப்போ என்றும் கிடையாது. பொது வாழ்க்கையில் மனிதர்கள் சொல்லும் வார்த்தையும் அவர்கள் செய்யும் காரியமுந்தான் நமக்கு முக்கியமானவை; நம்முடைய கவனத்துக்கு உரியவை. நேற்று ஒருவர் பொது வாழ்க்கையில் தவறான காரியம் செய்தால் அதை எடுத்துக் காட்டத் தயங்கியதில்லை. இன்றைக்கு அதே மனிதர் பொது நன்மைக்குகந்த காரியம் செய்தால் அதைப் பாராட்டத் தயங்கியதுமில்லை. இந்தப் பத்திரிகை தர்மத்தை அறிந்து கொள்ள முடியாதவர்கள் ஏதாவது உளறிக் கொட்டுவார்களே என்று கவலைப்பட்டதுமில்லை.

அன்றைக்கு ஒரு சங்கீத வித்வான் நன்றாகப் பாடினார்; அதைப் பாராட்டி மகிழ்ந்தோம். இன்றைக்கு அவருடைய சாரீர வசதி குறைந்து நன்றாய்ப் பாடவில்லையென்றால், அவருடைய பாட்டை நாம் பாராட்ட முடியவில்லை.

இவ்விதமாகவே நேற்று ஒரு அரசியல் தலைவர் நாட்டுக்குப் பாதகமான வழி காட்டினார்; அது தவறு என்று எடுத்துச் சொன்னோம். இன்று அவரே நாட்டுக்கு நல்ல வழி காட்டினால் அதை மகிழ்ந்து பாராட்டுகிறோம். ராகத் துவேஷங்களினால் மனதைக் கெடுத்துக் கொண்டவர்கள் இந்த வேற்றுமையைத் தெரிந்து கொள்ள முடியாமல் திண்டாடினால், அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

உண்மையே வழிபடு தெய்வமாகவும் பொது மக்களின் நன்மையே தனிப் பெரும் இலட்சியமாகவும் நேயர்களின் அபிமானமே இணையற்ற லாபமாகவும் கொண்டு "கல்கி"யைத் தொடர்ந்து நடத்தும் ஆற்றலை அருள வேண்டுமென்று இறைவனிடம் தவங்கிடக்கிறோம்.

சென்ற எட்டு ஆண்டுகளில் தமிழ் மக்கள் "கல்கி" பத்திரிகைக்கு அளித்திருக்கும் ஆதரவு ஒப்புவமை இல்லாதது. சென்ற எட்டாவது ஆண்டில் அந்த ஆதரவின் உன்னத சிகரத்தைக் "கல்கி" அடைந்தது. இந்த அபிமானத்துக்கும் ஆதரவுக்கும் தமிழ் மக்களிடம் என்றென்றைக்கும் நன்றியுடையவர்களாயிருப்போம். அவர்களுக்கு மேலும் மேலும் தொண்டு செய்யும் வழிகளைத் தேடிக்கொண்டேயிருப்போம்.

• • •

நமது இந்த இதழின் அட்டைப் படம் "கல்கி"யின் எட்டாவது ஆண்டு பூர்த்தியையும் ஒன்பதாவது ஆண்டின் பிறப்பையும் குறிப்பிடுகிறது. "இந்தப் பாரில் என்னுளமோர் கன்னிகை யென்னப் பயின்றிடும்" தமிழ் அரசி எட்டு மலர்களைப் பறித்துக் குடத்தை அலங்கரித்து விட்டாள். ஒன்பதாவது மலர் அவள் திருக்கரத்தில் மிளிர்கின்றது.

புந்தம் புதுமலர்கள் பூக்குமே வண்டினங்கள்
சிந்தும் மகிழ்ந்துன்னைச் சேருமே—நித்தமும்
பல்கி வளரும் பசுந்தமிழ்ச் சோலையாம்
'கல்கி' படர்ந்து வருங்கால்!

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

சில கல்விப் பிரச்னைகள்

அதிசயம்—ஆனால் உண்மை!

மாஜி கல்வி மந்திரி ஸ்ரீ டி. எஸ். அவினாசிலிங்கம் ரேடியோவில் பரீட்சையைப் பற்றி ஒரு ரஸமான பிரசங்கம் செய்தார். "பரீட்சை வேண்டாம் என்று சொல்கிறவர்கள் அதற்குப் பதில் ஏற்பாடு ஒன்றும் சொல்லுவதில்லை" என்பதாகக் குறைப்பட்டார். குறைப்பட்ட பின்னர், பரீட்சை முறையின் மேன்மையை விளக்குவதற்கு ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறினார். வேறு யாராவது சொல்லியிருந்தால் நாம் அதைக் 'கட்டுக்கதை' என்றே எண்ணியிருப்போம். மாஜி கல்வி மந்திரிக்கு அத்தகைய அபூர்வ 'கற்பனா சக்தி' கிடையாது என்பது நமக்குத் தெரியும். ஆகையால் அவர் கூறிய சம்பவத்தை நாம் உண்மை என்றே நம்புகிறோம். அவர் கூறிய உண்மைச் சம்பவம் இதுதான்:—

ஒரு பரீட்சைக்குக் கேள்வித்தாள்களைத் தயார் செய்த பரீட்சகர் அந்தக் கேள்விகளுக்குத் தாமே சரியான விடைகள் எழுதினார். சரியான விடைகள் (அதாவது 100-க்கு 100 மார்க்குப் பெற வேண்டிய விடைகள்) இப்படியிருக்க வேண்டும் என்று திருத்துகிறவர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவே எழுதினார். அவர் எழுதிய 'மாடல்' விடைத்தாள் மற்ற மாணவர்களின் விடைத்தாள்களுடன் எப்படியோ கலந்து விட்டது. பரீட்சகர் எழுதிய அந்த 'மாடல்' விடைத்தாளும் திருத்தப் பட்டது. மார்க்குப் போடப்பட்டது. பரீட்சகர் விடைகளுக்கு எவ்வளவு மார்க்குக் கிடைத்தது என்கிறீர்கள்? 100க்கு 100 கிடைத்ததா? 90 கிடைத்ததா? அறுபது மார்க்காவது கிடைத்ததா? இல்லவே இல்லை. பரீட்சை தேறுவதற்கு அத்யாவசியமான 35 மார்க்குத்தான் அதற்குக் கிடைத்தது!

இந்த 'அதிசயம் ஆனால் உண்மை'ச் சம்பவத்தைக் கூறிவிட்டு அதே பேச்சில் நம் மாஜி கல்வி மந்திரி "பரீட்சைக்குப் பதில் என்ன?" என்று கேட்பதுதான் வேடிக்கையாயிருக்கிறது. மூழு மூடத் தனத்துக்குப் பதில் வேறு கேடா? பரீட்சைக் கேள்விகளைத் தயாரித்த நிபுணர் தாம் எழுதிய 'மாடல்' விடைத் தாளுக்கு 100க்கு 35 மார்க்குத்தான் வாங்கினார். அவர் பரீட்சை ஹாலில் உட்கார்ந்து பதை பதைத்துக்கொண்டு விடை எழுதவில்லை; கடிகாரத்தைப்பார்த்துக்கொண்டு எழுதவில்லை; 'என் வருங்கால வாழ்வு இந்தக் கேள்விகளுக்கு விடை எழுதுவதைப் பொறுத்திருக்கிறது' என்ற பீதியோடு எழுதவில்லை. ஞாபகத்திலிருந்து கூட எழுதவில்லை. பக்கத்தில் பாட புத்தகங்களை வைத்துக் கொண்டு 'மாடல்' விடைகளை எழுதினார். அவருக்கு 100க்கு 35 மார்க்தான் கிடைத்தது! இத்தகைய பரீட்சை முறையை ஒழிக்க வேண்டும் என்று சொன்னால், 'பரீட்சைக்குப் பதில் என்ன?' என்று கேட்பது? இத்தகைய பரீட்சை முறையை ஏற்படுத்தியவர்கள், நடத்தி வருகிறவர்கள், நடத்துவதற்கு உடந்தையா யிருப்பவர்கள்—அவ்வளவு பேரையும் தூக்கிலே போடாவிட்டாலும் பதினாறு வருஷம் ஆயுள் தண்டனையாவது அவர்களுக்கு விதிக்க வேண்டாமா?

பரீட்சை முறையின் சீர்கேட்டை எடுத்துக் காட்டுவதுதான் எங்கள் கடமை. அது மிகக் கேடான முறை என்பதை நீங்கள் கூறிய உண்மைச் சம்பவத்தினால் நிரூபித்து விட்டீர்கள். அதை நிவர்த்தி செய்வது அரசாங்கத்தாரின் பொறுப்பு. 'பரீட்சைக்குப் பதில்' கண்டு பிடிக்க வேண்டியதும் சர்க்காருடைய பொறுப்புத்தான். அதற்குச் சக்தி இல்லா விட்டால் கடையைக் கட்டிக் கொண்டு வீட்டுக்குப் போகட்டும்.

ஒரு மார்க்குக் குறைவு

பரீட்சை ஏற்பாடு மோசமானது. அதில் ஒரு மார்க்குக் குறைவினால் பிள்ளைகளைப் 'பெயில்' ஆக்குவதோ கொடுமையிலும் கொடுமையானது.

இந்த அநீதியைப் பற்றிப் பலர் ஏற்கெனவே நம் வட்டமேஜைப் பகுதியில் எழுதியிருக்கிறார்கள். அதற்கு 'எதிர் வாதம் ஒன்றும் இருக்கத்தான் செய்கிறது. அந்த எதிர் வாதத்தையும் வட்டமேஜையில் ஒருவர் வெளியிட்டிருக்கிறார்.

குறைந்த பட்ச மார்க்கை எவ்வளவு குறைவாக வைத்தாலும் அப்போதும் சில மாணாக்கர்கள் ஒரு மார்க்குக்

ரா. கி

குறைவாக வாங்கக் கூடும். 35-க்கு ஒரு மார்க்குக் குறைவாக 34 மார்க் வாங்கியவன் பாஸ் என்றால், 33 மார்க் வாங்கினவனை என்ன செய்வது? 34-க்கு 33 ஒரு மார்க்குத்தானே குறைவு? 33 மார்க்கு வாங்கினவனைப் 'பாஸ்' ஆக்கினால், 32 மார்க்கின் கதி என்னவது?

இந்தப் பரீட்சை முறை இப்படியே இருக்கிற வரையில் ஒரு மார்க்கில் 'பெயில்' ஆவதைப் பற்றிக் குறைப்பட்டு என்ன பயன்? அதை எப்படித் தடுக்க முடியும்?—என்பது எதிர்வாதம்.

இந்தப் பரீட்சை முறையை வைத்துக் கொண்டே இம்மாதிரி ஒரு மார்க்குக் குறைவினால் மாணாக்கர்கள் இருதயம் உடைந்து போகாதபடி தடுக்கலாம் என்று நாம் கருதுகிறோம். குறைந்த பட்சம் பாஸ் மார்க் 35 என்று வைத்துக் கொள்வோம். 35 மார்க்கு ஒரு பிள்ளைக்குக் கிடைக்கவில்லையென்றால் அடுத்த படியாகக் கீழே 30 மார்க்குத்தான் கொடுக்க வேண்டும். 34 முதல் 31 வரை கொடுக்கக் கூடாது. எதற்காக அப்படி ஒன்று குறைவாகக் கொடுக்க வேண்டும்? விடைகளுக்குத் தராசு வைத்து எடை போட்டு மார்க்குக் கொடுக்கிறீர்களா? தங்கத்தை நிறை போடுவது போல் விடைகளை நிறை போட முடியுமா? அது அவசியமா? ஒரு பையன் பாஸாக்குத் தகுதியில்லையென்று கருதினால் பாஸ் மார்க்குக்கு ஐந்து மார்க்குக் குறைவாகவே போட்டுத் தொலைக்கிறது தானே? ஒரு மார்க்குக் குறைத்துப் போட்டு இளம் பிள்ளைகளைச் சித்திரவதை செய்வானேன்? பாவத்தையும் பழியையும் சுமப்பானேன்?

இன்றியமையாத கல்வி

“ஆதாரக் கல்வி” என்பது ஒன்று இப்போது பலரிடம் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறது. காந்தி பக்தர்களிடம் அது அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்திய சர்க்காரிடமும் மாகாண சர்க்கார்களிடமும் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. “ஆதாரக் கல்வியைப் புகுத்தப் போகிறோம்” என்று வாக்குச் சொல்லிக் கொண்டு, அரசாங்கத்தார் முக்கியமான கல்விச் சீர்திருத்தங்களைச் செய்யாமல் தள்ளிப் போடுகிறார்கள்.

“ஆதாரக் கல்வி என்பது என்ன?” என்பதைச் சரியாக அறிந்தவர் இந்தியாவில் ஒரே ஒருவர்தான் இருந்தார்: அந்த மகா புருஷர் காலமாகிவிட்டார்!

அடுத்தபடியாக 'ஆதாரக் கல்வி'யைப் பற்றி அறிந்தவர்கள் இப்போது இந்தியாவில் ஐந்நூறு பேர் உண்டு. ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் 'ஆதாரக் கல்வி'க்குச் சொல்லும் வியாக்யானம் ஒவ்வொரு விதமாக இருக்கும்!

இந்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் தேசம் முழுவதும் ஆதாரக் கல்வித் திட்டத்தைப் புகுத்தப் போகிறோம் என்று நம்மைப் பயமுறுத்துகிறார்கள். ஆனால் அது ஒருநாளும் நடக்காத காரியம் என்று நாம் உறுதி கூறுகிறோம். பதினைந்து வருஷத் திட்டம் போடலாம், பொது மக்களின் பணத்திலிருந்து கோடி கோடியாக எடுத்துச் செலவு செய்யலாம். ஆனால் திட்டம் நிறைவேறாது. பயனும் விளையாது. ஆதாரக் கல்வித் திட்டத்தைத் தேச முழுவதும் ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்களில் நடத்துவதற்குப் போதுமான தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் கிடைக்கமாட்டார்கள். “ஒரு வேலைக்கும் லாயக்கில்லாதவர்கள் ஆரம்ப ஆசிரியர்களாகிறார்கள்” என்று இருக்கும் நிலையில், ஆதாரக் கல்வித் திட்டத்தை அறிந்து நடத்திவைக்கக் கூடிய ஆசிரியர்கள் ஆயிரக் கணக்கில் எப்படிக் கிடைப்பார்கள்? அப்படிப்பட்ட ஆசிரியர்களை ஆலையில் உற்பத்திசெய்துவிட முடியுமா?

ஒரு பக்கத்தில் ஆதாரக் கல்வித் திட்டம் என்ற பெயரால் கோடிக்கணக்கான பணத்தை வாரிக் கொட்டிக்கொண்டிருப்பார்கள். இன்னொரு பக்கத்தில் லட்சக்கணக்கான குழந்தைகள் கல்வியறிவு இல்லாமலே வளர்ந்து கொண்டிருக்கும்.

காங்கிரஸ் சர்க்கார்—பொது ஜன சர்க்கார்—செய்யக்கூடிய காரியம், செய்யக் கடமைப்பட்டுள்ள காரியம் ஒன்றே ஒன்றுதான். நாட்டில் ஐந்து வயதுக்கு மேல் பன்னிரண்டு வயது வரை உள்ள அத்தனை குழந்தைகளுக்கும் ஆரம்பப் படிப்புச் சொல்லித்தர வேண்டும். அதாவது எல்லாக் குழந்தைகளுக்கும் எண்ணும் எழுத்தும் கற்பிக்க வேண்டும். இப்போதைக்கு அதுவே போதும். அதுதான் சாத்தியம். கூட்டல், கழித்தல், பெருக்கல் வகுத்தல் ரூபாய் அணா பைசா, பாரம் மணங்கு வீசை, மைல் பர்லாங்கு கஜம்—இவ்வளவு கணக்கு எல்லாப் பிள்ளைகளுக்கும் தெரிய வேண்டும். சாதாரண தமிழ்ப் புத்தகம் எதை எடுத்தாலும் படிப்பதற்கு வேண்டிய எழுத்தறிவு வேண்டும். நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இந்தக் குறைந்த அளவு கல்விப் பயிற்சி கட்டாயமாக அளிக்கப்படவேண்டும். இதுதான் உண்மையான ஆதாரக் கல்வி. இந்த ஆதாரக் கல்வியாகிய அஸ்திவாரத்தின் பேரில்தான் மற்ற

எல்லாக் கல்வி மாளிகைகளையும் கட்ட வேண்டும். எண்ணும் எழுத்துமாகிய இந்த ஆதாரக் கல்வியை நாட்டிலுள்ள எல்லா ஆண் பெண் குழந்தைகளுக்கும் கட்டாயமாக அளிக்க வேண்டும்; அளித்தே தீர வேண்டும்.

ஒரு வேளை பள்ளிக்கூடம்
இரண்டரை மணி வகுப்பு

என்னும் ஏற்பாட்டின் மூலமாகத்தான் இது உடனடியாகச் சாத்தியமாகக் கூடும்.

இப்போதுள்ள ஏற்பாட்டின்படி சென்னை மாகாணத்தில் 35 லட்சம் குழந்தைகள் பள்ளிக்கூடத்து நிழலிலேயே ஒதுங்காமல், எண்ணும் எழுத்தும் அறியாமல், நிரட்சர குட்சிகளாகவே வளர்ந்து கொண்டு வருகிறார்கள். நாளைக்கு இவர்களுந்தான் சுதந்திர இந்தியாவின் வயது வந்த பிரஜைகளாகி, வோட்டுக் கொடுத்தாக வேண்டும்!

மற்ற 35 லட்சம் குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்குப் போகிறார்கள். தினம் ஐந்து மணி நேரத்துக்கு மேல் பள்ளிக்கூடச் சிறைக்குள் அடைபட்டிருக்கிறார்கள். ஆனால் எல்லாரும் படித்துப் பயன் அடைகிறார்களா என்றால், அதுவும் இல்லை! பள்ளிக்கூடத்தில் சேர்கிற குழந்தைகளில் 100-க்கு 29 பேர்தான் ஐந்தாவது வகுப்புக்கு வருகிறார்களாம். பாக்கி 71 பேரும் நடுவில் நின்று படித்ததையும் மறந்து எழுத்தறிவு இல்லாதவர்களாகவே போய்விடுகிறார்களாம்! அழகாயிருக்கிறதல்லவா? அதாவது இப்போது சென்னை சர்க்கார் ஆரம்பக் கல்விக்குச் செலவு செய்யும் ஏழு கோடி ரூபாயில் ஐந்து கோடி ரூபாய் படு தண்டமாய்ப் போகிறது! இதற்குப் பரிகாரம் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. நாம் சொல்லும் திட்டத்தின்படி இந்த ஐந்து கோடி ரூபாய் படு தண்டமாகப் போகாது. அதற்கு மாறாக இப்போதைப் போல் இரண்டத்தனை குழந்தைகள் இன்றியமையாத கல்வியைப் பெற்றுப் பயனடைவார்கள்.

தண்டச் செலவு வேண்டாம்!

“வகுப்பு நேரத்தைக் குறைக்காமல் ஐந்து மணியாகவே வைத்துக் கொண்டு பள்ளிக்கூடங்களிலேயே தொழிற் கல்வியையும் சொல்லிக் கொடுக்கலாமே?” என்ற யோசனை ஒன்று இருக்கவே இருக்கிறது. சில ஹைஸ்கூல்களில் இப்போது தொழிற்கல்வி வகுப்புகள் நடத்துகிறார்கள்! இந்த வகுப்புகள் வெறும் கேலிக்கூத்து! ஆயிரம் மாணாக்கர்கள் படிக்கும் பள்ளிக்கூடத்தில் ஒரு சாத்தல்லா அறையில் நாலு கைத்தறிகள் இருக்கும். பிள்ளைகள் நெசவு கற்றுக் கொள்வார்கள். சில பிள்ளைகளுக்குக் கால் கீழே எட்டாது. சும்மா நின்றுவிட்டு அல்லது உட்கார்ந்திருந்துவிட்டுத் திரும்புவார்கள். சிலர் நெசவு கற்றுக் கொள்ள ஆரம்பித்துப் பாவு நூலை அறுத்துச் சிக்கலாக்கி விடுவார்கள். அப்புறம் பத்து நாளைக்கு நெசவு வகுப்பு நடைபெறாது!

சாதாரணப் பள்ளிக்கூடங்களில் கைத்தொழிலும் கற்றுக் கொடுப்பதென்பது நடவாத காரியம். அதற்கு வேண்டிய வசதிகளும் தொழிற் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் தற்சமயம் இல்லை. சமீபத்தில் கிடைப்பதும் துர்லபம்.

இரண்டரை மணி வகுப்பு நடத்தி நீங்கள் பிள்ளைகளை விட்டு விடுங்கள். அவரவர்களுடைய இயற்கைக்கும் தேவைக்கும் வசதிக்கும் இணங்கப் பிள்ளைகள் வேறிடங்களில் தொழில் கற்றுக் கொள்வார்கள். பெற்றோர்களிடமாவது அண்டை அயலாரிடமாவது கற்றுக்கொள்வார்கள். வயல்களில் வேலை செய்து கற்றுக்கொள்வார்கள். சிலர் தொழிற் கல்விக்காகவே ஏற்பட்ட பள்ளிக்கூடங்களில் சேர்ந்து கற்றுக் கொள்வார்கள். தற்போதைக்கு எழுத்துக் கல்வியையும் தொழிற் கல்வியையும் சேர்த்துக் குழப்ப வேண்டாம்.

எழுபது லட்சம் குழந்தைகளுக்கு இன்றியமையாத எண்ணும் எழுத்தும் கற்பிப்பதுடன் சர்க்கார் கடமையைத் தீர்த்துக் கொள்ளுங்கள். குழந்தைகள் தங்கள் பெற்றோர்களிடமும் மற்றவர்களிடமும் பணச் செலவின்றிக் கற்றுக் கொள்ளக் கூடிய கைத்தொழிற் பயிற்சிக்காகக் கோடிக் கணக்கான பணத்தைத் தண்டச்செலவு செய்யவேண்டாம்!

இலட்சிய ஸ்தாபனங்கள்

இந்த நாட்டில் சுயநலமற்ற பொது நலத் தொண்டர்கள் பலர் இருக்கிறார்கள். பரோபகார சீலர்கள் இருக்கிறார்கள். இவர்கள் குருகுலங்களும் வித்யாலயங்களும் ஆசிரமங்களும் வைத்து நடத்துகிறார்கள். இவர்களை நாம் போற்றி வணங்குகிறோம். ஆதாரக் கல்வி முறை முதலிய பரிசோதனைகளை இத்தகைய ஸ்தாபனங்கள் நடத்தட்டும்; இவர்களுக்குச் சர்க்கார் நன்கொடை கொடுப்பதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

எல்லாத் தேசங்களிலும் அரசாங்கத்தினால் நடத்தப் படும் பள்ளிக்கூடங்கள் சமுதாயத்தில் சகலருக்கும் அத்யாவசியமான கல்வியைப் போதிப்பனவாயிருக்கும். இலட்சிய முறையில் கல்வியை வளர்க்கும் ஸ்தாபனங்கள் தனிப்

பட்டவர்களால் தனியாகவே நடத்தப்படும். இலட்சியக் கல்வி ஸ்தாபனங்களின் செல்வாக்கு நாடு முழுதும் பரவி நாளடைவில் அதன் பயனை எல்லாரும் அடைவார்கள். இத்தகைய இலட்சியக் கல்வி ஸ்தாபனங்கள் நம் நாட்டிலும் பரவிப் பெருகிச் செழிக்கட்டும். ஆனால் அத்தகைய இலட்சியக்கல்விக் கழகங்களை அரசாங்கத்தார் நடத்த முடியாது; தற்போதைய நிலையில் நம் நாட்டு சர்க்கார் நடத்த முயற்சிக்கவும் கூடாது. ஆயிரம் குழந்தைகளை எழுத்தறிவே இல்லாத குருடர்களாக விட்டு விட்டு ஒரு நூறு பிள்ளைகளின் படிப்புக்கு எல்லாப் பணத்தையும் சர்க்கார் ஏன் செலவு செய்ய வேண்டும்? அப்புறம் "பணம் இல்லை; பணம் இல்லை!" என்று எதற்காகக் கதற வேண்டும்? ஏழை மக்கள் தலையில் புதிய புதிய வரிகளை ஏன் திணிப்பதற்கு முயல வேண்டும்?

ஆனந்தம் உண்டா?

நம் நாட்டிலுள்ள குருகுலங்கள், வித்தியாலயங்கள், ஆசிரமங்கள் பலவும் சிறந்த பணியாற்றி வருகின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவற்றில் பொதுவாக உள்ள ஒரு குறையையும் சொல்ல வேண்டியிருக்கிறது. சர்க்காரிடம் கிராண்ட் வாங்குவதற்காக இந்த ஸ்தாபனங்களில் சர்க்கார் பாட திட்டத்தைக் கண்டிப்பாக அநுசரிக்க வேண்டியிருக்கிறது; அதாவது அபத்தக் களஞ்சியங்களைப் பிள்ளைகளின் மூளையில் திணிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் சர்க்கார் கல்வித் திட்டப் பாடங்கள் மட்டும் போதுமா? 'குருகுலம்,' 'வித்யாலயம்,' 'ஆசிரமம்' என்ற பெயர் வைத்துக் கொண்டிருப்பதை முன்னிட்டு அதிகப்படியாக ஏதாவது கற்பிக்க வேண்டும் அல்லவா? எனவே குழந்தைகளை மேலும் வாட்டுகிறார்கள். சிலப்பதிகாரத்தையும் கலித்தொகையையும் கரதலப் பாடமாக நெட்டுருப் பண்ணச் சொல்லுகிறார்கள். கைத் தொழில் பயிற்சி, டிரில் பயிற்சி எல்லாம் நடத்த வேண்டி வருகிறது. இஷ்டம்போல் ஓடி ஆடி விளையாடப் பிள்ளைகளுக்கு நேரமே கிடையாது. விளையாட்டுக்காகக் குறிப்பிட்டுள்ள காலத்தில் ஆசிரியர் மேற்பார்வையில் விளையாட வேண்டும்! இது விளையாட்டாகுமா? ஒரு நாளும் ஆகாது. இந்த நிலையில் விளையாட்டும் ஒரு பாடக் கடனாக மாறிவிடுகிறது!

காந்தி மகாத்மா தம் வாழ்க்கையில் பல பரிசோதனைகள் நடத்தி வந்தார். உணவுப் பரிசோதனை செய்தார்; உண்ணா விரதப் பரிசோதனை செய்தார்; சத்திய பரிசோதனை செய்தார்; பிரம்மசரிய பரிசோதனை செய்தார்; கல்வி முறைப் பரிசோதனையும் செய்தார்.

அவருடைய பரிசோதனைகள் முடிவு பெற்று விட்டன என்று அவர் எப்போதும் சொன்னதில்லை.

காந்தி மகாத்மாவின் வாழ்க்கையில் ஒரு பெரிய விசேஷம் என்னவென்றால், தாம் கடைப்பிடிக்கும் கொள்கையை மாற்றிக் கொள்ள அவர் தயங்குவதில்லை. சோதனையில் நேற்றுச் சரி என்று தோன்றியது இன்று பிசகு என்று ஏற்பட்டால் உடனே மாற்றிக் கொள்வார்.

ஆனால் காந்தி மடத்தின் சீடர்கள் அப்படியெல்லாம் மாற்றிக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் பிடித்தால் ஒரு பிடிதான். ஆதாரக் கல்வி முறைச் சோதனையில் ஒரு சிறுவன் செத்துப் போய்விடுவதாயிருந்தாலும் "அதனால்பாதகமில்லை. கடமையைச் செய்து விட்டுச் சாகட்டும்; வீர சொர்க்கம் அடையட்டும்!" என்பார்கள். புண்ணியவான்கள்!

இப்போது ஆதாரக் கல்வி முறையை நடத்திவைக்கும் சில ஸ்தாபனங்களில் பிள்ளைகளைக் காலை முதல் மாலை வரை வாட்டி எடுக்கிறார்கள்! குழந்தைகளின் வாழ்க்கையில் ஆனந்தமே இல்லாமல் செய்து விடுகிறார்கள். காந்திஜி ஒரு நாளைக்கு 16 மணி வேலை செய்தார். அவருடைய சீடர்களும் அப்படியே வேலை செய்தார்கள். அதை அநுசரித்துப் பிள்ளைகளும் 16 மணி நேரம் வேலை செய்யட்டும் என்கிறார்கள். காலை 4-30-க்குக் குழந்தைகளை எழுப்பிவிட்டு, இரவு 9-30 வரை வேலை வாங்குகிறார்கள்!

காந்திஜி நடத்திய ஆசிரமத்தில் இம்மாதிரியெல்லாம் நடந்திருக்கலாம். காந்திஜியிடம் இருந்த ஆன்ம சக்தியும் தபோபலமும் உங்களிடம் இருந்தால் நீங்களும் அத்தகைய ஆசிரமத்தை நடத்தலாம். இல்லாத வரையில், பிள்ளைகளைக் கொடுமைப் படுத்தாமல் சும்மா விட்டு விடுவதே புண்ணியமாயிருக்கும்.

ஆசிரமங்கள், குருகுலங்கள், வித்தியாலயங்களில் ஆனந்தம் குடிகொண்டிருக்க வேண்டும்; குழந்தைகள் குதூகலமாகக் குதித்துச் சட்ட திட்டமின்றி விளையாட வேண்டும். ஆசிரியர்களைக் கண்டு பயப்படுவதென்பதே கூடாது. இந்த நிபந்தனை நிறைவேறினால்தான் மேற்படி ஸ்தாபனங்களின் இலட்சியம் நிறைவேறியதாகும். குழந்தைகளை வாட்டி எடுத்து, வேண்டாத பாடங்களை அவர்கள் இளம் மூளையில் திணித்து, பரீட்சை என்னும் செக்கிலும் வைத்து

ஆட்டும் ஸ்தாபனங்களுக்குக் குருகுலம், ஆசிரமம், வித்தியாலயம் என்ற பெயர்கள் பொருத்தமே இல்லை.

குருட்டுக் கட்டுப்பாடு

நமது கல்வி முறையில் உள்ள இன்னொரு அநியாயமான விதியைக் கேளுங்கள். வேறு எந்த மாகாணத்திலும் இல்லாமல் சென்னை மாகாணத்தில் மட்டும் அமுலில் உள்ள அவகேடு அது.

ஒரு பையன் ஒரு நாள் தவறாமல் பள்ளிக்கூடம் போகிறான். ஆயினும் பயன் இல்லை. பரீட்சையில் 'பாஸ்' மார்க்குகள் வாங்கினால்தான் அவன் மேல் வகுப்புப் போகலாம். சரி, இருக்கட்டும்.

பரீட்சைதானே முக்கியம்? பரீட்சையில் மார்க்குகள் வாங்குவதுதானே உங்களுக்கு முக்கியம்? ஒரு பையன் வீட்டிலேயே தானாகவோ, வேறு உதவியுடனோ பாடங்களைப் படித்துவிட்டுப் பரீட்சையில் மட்டும் எழுதுவதற்கு முன் வந்தானானால் அதை நம் கல்வி இலாகாவும் யுனிவர்ஸிடியும் அங்கீகரிப்பதில்லை. காலாவது ஐந்தாவது ஆறாவது மூன்று பாரமும் பள்ளிக்கூடம் போய்ப்படித்தால்தான் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு உட்காரலாம்! வருஷத்துக்கு இவ்வளவு நாள் பள்ளிக்கூடத்துக்குக் கட்டாயம் போயிருக்க வேண்டும் என்று விதி! 'டெர்ம் டேஸ்' என்று இந்தக் குருட்டு விதிக்குப் பெயர்.

இந்தக் குருட்டுக் கட்டுப்பாடு எதற்காக என்று யோசித்துப் பாருங்கள்.

ஒரு பக்கத்தில் 'கல்விக்குச் செலவழிக்கப் பணம் போதவில்லை' என்ற அழுகை; 'பள்ளிக்கூடம் கட்டுவதற்குப் பணம் இல்லை' என்ற ஓலம்; 'வரி போட்டால் ஆட்சேபிக்கிறீர்களே!' என்ற புகார்.

மற்றொரு பக்கத்தில் சர்க்காருக்குச் செலவு வைக்காமல், சர்க்கார் பள்ளிக்கூடக் கட்டிடங்களைத் தேய்க்காமல், ஆசிரியர்களுக்குத் தொந்தரவு கொடாமல், ஒரு பையன் வீட்டிலேயே படித்துக் கொள்கிறேன், படித்துக் கொண்டு வந்து பரீட்சை எழுதுகிறேன் என்றால் அது கூடவே கூடாது. அவனைப் பரீட்சை எழுத அனுமதிக்க முடியாது!

இந்த அநியாயமான அர்த்தமற்ற கட்டுப்பாடு எதற்காகத் தெரியுமா?

வீட்டிலேயே ஒரு பையன் படித்தால் தினம் இரண்டு மணி நேரம் ஒழுங்காகப் படித்து வந்தால் போதும்; பரீட்சை எழுதிப் பாஸ் செய்து விடுவான். முழு கவனமும் செலுத்தி ஒரு நாளைக்கு ஐந்து மணி படித்தால் மூன்றே மாதம் படித்தால் போதும். ஒரு வருஷத்துப் படிப்பை மூன்று மாதத்தில் படித்துப் பரீட்சையும் தேறிவிடுவான்!

இது இப்படி என்று ஏற்பட்டு விட்டால் பள்ளிக்கூடத்தின் முக்கியம் குறைந்து போய்விடுமல்லவா? "ஐந்து மணிப் பள்ளிக்கூடம் எதற்கு? இரண்டு மணி போதுமே!" என்று கேட்பார்கள் அல்லவா? "ஒரு வருஷம் என்ன பாடத்தை நடத்தித் தொலைக்கிறீர்கள்!" என்று கேட்பார்கள் அல்லவா? அதற்காகத்தான் வீட்டில் படித்தவர்கள் பரீட்சைக்கு உட்காரக் கூடாது என்ற ஏற்பாடு; வேறு எந்த மாகாணத்திலும் எந்த தேசத்திலும் இல்லாத ஏற்பாடு!

அமெரிக்காவுக்குச் சென்ற பல இந்திய மாணுக்கர்கள் எப்படிப் படித்துப் பாஸ் செய்தார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கும். சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் அமெரிக்காவில் இருந்தபோது பகலில் போர்ட்டர் வேலை முதலிய வேலைகள் செய்து காலட்சேபத்துக்குச் சம்பாதித்தார். இரவு இரண்டு மணி நேரம் காலேஜுக்குப் போய்ப் படித்துப் பாஸ் பண்ணிப் புகழ் பெற்றார்!



நண்பன்:—இன்று சித்திரப் படக் காட்சிக்குப்போயிருந்தேன். அதில் உன் படம் ஒன்றுதான் பார்க்கும் படியாக இருந்தது.

சித்திரக்காரன்:—ரொம்ப சந்தோஷம். உனக்கு என் சித்திரம் அவ்வளவு பிடித்திருந்ததா?

நண்பன்:—அதற்காகச் சொல்லவில்லை! மற்ற எல்லாப் படங்களையும் சுற்றி ஜனங்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள்!

செல்வம் செழுந்த அமெரிக்காவிலே, கல்வி செழித்த அமெரிக்காவிலே, படிக்கத் தெரியாதவர்களே இல்லாத அமெரிக்காவிலே இந்த மாதிரி எல்லாம் ஏற்பாடு இருக்கிறது. ஏழை இந்திய நாட்டில், படிக்கத் தெரியாதவர்கள் 100க்கு 90பேர் உள்ள நாட்டில், வருஷம் பூராவும் தினம் ஐந்து மணி நேரம் பகலில் பள்ளிக்கூடம் போனால்தான் பரீட்சை எழுதலாம்! எப்படியிருக்கிறது அநியாயம்?

அதிர்ஷ்டம் இருந்தால்? ....

ஈடையாக ஒரு தடவை முக்கிய விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு இதை முடிப்போம்.

சென்னை மாகாணத்தில் பள்ளிக்கூடம் போகவேண்டிய வயதுள்ள குழந்தைகள் 35 லட்சம் பேர் பள்ளிக்கூடம் போகாமலும் படிக்க வசதியில்லாமலும் இருக்கிறார்கள்; அவர்களை உடனடியாகப் படிப்பிக்க வேண்டும்.

ஆரம்பக் கல்வி கற்கும் குழந்தைகள் ஒட்டிக்கு இரட்டியானால் ஹைஸ்கூல்களில் படிக்க வருகிறவர்களும் ஒட்டிக்கு இரட்டியாவார்கள். அப்படி வருகிறவர்களுக்கெல்லாம் ஹைஸ்கூல்களில் இடம் கொடுத்தாக வேண்டும்.

பள்ளிக் கூடங்களை அதிகமாக்கவும் ஆசிரியர்களை அதிகமாக்கவும் ஏராளமாகப் பணம் வேண்டும்.

சென்னை சர்க்கார் சமீபத்தில் கல்விக்கு அதிகப் பணம் செலவு செய்யக்கூடிய நிலைமையில் இல்லை. ஜனங்கள் அதிக வரி கொடுக்கத் தயாராயில்லை.

ஆகையால் செய்யவேண்டியது என்ன? இப்போது இருக்கிற கட்டிடங்களை வைத்துக் கொண்டும் இப்போது செலவு செய்யும் பணத்தை வைத்துக்கொண்டும் இரட்டிப்புப் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டியாக வேண்டும்.

இது எப்படி முடியும்? ஐந்து மணி வகுப்பை இரண்டரை மணி வகுப்பு ஆக்குவதின் மூலமாக முடியும்.

உணவுப் பற்றுக் குறையை எடுத்துக் கொள்வோம். நாட்டிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் 16 அவுன்ஸ் ரேஷன் கொடுக்கத் தானியம் இல்லை. அதற்கு வேண்டிய தானியத்தில் பாதிதான் இருக்கிறது. அந்த நிலைமையில் செய்யவேண்டியது என்ன? நாட்டில் பாதிப் பேருக்கு முழு வயிறு உணவு கொடுத்துப் பாக்கிப் பாதிப் பேரை அடியோடு பட்டினி போட்டுக் கொன்று விடுவதா? அல்லது இருக்கிற தானியத்தை பிரித்து எல்லோருக்கும் பாதி வயிறு உணவு கொடுப்பதா?

இரண்டாவது முறையைத்தான் எல்லாரும் ஒத்துக் கொள்வார்கள்.

வயிற்றுப் பசியைப் போலவே அறிவுப் பசியும் முக்கியமானதல்லவா?

நாட்டிலுள்ள சிறு குழந்தைகளில் பாதிப்பேருக்கு ஐந்து மணிப் படிப்புக் கொடுத்துப் பாக்கிப் பாதிப் பேருக்குப் படிப்பே இல்லாமல் செய்துவிடாதீர்கள். இது பாவம்; பட்சபாதம்.

இருக்கும் வசதிகளை பிரித்து எல்லாக் குழந்தைகளுக்கும் இரண்டரை மணி நேரப் படிப்புக் கொடுங்கள்.

இந்த ஏற்பாட்டின்படி இன்னும் இரண்டு முக்கியமான உப பலன்கள் ஏற்படக் கூடும்.

1. பிள்ளைகள் பாதி நாள் பள்ளிக்கூடம் போய் வந்து பாக்கிப் பாதி நாளில் தந்தம் பெற்றோரின் தொழிலில் உதவி செய்வார்கள். விவசாயிகளின் குழந்தைகள் விவசாயத்தில் ஈடுபடுவார்கள். அல்லது வேறு தொழில் கற்றுக் கொள்வார்கள். படித்து முடித்ததும் என்ன செய்வோம் என்று திகைத்து நிற்க மாட்டார்கள். மூளைப் பயிற்சியுடன் கையின் பயிற்சியும் அவர்களுக்கு ஏற்படும்.

2. இரண்டாவது மூன்றாவது வகுப்பிலேயே பிள்ளைகள் நின்றுவிட மாட்டார்கள். அவர்கள் படித்த படிப்பு வீணாய்ப் போகாது. சர்க்கார் கல்விக்காகச் செலவழிக்கும் பொதுப்பணம் தண்டமாய்ப் போகாது. பாதி நாள் வீட்டு வேலையோ வேறு தொழிலோ செய்வதற்கு இருப்பதால் பள்ளிக்கூடம் வரும் பிள்ளைகள் ஐந்தாம் வகுப்பு வரையில் தொடர்ந்து படிப்பார்கள். சர்க்கார் கல்விக்குச் செலவு செய்யும் பணம் நன்கு உபயோகப்பட்டதாகும்.

• • •

அதிர்ஷ்ட வசமாகக் கல்விக்குச் செலவு செய்யச் சர்க்காருக்குப் பணம் அதிகம் கிடைத்தால் அதை உபயோகப் படுத்தச் சிறந்த வழி உண்டு. பாலர் வகுப்பிலிருந்து பத்தாவது வகுப்பு வரையில நாட்டில் எல்லாப் பிள்ளைகளுக்கும் பள்ளிப்படிப்பு இலவசம் என்றும் சம்பளம் இல்லை என்றும் ஏற்படுத்துங்கள். நாகரிக நாடுகளில் எல்லாம் இப்படித்தான் நடக்கிறது. நமக்கடுத்த சிறு தீவாகிய இலங்கையிலேகூட பத்தாம் வகுப்பு வரையில் பிள்ளைகளுக்குச் சம்பளம் இல்லை. பணத்தைச் செலவு செய்ய வேண்டிய வழி அது. கல்வி இலாகா காட்டும் பகாசுர வழிகளில் பொதுப் பணம் தண்டமாகப் போய்விடும்.



அத்தியாயம் 33

ராகவன் கோபம்

ராகவனுக்குத் திடீர் என்று கோபம் வந்து விட்டது. சூரியா தன்னைப் பரிகாசம் செய்கிறானோ என்ற சந்தேகம் அவன் மனதில் உதித்தது. உடனே குதித்து எழுந்து, "அடே! உன்னுடைய அகம்பாவமும் கெட்ட சுபாவமும் இன்னும் மாறவில்லை போலிருக்கிறது. இந்த க்ஷணமே எழுந்து வெளியே போய்விடு! கெட் அவுட்!" என்று சீறினான்.

"நீங்கள் இன்னும் 'கெட் அவுட்' சொல்லவில்லையே என்றுதான் காத்துக் கொண்டிருந்தேன்!" என்று கூறிக் கொண்டே சூரியா எழுந்தான்.

அதற்குள் ராகவனுடைய கோபம் கொஞ்சம் தணிந்தது. "இல்லை, சூரியா! உட்கார்! நீ உண்மையாகவே அப்படி எண்ணுகிறாயா! அதாவது நான் தாரிணியைக் கலியாணம் செய்து கொள்வது சீதாவுக்கு......" என்று தயங்கினான்.

சூரியா நின்று கொண்டே, "அதைப் பற்றி ஏன் தயங்க வேண்டும்? சீதாவின் ஆத்மாவுக்கு அது நிச்சயம் திருப்தி அளிக்கும். அதற்கு ஒரு விசேஷ காரணமும் இருக்கிறது! ஸ்திரீகளின் இயற்கைக்குப் பொருத்தமான காரணம்!" என்றான்.

"அது என்ன அவ்வளவு பொருத்தமான காரணம்?"

"சீதாவும் தாரிணியும் சொந்தச் சகோதரிகள் என்பதுதான். அவர்கள் ஒரே தந்தையின் புதல்விகள். ஒரே தாயின் வயிற்றில் பிறந்தவர்கள். இதைக் காட்டிலும் வேறு என்ன காரணம் வேண்டும்?"

"என்ன உளறுகிறாய்! உன்னுடைய மூளை குழம்பி விட்டதா! புத்தி சுவாதீனத்துடன்தான் பேசுகிறாயா?" என்றான் ராகவன்.

"எப்படி வைத்துக் கொண்டாலும் சரிதான்! நான் போய் வருகிறேன்" என்று சூரியா புறப்பட்டான்.

"இல்லை, சூரியா! போகாதே! திடீரென்று ஒரு பெரிய அணு குண்டைத் தூக்கிப் போட்டு விட்டுப் போகி

றேன் என்கிறாயே? சற்று முன் நீ சொன்னது நிச்சயந்தானா? தாரிணியும் சீதாவும் அக்கா தங்கைகளா? யார் சொன்னார்கள்? என்ன அத்தாட்சி?" என்று பரபரப்புடன் ராகவன் கேட்டான்.

"அவர்களைப் பெற்ற தகப்பனாரே சொன்னார்! அவருடைய வாய்மொழியாகவே தெரிந்து கொண்டேன்!" என்றான் சூரியா.

பிறகு, துரைசாமி ஐயரின் இல்வாழ்க்கை ஆரம்பத்தில் நடந்த அதிசய சம்பவங்களைப் பற்றியும் பிரசவ ஆஸ்பத்திரியில் குழந்தைகள் மாற்றப்பட்டது பற்றியும் சூரியா விவரமாகக் கூறினான். நம்புவதற்கு அரிய அபூர்வமான சம்பவங்கள்தான். ஆயினும் ராகவனுடைய மனதுக்குள் அவையெல்லாம் உண்மையாகத்தானிருக்கும் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவனுடைய சொந்த வாழ்க்கையில் ஏற்கெனவே நன்கு விளங்காமல் மர்மத் திரையினால் மறைக்கப்பட்டிருந்த பல சம்பவங்கள் இப்போது பிரகாசமாகத் துலங்கின.

"சூரியா! அவர் எங்கே? அந்தப் பிராமணர் துரைசாமி ஐயர் எங்கே? சீதாவின் கலியாணத்துக்குப் பிறகு அவர் ஏன் திடீரென்று மறைந்து போனார்! அவரை நீ எங்கே பார்த்தாய்?" என்று ராகவன் கேட்டான்.

"ராகவன்! அதையெல்லாம் ஏன் கேட்கிறீர்கள்? தெரிந்துகொண்டால் உங்கள் மனம் கஷ்டப்படும்!"

"எதற்காக என் மனம் கஷ்டப்பட வேண்டும்? நீ பேசுவதெல்லாம் மர்மமாகவே பேசுகிறாயே?"

"நீங்கள் வைதிக சிரேஷ்டர். உங்கள் மாமனார் ஒரு மௌல்விசாகிப் என்று தெரிந்தால் உங்களுக்குக் கஷ்டமாயிராதா? உங்கள் தகப்பனார் பத்மலோசன சாஸ்திரிகளின் இருதயமே நின்று விடுமே?"

"என் தந்தையை எதற்காக இதில் சம்பந்தப்படுத்துகிறாய்? என் அழகான மாமனார் உனக்கும் தாய்மாமன் தானே? அவர் எதற்காக மௌல்விசாகிபு ஆக வேண்டும்? ஹிந்து மதத்தை விட முஸ்லிம் மதம் சீக்கிரத்தில் மோட்சம் அளித்து விடும் என்ற நம்பிக்கையினாலா?"

"அவ்வளவு தூரம் எனக்கு அவருடைய மதக் கொள்கையைப் பற்றித் தெரியாது. என்னுடைய அபிப்பிராயம், அவர் ஊரை ஏமாற்றுவதற்கே அப்படி வேஷம் போட்டுக் கொண்டு திரிந்தார் என்பதுதான். ஆனால் அந்த வேஷம் அவர் எதிர்பாராத முறையில் அவருக்குத் திடீர் என்று மோட்சத்தை அளித்துவிட்டது!"

ராகவனுடைய இருதயத்தில் இனந் தெரியாத ஏதோ ஒரு பயம் ஏற்பட்டது. பயங்கரமான பாவம் ஒன்று கரிய மூகமூடியைப் போட்டுக் கொண்டு தன் முன்னால் வந்து நிற்பதாகத் தோன்றியது. அந்த முக மூடியைக் கிழித்து அந்த உருவத்தைப் பார்க்கும் தைரியம் அவனுக்கு ஏற்படவில்லை. ஆகையால் உடனே அவன் பேச்சை மாற்றிவிட விரும்பினான்.

"இரகசாரந்தான்! துரைசாமி ஐயர் மௌல்வி சாகிபு ஆவதாவது? அதைப் பற்றி நினைக்கவே எனக்கு அருவருப்பாயிருக்கிறது. வேறு ஏதாவது விஷயம் இருந்தால் பேசு!"

"வேறு ஒன்றும் இல்லை" என்று சூரியா மறுபடியும் புறப்பட்டான்.

"ஒரு வேளை நீ தப்பித் தவறிச் சீதாவை எங்கேயாவது பார்த்தால்..."

"சீதாவின் ஆவியைப் பார்த்தால் என்று சொல்லுங்கள்."

"நீ பேசுவதைக் கேட்டால் சீதா இறந்து விட்டாள் என்று உறுதியாக நம்புகிறாய் போலிருக்கிறது!"

"கண்ணால் கண்டதை நம்பாமல் என்ன செய்கிறது?" என்றான் சூரியா.

"என்னத்தை நீ கண்ணால் பார்த்தாய்!" என்று ராகவன் குரல் கடுக்கத்துடன் வினவினான்.

"நதியின் பிரவாகத்தில் சீதா முழுகி இறந்தைக் கண்ணால் பார்த்தேன்..."

"ஐயோ!" என்றான் ராகவன்.

"அந்தப் படகிலேயே நான் இருந்தேன். நாங்கள் மூன்று பேருந்தான் இருந்தோம். கரையிலிருந்து சுட்டது யார் என்பதுபற்றி எனக்கு ஒரு சந்தேகம் உதித்திருந்தது; அது உண்மை என்று இன்றைக்குத் தெரிந்தது!"

"என்ன சொல்கிறாய், சூரியா? என் மூளை குழம்புகிறது! படகில் நீங்கள்

மூன்று பேரும் இருந்தீர்கள் என்றால்? யார் யார் இருந்தீர்கள்?"

"நானும் சீதாவும் சீதாவின் தகப்பனாருந்தான் இருந்தோம். பஞ்சாப் நரகத்திலிருந்து தப்பி ஓடிக்கொண்டிருந்தோம். சீதாவின் தகப்பனார் என்ன நினைத்தார் என்றால், தம்முடைய மௌல்வி சாகிபு வேஷம் சீதாவுக்கு ஒரு பாதுகாப்பு என்று நினைத்தார். அவர் ஒன்று நினைக்க, அவருடைய மாப்பிள்ளை வேறொன்று நினைத்து விட்டார்!"

"ஐயையோ! அப்படியென்றால் அந்தப் படகில் நான் குறிபார்த்துச் சுட்ட முஸ்லிம்......?"

"ஆமாம்; உங்களுடைய மாமனாரை நோக்கித்தான் சுட்டீர்கள். குறியும் தப்பவில்லை. ராகவன்! இந்தத் துரதிர்ஷ்ட சம்பவத்தை அறிந்திருப்பவன் நான் ஒருவன்தான்; இப்போது உங்களுக்கும் தெரியும். நான் இதை வேறு யாரிடமும் சொல்லப் போவதில்லை. நீங்களும் சொல்லமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்."

ராகவன் திடீரென்று குதித்து எழுந்தான். கோபத்தினால் முகத்தில் நரம்புகள் புடைக்க, சூரியாவை நோக்கிக் கைகளை ஆட்டிக் கொண்டு, "அடமடையா! நீயும் ஒரு ஆண் பிள்ளையா? ஒரு பெண் ஆற்று வெள்ளத்தில் விழுந்து முழுகி இறந்ததை நீ பார்த்துக் கொண்டிருந்தாயா, அவளைக் காப்பாற்ற முயலாமல்? பெரிய வீரன், சூரன், தியாகி என்றெல்லாம் உன்னை நீயே புகழ்ந்து கொள்வாயே? மணலைக் கயிறாய்த் திரித்தேன், வானத்தை வில்லாய் வளைத்தேன் என்றெல்லாம் பீற்றிக் கொள்வாயே? வெள்ளத்தில் முழுகிப் போகாமல் ஒரு பெண்ணைக் கரை சேர்க்கக் கையினால் ஆகவில்லையா?" என்று நெருப்பைக் கக்கினான்.

சூரியா சாந்தமான குரலில், "ராகவன்! நான் அப்போது சீதாவைக் காப்பாற்றியிருப்பேன். காப்பாற்றிக் கரை சேர்த்திருக்க முடியும். ஆனால் அவ்விதம் செய்யவில்லை. முழுகிச் சாகட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்து விட்டேன். ஏன் தெரியுமா? பிழைத்து வந்தால் உம்மைப் போன்ற அயோக்கிய சிகாமணியோடு அவள் வாழ்க்கை நடத்த வேண்டுமே என்பதினால்தான்! முன்னொரு சமயம் நீர் என்னை மாடியிலிருந்து பிடித்துத் தள்ளியபோது பழிக்குப் பழி வாங்குவதாகச் சபதம் செய்தேன். பழி வாங்கியாகி விட்டது! போய் வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு நடந்தான்.

ராகவன் திகைத்து உட்கார்ந்து விட்டான். சூரியாவின் கடைசி வார்த்தைகள் அவனுடைய உள்ளத்தில் கூரிய அம்புகளைப் போலத் தைத்தன. சூரியா கூறிய செய்திகளின் பலாபலன்களைப் பற்றி யோசிக்கும் சக்தியே அவனுக்கு இல்லை. இந்த விஷயம் ஒன்றும் தாரிணிக்குத் தெரியக்கூடாதே என்ற கவலை மட்டும் மனதில் தோன்றியது.

சூரியா வீட்டு வாசலை அடைந்ததும் விடு விடு என்று நடக்கத் தொடங்கினான். அவனுடைய நடையின் வேகம் அவனுடைய உள்ளப் பரபரப்புக்கு அறிகுறியாக இருந்தது. "நான் சொன்னதில் அவ்வளவாகப் பொய் அதிகம் இல்லைதானே? சீதாவின் ஆவியைத்தான் இப்போது நான் பார்க்கப் போகிறேன். சௌந்தரராகவனைப் பொறுத்தவரையில் சீதா இறந்தவள் மாதிரிதானே?" என்று எண்ணமிட்டுக் கொண்டான்.

அத்தியாயம் 34

சீதாவின் ஆவி

தலைக்கு மேலே வெள்ளம் ஓடிக்கொண்டே, ஓடிக்கொண்டே, ஓடிக்கொண்டே இருந்தது. நெற்றியின் மேலே அலை மோதிக்கொண்டே, மோதிக்கொண்டே, மோதிக் கொண்டே இருந்தது. காதில் 'ஹோ' என்று இரைந்த அலை ஓசை, பல்லாயிரம் மக்களின் சோகம் நிறைந்த ஓலத்தை யொத்த அலை ஓசை, மற்ற எல்லா ஓசைகளையும் அமுக்கிக் கொண்டு மேலெழுந்த பேரலையின் பேரோசை கேட்டுக்கொண்டே, கேட்



டுக்கொண்டே, கேட்டுக் கொண்டே இருந்தது. தலைக்கு மேல் ஓடிய வெள்ளத்தின் பாரமும், நெற்றியில் மோதிய அலையின் வேகமும், காதில் தாக்கிய அலை ஓசை இரைச்சலும் எல்லையில்லாமல், முடிவில்லாமல், இடைவெளியில்லாமல் நீடித்துக்கொண்டே இருந்தன.

இல்லை, இல்லை; முடிவில்லாமல் இல்லை! அப்பாடா! கடைசியாக இதோ வெள்ளம் வடிந்து வருகிறது. நெற்றியில் அலையின் மோதலும் குறைந்து வருகிறது. இதோ வெள்ளம் வடிந்து விட்டது. கழுத்துக்குக் கீழே இறங்கி விட்டது. மூச்சுவிட முடிகிறது. கண்ணால் பார்க்க முடிகிறது. ஆனால் காதிலே அலை ஓசை கேட்பது மட்டும் நின்றபாடில்லை. வேறு ஒரு சத்தமும் கேட்க முடியவில்லை.

இது என்ன? நான் எங்கே இருக்கிறேன்? என்னத்தைப் பார்க்கிறேன்? இருளடைந்த ஒரு குகை வீடு போல அல்லவா இருக்கிறது? இங்கே எப்படி வந்தேன்? படகிலிருந்து நதியில் விழுந்து முழுகியவள் இங்கே எப்படி வந்தேன்? செத்துப்போன பிறகு இங்கே வந்து சேர்ந்தேனா? இதுதான் மறு உலகமா? மறு உலகமாயிருந்தால் இருட்டும் குப்பையும் நிறைந்து துர்நாற்றம் அடிக்கும் இந்த இடம் நரக வீடாகத்தான் இருக்கவேண்டும்! நான் செய்திருக்கும் பாவங்களுக்கு நரகத்தைத் தவிர வேறு என்ன இடம் கிடைக்கும்? பதியை விட்டுவிட்டு ஓடிப்போனவளுக்கு வேறு என்ன கதி கிடைக்கும்? அருமைச் சிநேகிதி லலிதாவுக்குத் துரோகம் செய்தவளுக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்! சொற்ப பாவம் செய்தவர்கள் கொஞ்சநாள் நரகத்திலிருந்து விட்டு அப்புறம் சொர்க்கத்துக்குப் போவார்கள் என்று கேட்டதுண்டு. ஆனால் எனக்குச் சொர்க்கத்தின் ஆசையே வேண்டியதில்லை. என்றென்றைக்கும் இந்த நரகத்தில் கிடந்து உழல வேண்டியதுதான்!

இதோ என் தலைமாட்டில் நிற்கிறது யார்? யமனா? யமதூதனா?—இல்லை; தெரிந்த முகமாயிருக்கிறதே? எப்போதோ பார்த்தமாதிரி இருக்கிறதே?—கையிலே என்ன வைத்துக் கொண்டிருக்கிறார்? இல்லை; தண்டாயுதமில்லை. வேறு எந்த ஆயுதமும் இல்லை. அது ஒரு கிண்டி; மண்ணால் செய்த கிண்டி; அதன் நீண்ட குறுகிய மூக்கு வழியாகத் தண்ணீர் சொட்டுகிறது. எதற்காக நம்முடைய நெற்றியில் ஜில் என்று குளிர்ந்த தண்ணீரை விடுகிறார்? ஆகா! எத்தனை இதமாயிருக்கிறது? இந்த மனிதர் யார்?......

சீதா சட்டென்று படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள். படுக்கை என்பது தரையில் விரித்திருந்த ஒரு பழைய கம்பளிதான். அது உடம்பின் மேல் பட்ட இடங்களில் சொர சொர வென்று குத்தியது. அதைப் பொருட்படுத்தாமல் தன் நெற்றியில் சொட்டுச் சொட்டாகத் தண்ணீரை விட்ட ஆசாமி யார் என்று நன்றாகத் திரும்பிப் பார்த்தாள். அந்த மனிதரின் மெலிந்து சுருங்கிய முகத்தில் அப்போது புன்னகை மலர்ந்தது. ஆகா! இந்த மனிதர் என் அப்பா அல்லவா? பழைய அப்பா துரைசாமி ஐயர் அல்லவா? அந்தத் தாடியுள்ள மௌல்வி சாகிபு அல்ல. இளைத்து மெலிந்து கறுத்துப் போயிருக்கிறார். கன்னங்களின் எலும்பு வெளியே நீட்டிக்கொண்டு தெரிகிறது. கண்கள் குழி விழுந்திருக்கின்றன. ஆயினும் பழைய அப்பாதான்; சந்தேகமில்லை. அந்த மௌல்வி சாகிபு என் தந்தை என்று சொல்லி என்னை அழைத்துக் கொண்டு வந்தது ஏதோ வஞ்சகம் போலிருக்கிறது. அவரிடமிருந்து நிஜமான அப்பா என்னைக் காப்பாற்றி

அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார். — ஒரு வேளை அதெல்லாம் — அந்தப் பயங்கர நிகழ்ச்சிகள் எல்லாம் — கனவு தானோ, என்னமோ? படகிலிருந்து நதியில் விழுந்து முழுகிப் போனதும்கூட அப்படித்தானோ, என்னமோ? — எல்லாவற்றுக்கும் அப்பாவைக் கேட்டுப் பார்க்கலாமே!

ஏதோ பேச முயன்றாள். தகப்பனாரிடம் தன் மனதிலெழுந்த சந்தேகத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ள முயன்றாள். "நீங்கள் என் அப்பா துரைசாமி ஐயர்தானே? எதற்காகக் கிண்டியிலிருந்து சொட்டுச் சொட்டாகத் தண்ணீரை என் நெற்றியில் விடுகிறீர்கள்? நாம் எங்கே இருக்கிறோம்? எதற்காக இந்த அசுத்தம் நிறைந்த இருட்டறையில் இருக்கிறோம்? சூரியா எங்கே? குழந்தை வஸந்தி எங்கே? இவர் — என் அகத்துக்காரர் — எங்கே?" என்று இவ்வளவு கேள்விகளையும் கேட்க அவள் மனம் விரைந்தது; நாக்குத் துடித்தது; உதடுகள் திறந்தன; திறந்த உதடுகள் மூடின. ஆனால் வார்த்தை ஒன்றும் வரவில்லை! முயன்று முயன்று பார்த்தும் வார்த்தை ஒன்றும் வெளி வரவில்லை.

அப்பா ஏதோ சொல்வதுபோலிருந்தது. வாயைத் திறந்து திறந்து மூடினார். பேச்சில்லாத ஸினிமாப் படங்களில் பாத்திரங்கள் வாயைத் திறந்து மூடுவதுபோலிருந்தது. பேசியது ஒன்றும் அவள் காதில் விழவில்லை; காதில் விழவேயில்லை. எப்படிக் காதில் விழும்? வேறு சத்தம் எதுவும் காதில் விழ முடியாதபடி தான் இந்தப் பயங்கரமான அலை ஓசை ஓயாமல் கேட்டுக் கொண்டிருக்கிறதே! இது தான் என்னைப் பைத்தியமாக அடித்துக் கொண்டு வருகிறதே! "எதற்காகத் தப்பிப் பிழைத்தோம்? நதியில் முழுகிச் செத்துத் தொலைந்து போயிருக்கக் கூடாதா?" என்ற எண்ணத்தை அடிக்கடி உண்டாக்கி வருகிறதே!

ஒரு நிமிஷத்துக்குள்ளே சென்ற சில மாதத்து அநுபவங்கள் எல்லாம் சட், சட்டென்று ஞாபகம் வந்தன. குருக்ஷேத்திரம் முகாமில் கண்ணுக்கெட்டிய தூரம் போட்டிருந்த ஆயிரக் கணக்கான அகதி முகாம் கூடாரங்கள் கண் முன்னால் வந்தன. உடுக்க ஒரு துணிக்கு மேல் இல்லாத லட்சக் கணக்கான அகதி ஸ்திரீகளும் குழந்தைகளும் நினைவுக்கு வந்தார்கள். சில நாள் குடி தண்ணீருக்குப் பட்ட கஷ்டம் நினைவு வந்தது. இன்னும் சில நாள் பெருமழை பெய்து கூடாரத்துக்குள் முழங்கால் ஆழம் தண்ணீர் நின்ற காட்சி நினைவுக்கு வந்தது. தனக்குக் கடுமையான சுரம் வந்ததும் அப்பாவும் சூரியாவும் தனக்குச் செய்த சிசுருஷைகளும் நினைவுக்கு வந்தன. ஒரே ஒரு நாள் அகதி முகாமில் ஓரிடத்தில் பெருங் கூட்டத்தைக் கண்டு தான் அங்கே சென்று பார்த்ததும் காந்தி மகாத்மா கூட்டத்தின் நடுவில் நின்று ஏதோ பேசியதும் நினைவுக்கு வந்தன. துரதிர்ஷ்டம்! துரதிர்ஷ்டம்! அந்த அவதார புருஷர் பேசிய பொன் மொழிகளைத் தன் காதுகள் கேட்கக் கொடுத்து வைக்கவில்லை!

பிறகு நடந்தவை யாவை? காந்தி மகான் ஏறியிருந்த காருக்குப் பின்னால் சென்ற கூட்டத்தோடு அவளும் சென்றாள். அகதி முகாமிலிருந்து அவர் புறப்பட்ட போது தானும் அவருடன் போய்விடப் பிரயத்தனம் செய்தாள். அந்த முயற்சி பலிக்கவில்லை. பக்கத்திலிருந்தவர்கள் அவளைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள்.

அதற்குப் பிறகு கடுங் குளிர் காலம் வந்தது. அந்தக் குளிரிலும் பனியிலும் கூடாரத்தில் வசித்தால் தன்



உயிருக்கு ஆபத்து வரலாம் என்று அப்பாவும் சூரியாவும் எண்ணினார்கள். ஆகையால் ஒரு மச்சுக் கட்டிடத்துக்கு அழைத்துப் போக வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ரொம்பவும் சிரமப்பட்டு அகதி முகாம் அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுக் கொண்டு குருக்ஷேத்திரத்திலிருந்து பிரயாணமானார்கள். பானிபத் என்னும் பட்டணத்துக்கு வந்துசேர்ந்தார்கள். அங்கே அதிர்ஷ்டவசமாக ஒரு பழையகாலத்து முஸ்லிம் பக்கிரியின் சமாதி மண்டபம் காலியா யிருந்தது. அந்த இடத்தை இவர்கள் பிடித்துக் கொண்டார்கள். அதில் வசித்து வந்தார்கள்.

அடிக்கடி சீதாவுக்குத் திடீர் திடீர் என்று பிரக்ஞை தவறிக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட சமயங்களில் அவளைக் கட்டை மாதிரி போட்டு விட்டது. குளிர்ந்த தண்ணீரைக் கிண்டி மூக்கு வழியாகக் கொஞ்சம் கொஞ்சமாய் நெற்றியில் விட்டுக் கொண்டிருந்தால் பிரக்ஞை திரும்ப வந்தது. அப்பா இன்றைக்கும் அம்மாதிரி செய்துதான் உணர்வு வரப் பண்ணி யிருக்கிறார்.

சூரியா டில்லிக்குப் போயிருக்கிறான். ஆம்; டில்லியிலேயே ஜாகை கிடைக்குமா என்று பார்த்து வரப் போயிருக்கிறான். தாரிணியையும் வஸந்தியையும் இவரையும் பற்றிக்கூட ஏதாவது தகவல் கிடைக்குமா என்று விசாரித்து வருவதற்குப் போயிருக்கிறான். அது மட்டுமல்ல; காந்தி மகாத்மாவைப் பற்றி விசாரித்துக் கொண்டு வருவதற்கும் போயிருக்கிறான். சீதாவின் மனதிற்குள் அடிக்கடி தான் இனி வெகு காலம் பிழைத்திருப்பது துர்லபம் என்று தோன்றிக் கொண்டிருந்தது. பிழைத்திருக்க அவள் விரும்பவும் இல்லை. பேசும் சக்தியை வாய் இழந்து விட்டது; பேச முயன்றால் தாடைகள் வலிப்பதைத் தவிர வேறு பயன் ஒன்றுமில்லை. காதோ கேட்கும் சக்தியை அடியோடு இழந்து விட்டது. ஒரு பயங்கரமான அலை ஓசை காதில் சதா சர்வகாலமும் கேட்டுக்கொண்டிருந்தது. எப்படியும் சீக்கிரம் தன் உயிர் பிரிந்து போவது நிச்சயம். அதற்குள் கூடுமானால் குழந்தை வஸந்தியை ஒரு தடவை பார்த்துக் கட்டி முத்தமிடவேண்டும். அப்புறம், வாழ்விலும் தாழ்விலும் இன்பத்திலும் துன்பத்திலும் விழிப்பிலும் தூக்கத்திலும் நன்மையிலும் தீமையிலும் தன்னுடைய வழிபடு தெய்வமாகக்கொண்டு போற்றி வந்த காந்தி மகாத்மாவை இன்னொரு தடவை தரிசிக்க வேண்டும். அவருடைய புனிதமான திருமேனியைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்ள வேண்டும். அவளுடைய மனோரதம் இவ்வளவுதான்.

இதை யெல்லாம் பற்றிச் சீதா மின்னல் மின்னும் வேகத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தபோது அப்பா துரைசாமி ஐயர் சூடாக டீ போட்டுக் கொண்டு வந்தார். சீதா வாங்கிச் சாப்பிட்டாள். பிறகு அப்பாவைத் தொட்டுக் கூப்பிட்டு, சமிக்ஞையினால் "சூரியா எங்கே? இன்னும் வரவில்லையா?" என்று விசாரித்தாள். அப்பாவும் சமிக்ஞையினால் "இன்னும் வரவில்லை!" என்று தெரிவித்தார். சீதாவின் முகம் முன்னைக் காட்டிலும் அதிகமாக வாடியது. டில்லியில் இன்னும் கலகம் நின்றபாடில்லை என்று சொன்னார்களே, ஒரு வேளை சூரியாவுக்கு ஏதாவது ஆபத்து வந்திருக்குமோ என்று எண்ணினாள். ஆமாம்; இந்த துரதிர்ஷ்டக்காரிக்கு உதவி செய்தவர்களோ, சிநேகமாயிருந்தவர்களோ, யார்தான் கஷ்ட நஷ்டங்களை அடையாமலிருந்தார்கள்? நான் இந்த உலகத்தை விட்டுத் தொலைந்து போனால் எத்தனையோ பேர் சுகமடைவார்கள். ஆனாலும் எனக்கு இன்னும் முடிவு காலம் வரவில்லையே? பஞ்சாப் பயங்கரத்தில் எத்தனையோ லட்சம்பேர் செத்துப் போனார்கள்; நான் மட்டும் சாகவில்லையே? எல்லா ஆபத்துக்களுக்கும் பிழைத்துக் கொட்டாப் புளியைப் போல் உட்கார்ந்திருக்கிறேனே?

சீதா தன் தலைமாட்டில் பத்திரமாய் வைத்திருந்த காந்தி மகாத்மாவின் படத்தை எடுத்துப் பார்த்தாள்.

"பாபுஜி! என்னைத் தங்கள் சிஷ்ய கோஷ்டியில் சேர்த்துக் கொள்ளக் கூடாதா? என்னாலான பணிகள் செய்து கொண்டிருக்க மாட்டேனா?" என்று இரங்கி வேண்டினாள்.

“கிருதி மணி மாலை”



ஸ்ரீ தியாகராஜ நூற்றாண்டு நினைவு வெளியீடு

ஆசிரியர்:

ஆர். ரங்கராமானுஜ அய்யங்கார், பி.ஏ., எல்.டி.

புஸ்தகம் ராயல் சைஸ். முழுவதும் அழகிய காலிகோ பைண்ட் செய்யப்பட்டது. சுமார் 600 பக்கங்கள் கொண்டது. தமிழிலும் தெலுங்கிலும் கர்னாடக சுத்தமான ஸ்வரத்துடன் சாஹித்யங்களும் விஸ்தாரமான நொடேஷன்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ராகத்தின் லக்ஷணங்களும் ஒவ்வொரு கீர்த்தனையின் கருத்துரையும் அடங்கியிருக்கிறது. மேலும், கர்னாடக சங்கீத மும்மூர்த்திகளின் மூவர்ணப் படங்களுடன் அவர்களது சரித்திரமும், இன்னும் பல இசைப் பெரியார்களின் படங்களும் உள்ளன. சங்கீத அபிமானமுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய அரும்பெரும் பொக்கிஷம்.

முதற் பாகம்: விற்பனையாகி விட்டது

இரண்டாம் பாகம்: 145 தியாகராஜ கீர்த்தனைகள்: விலை ரூ. 9-8-0

மூன்றாம் பாகம்: பஞ்சரத்னம், பிரதி மத்யமராக க்ருதிகள், முதலிய 150 தியாகராஜ கீர்த்தனைகள்: விலை ரூ. 9-8-0

நான்காம் பாகம்: 50 தீக்ஷிதர் க்ருதிகள், 48 ச்யாமா சாஸ்திரி-ஸுப்பராய சாஸ்திரி க்ருதிகள், 45 க்ஷேத்ரக்ஞர் பதங்கள்: விலை ரூ. 10.

●

கிடைக்குமிடம்:

ஆர் ரங்கராமானுஜ அய்யங்கார்

“பைரமதி” லேட்காலனி,

எழும்பூர் :: மதராஸ்-8

குறிப்பு:—சென்னை சர்வ கலாசாலைப் படிப்புத் திட்டக் குழுவினர் அங்கீகரித்த நூற்றொகுதி.

மதுரை
சௌராஷ்ட்ர ஹைஸ்கூல்
நிதிக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

16-10-1949-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு

மதுரை மோஹன்ராம் கம்பெனியில் அமைக்கப்படும் அலங்காரக் கொட்டகையில் நடைபெறும்

★

டிக்கெட்டுகள்:

ரூ. 500; ரூ. 250; ரூ. 100;
ரூ. 50; ரூ. 25; ரூ. 10

இந்தியப் பெண்மணிகள்



பாரதியார் விழா

தமிழ் நாடெங்கும், தமிழர்கள் வாழும் இடம் எங்கும், வருகிற செப்டம்பர் 11௳ தேதிய மகாகவி பாரதியாரின் திருவிழா நடைபெறும். பாரதியார் பிறந்த எட்டயபுரத்திலும் சிறப்பாகப் பாரதியார் திருவிழா நடத்த ஏற்பாடாகி யிருக்கிறது.

புதுத் தமிழ் இலக்கியத்தில் மிக்க ஆர்வம் கொண்ட நம் பிரதமர் கனம் பி.எஸ். குமாரசாமி ராஜா அவர்கள் எட்டயபுரம் பாரதி மண்டபத்தில் செப்டம்பர் 11௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பாரதியார் விழாவை ஆரம்பித்து வைப்பார்கள்.

ஆஸ்தான கவிஞர் நாமக்கல் ஸ்ரீ வெ. ராமலிங்கம் அவர்கள் இவ்வாண்டு திருவிழாவுக்குத் தலைமை தாங்கி நடத்தி வைப்பார்கள். "பாரதியார் பரம்பரையில் வந்த கவிஞர்களில் ஒருவன் நான்" என்று நாமக்கல் கவிஞர் அடிக்கடி பெருமையுடன் சொல்லிக் கொள்ளுவதுண்டு. அத்தகைய அடக்கமும் சீலமும் கவி இருதயமும் இணையில்லாத் தேச பக்தியும் உடைய நம் ஆஸ்தான கவிஞர் இந்த ஆண்டு பாரதி விழாவில் தலைமை தாங்குவது விழாவின் நிர்வாகிகளுக்குப் பெருமை யளிப்பதாகும்.

பாரதியார் பிறந்த ஜில்லாவைச் சேர்ந்த கனம் ரோச் விக்டோரியா அவர்கள் விழாவுக்கு விஜயம் செய்து பாரதியாரைப் பற்றிப் பேச இசைந்திருக்கிறார்கள்.

11௳ மாலையில் இசைப் பெரும் செல்வி ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்களின் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

பாரதி மண்டபம் கட்டும் யோசனை ஆரம்ப நிலையிலிருந்தபோது ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் எட்டயபுரத்தில் உதவிக் கச்சேரி செய்து பாரதி மண்டப நிதியை ஆரம்பித்து வைத்தவர். அவருடைய தேசபக்தியும் சுதந்திர ஆர்வமும் தமிழ்மக்கள் நன்கு அறிந்தவையாகும். ஸ்ரீமதி சுந்தராம்பாள் இவ் வருஷத்து விழாவில் கச்சேரி செய்வது பாரதி அன்பர்களுக்கெல்லாம் அளவற்ற மகிழ்ச்சியை அளிக்கும்.

11௳ இரவு இசை உலகில் அதிவிரைவாக முன்னேறிப் புகழ்பெற்று வரும் சங்கீத வித்வான் ஸ்ரீ வி. வி. சடகோபன் கச்சேரி செய்கிறார். பாரதியாரின் கண்ணன் பாட்டுக்கள் பலவற்றிற்கு ஸ்ரீ வி. வி. சடகோபன் பொருத்தமான மெட்டுக்கள் அமைத்து மெருகு கொடுத்து அழகாகப் பாடுவதை முன்னமே கேட்டு மகிழ்ந்திருக்கிறோம்; அன்றைக்கும் கேட்கப் போகிறோம்.

மறுநாள் 12௳ காலையில் 7-30 மணிக்கு நாமக்கல் கவிஞர் தலைமையில் மீண்டும் திருவிழா ஆரம்பமாகிப் பகல் 11 மணி வரையில் நடைபெறும். ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார், ஆசிரியர் ஏ. சீனிவாச ராகவன், பாரதியாரின் சகோதரர் ஸ்ரீ விசுவநாதய்யர், ஸ்ரீ என். சோமயாஜுலு, ஸ்ரீ நாரண துரைக்கண்ணன், ஸ்ரீ ஆ. முத்துசிவன், ஸ்ரீ திரிலோக சீதாராம், ஸ்ரீ எம்.ஆர். மெகநாதன் ஆகியவர்கள் பாரதியாரையும் அவருடைய பாடல்களையும் பற்றிச் சொற்பொழிவு ஆற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

எட்டயபுரத்தில் பாரதியார் திருவிழா நடக்கும் சந்தர்ப்பத்தை யொட்டிப் பாரதி



"என்ன மாமா! என்னைத் தெரிய வில்லையா உங்களுக்கு?"

"தெரியல்லியேடா அப்பா!"

"நான்தான் மாமா அடுத்த வீட்டு குப்பு. என்னைத் தோளிலே தூக்கி வைத்துக்கொண்டு குடுகுடுவென்று ஓடுவீர்களே! நாலு வருஷத்தில் மறந்து போய் விட்டீர்களா?"



நோயாளி:-டாக்டர்! ரேஷன் அரிசியைச் சாப்பிட்டு வயிற்று வலி வந்து விட்டது; வலி தாங்கவில்லை.

டாக்டர்:—முதலில் அந்த அரிசியை நம்ம வீட்டுக்கு அனுப்பி வையுங்கள். அப்புறம் மருந்து கொடுக்கிறேன். (நோயாளி திரும்பி வரவில்லை.)

யார் சங்கத்தின் முதல் பொதுக் கூட்டம் நடத்துவ தென்று தீர்மானித்திருக்கிறது. இந்தக் கூட்டம் 11ஆ பிற்பகல் 2-30க்குப் பாரதி மண்டபத்தில் நடைபெறுகிறது. சங்கத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் விஜயம் செய்யக் கோருகிறோம்.

பாரதி சங்கத்தின் அங்கத்தினர்களில் 84 அங்கத்தினர்களின் பெயர்கள் "கல்கி" ஏப்ரல் 8-ம் தேதி இதழில் வெளியாகியிருக்கிறது. அதற்குப் பிறகு சேர்ந்துள்ள அங்கத்தினர் பெயர்களைக் கீழே காணலாம்.

தமிழகத்திலும் தமிழ் நாட்டுக்கு வெளியிலும் உள்ள பாரதி அன்பர்களை யெல்லாம் பாரதி சங்கத்தின் அங்கத்தினராகும்படியும் பாரதி விழாவுக்கு விஜயம் செய்யும்படியும் கேட்டுக் கொள்கிறோம். சங்கத்தில் அங்கத்தினராக விரும்புவோர் வருஷ சந்தா ஆறு ரூபாயுடன் காரியதரிசி, பாரதியார் சங்கம், கீழ்ப்பாக்கம், சென்னை என்ற விலாசத்துக்கு எழுதக் கோருகிறோம்.

பாரதி சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு செப்டம்பர் 11ஆ 12ஆ களில் எட்டயபுரத்தில் தூங்கும் வசதியும் உணவு வசதியும் அளிக்கப்படும். மற்ற பேர்கள் சொந்த ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

பாரதியார் சங்கத்தின் புது அங்கத்தினர்கள்

ஸ்ரீ கே.பி. எஸ். நாராயணன், எட்டயபுரம்.
ஸ்ரீ டாக்டர் அண்ணாமலைச் செட்டியார், சென்னை.
ஸ்ரீ என். கோபாலசாமி, திருநெல்வேலி.
ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு, மேயர், சென்னை
ஸ்ரீ சி. மகாலிங்கம், மேற்குத் தாம்பரம்.
ஸ்ரீ வி. நா. நாச்சியப்பன், வேலம்மை.
ஸ்ரீ நாரண துரைக்கண்ணன், ஆசிரியர், 'பிரசண்ட விகடன்', சென்னை.
ஸ்ரீ கே. மயில்சாமிக் கவுண்டர், பூளைப்பட்டி.
ஸ்ரீ. எஸ். சோமசுந்தரம், ஆசிரியர், 'விகடன்' மதுரை.
ஸ்ரீ அ. க. கிருஷ்ணசாமி அய்யங்கார், அனுமந்தன்பட்டி.
ஸ்ரீ டி. எஸ். சிதம்பதி, கல்கத்தா.
ஸ்ரீ எஸ். எஸ். எம். எஸ். பி. வெள்ளையப்பச் செட்டியார், காரைக்குடி.
ஸ்ரீ கே. எஸ். ஏ. கிருஷ்ணமூர்த்தி, கடைய நல்லூர்.
ஸ்ரீ பி. ஜெயதேவன், இர்னூர்.
ஸ்ரீ பி. ஏ. வேலாயுத ராஜா, கோவில்பட்டி.
ஸ்ரீ பி. வைகுண்டம், ஸ்ரீவைகுண்டம்.
ஸ்ரீ க. சோமசுந்தரம், எழும்பூர். சென்னை.
ஸ்ரீ எஸ். அருணகிரி முதலியார், எட்டயபுரம்.
ஸ்ரீ எம். சந்திரன், லாஸ்பின், எட்டயபுரம்.
ஸ்ரீ அ. மு. அழ. மலையாண்டி செட்டியார், கோட்டையூர்
ஸ்ரீ வி. பி. ராதாகிருஷ்ணன், அழகாபுரி.
ஸ்ரீ பி. மதுரைவீரசாமி நாடார், மதுரை.
ஸ்ரீ ச. வி. சுப்பய்யா, எட்டயபுரம்.
ஸ்ரீ பா. நா கணபதி, எட்டயபுரம்.
ஸ்ரீ கே. ஜெகன்னாதஞ் செட்டியார், திருச்சி.
ஸ்ரீ கே. ஏ. எம். தங்கவேல் பிள்ளை, திருச்சி.
ஸ்ரீ பெ.மு. ராமகிருஷ்ணதேவர், எட்டயபுரம்
ஸ்ரீ சங்கர நாராயண பிள்ளை, கருங்குடி.
ஸ்ரீ ஏ. என். அய்யப்ப நாயக்கர், கோவில்பட்டி.
ஸ்ரீ வே. சுப்பிரமணிய நாடார், வேலாயுதபுரம்.
ஸ்ரீ ஆர். என். வன்னிநாயகம் பிள்ளை, கடையம்.
ஸ்ரீ ச. ராமசாமி நாயக்கர், நாலாட்டின் புத்தூர்.
ஸ்ரீ டி. எஸ். கருப்பசாமி ஆச்சாரி, கோவில்பட்டி.
ஸ்ரீ கி. வடிவேலு எட்டயபுரம்.
ஸ்ரீ கி. பாலசுப்பிரமணியம், எட்டயபுரம்.
ஸ்ரீ வெ மாரியப்ப பிள்ளை, எட்டயபுரம்.
ஸ்ரீ ஆறுமுகம், எட்டயபுரம்.
ஸ்ரீ மு. வேலுசாமிப் பத்தேவர், எட்டயபுரம்.
ஸ்ரீ ச. பொன்னுத்தேவர், எட்டயபுரம்.
ஸ்ரீ க. அ. க. சண்முகம் செட்டியார், எட்டயபுரம்.
ஸ்ரீ நா. கந்தசாமி செட்டியார், எட்டயபுரம்

நாலு லட்சம் பேர் ஹர்த்தால்

ரஜனி

கொழும்பு, ஜூலை, 24

சென்ற வருடம் இலங்கை சர்க்காரின் சட்டப் புத்தகத்தில் ஏறிய குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைப் பூரணமாக அமுலுக்குக் கொண்டுவர வெளிநாட்டு மந்திரி சபை சில புதிய விதிகளைத் தயாரித்திருந்தது. சென்ற வெள்ளிக்கிழமை அந்த விதிகளுக்குப் பார்லிமெண்டின் அங்கீகாரம் கிடைத்து விட்டது. செலாவணிக் கட்டுப்பாட்டைப் போல் இல்லாமல் குடியேற்றக் கட்டுப்பாட்டு விதிகள் இலங்கையரல்லாதார் அனைவருடைய விஷயத்திலும் பாரபட்சமின்றி ஒரே மாதிரியாக அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீ ஸ்ரீசங்கா என்ற அங்கத்தினர் வற்புறுத்தினார். மேற்படி சட்டம் இலங்கையிலிருந்து வெளிநாடு செல்லுபவர்களும் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகிறவர்களுமான சகல ஜனங்களையும் கட்டுப்படுத்துவதாகும். எனினும், இந்தியர்களை விசேஷமாகப் பாதிக்கும் பல அம்சங்கள் அதில் இருக்கின்றன.


நாலு பிரிவினர்

இலங்கைக்குப் புதிதாக வருகிறவர்கள் இலங்கையின் தாற்காலிக வாசிகள், இலங்கையின் நிரந்தர வாசிகள், இலங்கையர்கள் என்று சட்டம் நாலு பிரிவினரைக் குறிப்பிடுகிறது. இவர்களில் புதிதாக வருகிறவர்களை அனுமதிப்பதும் தடை செய்வதும் இமிகிரேஷன் கண்ட்ரோலருடைய உசிதத்தைப் பொருத்திருக்கிறது. புதிதாக வருபவர்கள், இலங்கைக்கு அவசியமானவர்களென்று கருதி வருவதற்கு அனுமதிக்கப்பட்டால், எந்த வேலையைச் செய்வதற்காக அவர்கள் வர அனுமதிக்கப்படுகிறார்களோ அதை விட்டு மாறக் கூடாது என்பது ஒரு முக்கிய நிபந்தனை. தவிர, அவர்களுக்குக் கொடுக்கப்படும் அனுமதிச்சீட்டில் குறிப்பிட்டிருக்கும் கால அளவு முடிந்தவுடன், அவர்கள் இலங்கையை விட்டு வெளியேறிவிட வேண்டும். புதிதாக வருவோரைக் கட்டுப்படுத்தும் சகல அதிகாரங்களும் இலங்கைக்கு உண்டு. எனவே, இந்த நிபந்தனைகளை யாரும் ஆட்சேபிக்கவில்லை.

இலங்கையில் ஏற்கெனவே இருந்துவரும் பெரும்பாலான இந்தியர்கள் அடுத்த இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ரஜாவில் இந்தியாவுக்குச் செல்வதாயிருந்தால், இந்தியாவில் இலங்கை இந்திய ஹை கமிஷனரிடமிருந்து ஒரு பாஸ்போர்ட்டும் மறுபடியும் இலங்கைக்குத் திரும்பக் குடியேற்றக் கண்ட்ரோலரிடமிருந்து ஒரு பர்மிட்டும் வாங்கிச் செல்ல வேண்டும் என்று சட்ட விதிகள் கூறுகின்றன. இலங்கையின் நிரந்தர வாசி என்று சொல்லுவோர், அவ்விதமே பர்மிட் வாங்கிச் சென்றால் அவர்கள் இஷ்டப்பட்ட நேரத்தில் இந்தியாவுக்குப் போய்வரத் தடையில்லை. விரும்பிய காலம் வரை அவர்கள் இலங்கையிலேயே இருப்பதற்கும் ஆட்சேபனையில்லை. ஆனால், அவர்கள் இந்தியாவில் குடும்பங்களை வைத்திருக்கவோ அல்லது அந்தக் குடும்பங்களுக்குப் பணம் அனுப்பவோ கண்டிப்பாக முடியாது. குடும்பங்களை இலங்கையில் வைத்துக் கொண்டு இந்தியர் பிரஜா உரிமைச் சட்டத்தின்படி இந்நாட்டின் பிரஜா உரிமைகளைப் பெறும் யோக்கியதாம்சங்கள் உடையவர்களைத் தவிர மற்றவர்கள் தங்களை நிரந்தர வாசிகள் என்று சொல்லிக் கொள்ளுவதில் அர்த்தமோ உபயோகமோ இல்லை. ஆகையால் பெரும்பாலான இந்தியர்கள் தாற்காலிக வாசிகள் என்றே பர்மிட் எடுப்பார்கள்.

அரசியல் உரிமை வேண்டும் என்று கோரிய இந்தியர்களில் பெரும்பாலோரை அனாதைகளாக்கி இந்தியாவுக்கு விரட்டவே குடியேற்ற வெளியேற்றச் சட்டமும் செலாவணிக் கட்டுப்பாடும் சாதுர்யமாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. வயதான தாய் தந்தையருக்கும் இலங்கைக்கு வர முடியாத நிலைமையிலிருக்கும் இதர சுற்றத்தார்களுக்கும் பணம் அனுப்ப வேண்டியிருப்பவர்கள், பிரஜா உரிமையைத் துறந்து தாற்காலிக வாசிகளாகப் பர்மிட் பெறுமாறு நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். தாற்காலிக வாசிகளை, குறிப்பிட்ட கால அளவிற்குப் பின் இலங்கையிலிருந்து வெளியேற்றிவிடச் சட்டம் சர்க்காருக்கு அதிகாரமளிக்கிறது. இவற்றைப் பற்றியும் இலங்கையர்கள் இந்தியா

இடம் கிடைத்தது!



"என்ன, ஸார்! கிருஷ்ணையர் வீட்டிலே வெற்றிலை, பாக்கு, சந்தனம் எல்லாம் பிரமாதப்படுகிறதே! அவர் பெண்ணுக்கு நல்ல இடமாகக் கிடைத்துவிட்டதோ?"

"அதைவிட முக்கியமான விஷயம், ஸார்! அவர் பிள்ளைக்கு என்ஜினியரிங் காலேஜிலே இடம் கிடைத்துவிட்டதாம்!"

வந்து வந்தால் அவர்களிடம் எவ்வித பாஸ்போர்ட் கேட்கவேண்டும் என்பதையும் நிர்மாணிப்பதற்காக ஸ்ரீ கிரியின் காரியதரிசி ஸ்ரீ என். இ. எஸ். ராகவாச்சாரி டில்லியில் இந்திய சர்க்கார் அதிகாரிகளுடன் சம்பாஷணை நடத்தப் போயிருக்கிறார்.

தொழிலாளர் கட்டுப்பாடு

இலங்கையிலுள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளரின் ஒழுங்கும் கட்டுப்பாடும் சமீபத்தில் அரசாங்கத்துக்குச் சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டது. சம்பளச் சட்டத்திலிருந்து ரப்பர் தொழிலை நீக்குவதற்கும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் ரப்பர் தோட்டங்களிலிருந்து திடீர் திடீர் என்று வேலை நீக்கம் செய்யப்படுவதற்கும் தங்களுடைய கண்டனத்தைத் தெரிவிப்பதற்காகச் சமீபத்தில் இலங்கையிலுள்ள சகல ரப்பர் தோட்டங்களையும் சேர்ந்த தொழிலாளர் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தார்கள். இதில் இந்தியர்களோடு பல ஆயிரம் சிங்களத் தொழிலாளரும் சேர்ந்து கொண்டது விசேஷமாகக் குறிப்பிடத் தக்கது. வேலை நிறுத்தத் தொழிலாளர்கள் நடத்திய பல கூட்டங்களில் காங்கிரஸ் தலைவர்களான ஸ்ரீ கே. ராஜலிங்கம், ஸ்ரீ கே. ஜி. எஸ். நாயர் முதலியோர் கான்

முழுவதும் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்கள்.

ஹர்த்தால் வெற்றி

இலங்கை இந்தியர் காங்கிரஸும் வேறு சில தொழிலாளர் ஸ்தாபனங்களும் ஆக்ஞையிட்டதற்கிணங்க, சென்ற வெள்ளிக்கிழமை இலங்கையிலுள்ள சகல ரப்பர் தோட்டங்களையும் சேர்ந்த சுமார் நாலு லட்சம் தொழிலாளர் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தார்கள். காந்தியக் கொள்கைகளைத் தழுவி அஹிம்ஸா முறையில் வெகு அமைதியாக இந்த வேலை நிறுத்தம் நடந்தது. இதில் ஆயிரக் கணக்கான சிங்களத் தொழிலாளரும் சேர்ந்து கொண்டு ரப்பர் தொழிலின் சட்ட ரீதியான சம்பளம் ரத்துச் செய்யப்பட்டதை அழுத்தமாகக் கண்டித்தனர். இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர்களான ஸ்ரீ கே. ராஜலிங்கம் ஸ்ரீ கே. ஜி. எஸ். நாயர் முதலியோர் வேலை நிறுத்தத்தை மிக அமைதியாக நடத்தி அரசாங்கத்துக்குக் காங்கிரஸின் கண்டனத்தை எடுத்துக்காட்டியது பாராட்டத் தக்கதாகும்.

வர்த்தகர்களின் கவலை

இலங்கை வர்த்தகம் முழுவதையும் காலக்கிரமத்தில் இலங்கையர் மயமாக்குவதற்காகக் கட்டுப்பாடான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் ஏற்கெனவே தொழில் நடத்தி வரும் அந்நியர்களுக்குப் புதிய இடையூறு ஒன்றும் செய்யப்பட மாட்டாதென்று கூறும் மந்திரிகள், அதே சமயத்தில் தொழில் ஸ்தாபனத்தின் மூலதனத்தில் பெரும் பகுதி இலங்கையர்களுடையதாயிருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். வெறும் சொல்லளவோடு நில்லாமல் முற்றிலும் அந்நியர்களுடையதாயிருக்கும் வர்த்தக ஸ்தாபனங்களின் இறக்குமதிக் கோட்டாக்களையும் படிப்படியாகக் குறைத்துக் கொண்டு வருகிறார்கள். இந்த நிலைமையில் காரியங்கள் நடந்தால் அடுத்த ஐந்து ஆறு வருடங்களுக்குள்ளாக இலங்கையிலிருக்கும் இந்திய வியாபாரிகள் கடையைக் கட்டவேண்டியதுதானென்று பல வருடங்களாக இலங்கையில் வியாபாரம் செய்து வரும் ஒரு இந்திய வியாபாரி கூறுகிறார்.

ரோஜா மார்க் நெய்

"நல்ல மணவாக்குள்ள கிராமங்களில், வரத் தட்டு, பருத்தி விதைகளை ஏராளமாகக் கொடுத்து வளர்க்கப்பட்ட பசு, எருமைகளினின்றும் கிடைக்கும் புத்தப் புதிய வெண்ணெய்களைக் கொண்டு, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது.

எல்லா ஊர் கோவாபரேடிவ் ஸ்டோர்களிலும் 3 வீசை, 12 வீசை டின்களில் கிடைக்கும். கோவையில் 14-86, ஒப்பணக்கார வீதியிலும் கிடைக்கும்.

●

டெலிபோன் நெ. 192

அவினாசி ரோடு : தலைமை ஆபீஸ்

லிங்கம் & கோ., கோயமுத்தூர்

கரகரப்பான தொண்டை, இன்ப்ளுயென்ஸா, ஜலதோஷத்திற்கு

இதமளிக்கும், கிருமி - நாசனி பெப்ஸ் அவசியம் உங்களுக்குத் தேவை



நாவிற்கு ருசியான பெப்ஸ் மாத்திரை ஒன்றை சாப்பிடுங்கள். அதன் மருந்து சத்துக்கள் உங்கள் நெஞ்சுக்கும் சுவாசாசயங்களுக்கும் இதம் தருவதை உடனே உணர்வீர்கள். பெப்ஸ் மாத்திரைகள் மிக்க சக்தி வாய்ந்தவை. இதமளித்து, புண்ணை ஆற்றி, கிருமிகளை அழிக்கிறது. அதன் சத்துக்கள் சுவாசத்தின் மூலம் நெஞ்சு, சுவாசாசயம், மார்பு இவற்றிற்கு நேராக செல்வதால் பெப்ஸ் ரணத்தையும், கமைச்சலையும், வீக்கத்தையும் அகற்றி கிருமிகளைக் கொன்று உபாதையை அகற்றுகிறது.



PEPS

சுவாச, ஹிருதய கிருமி நாசன மாத்திரைகள்

நெஞ்சு, சுவாசாசயம், மார்பு நோய்களுக்கு அதிக சக்தி வாய்ந்த பரம ஔஷதம்



படத்தில் பெப்ஸ் மருந்தின் சத்துக்கள் எப்படி சுவாச கோசத்தின் ஒவ்வொரு பாகத்தையும் சேர்கிறது என்பதை விளக்குகிறது.

ஏஜெண்டுகள் : மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி. மதராஸ்

NO. 1

●●● "மேல் வகுப்பார் என்ன செய்கிறார்களோ, அதை மற்றவர்கள் ஆர்வத்தோடு காப்பியடிக்கிறார்கள்; அவர்கள் செய்யும் காரியங்கள் அனைத்தையும் நாகரிகமாகக் கருதுகிறார்கள். சிறைக்குச் செல்வது, சாதி பேதமில்லாமல் எல்லோருடனும் நெருங்கிப் பழகுவது, நூல் நூற்பது, காந்தி குல்லாய் அணிவது ஆகியவற்றைப் போலவே கப்பு சோளம், கேழ்வரகு உண்பதையும் மற்றவர்கள் தேசபக்தி நிறைந்த நாகரிகமாகக் கொள்வதற்கு மேல்வகுப்பார் முதலில் வழிகாட்ட வேண்டும்." — ராஜாஜி.

வாழ்க, நாகரிகம்!

விந்தன்

காலில் கடையனை மாட்டிக் கொண்டு காரியாலயத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். "நாளைக்கு அரிசி கிடையாது!" என்றாள் என் வாழ்விலும் தாழ்விலும்—ஏன், ரேஷன் அரிசியிலும் கறுப்பு மார்க்கெட் அரிசியிலும்கூடப் பங்கெடுத்துக் கொண்டு, எப்பொழுது பார்த்தாலும் என்னுடைய கழுத்தை அறுத்துக் கொண்டிருக்கும் என் சகதர்மிணி.

எனக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. "ரேஷன் அரிசி என்னவாயிற்று?" என்று உறுமினேன்.

"என்னவாயிற்று! ஜீரணமாயிற்று!" என்றாள் அவள்.

"அதற்குள் ஜீரணமாகி விட்டதா?"

"ஆமாம்; வேண்டுமானால் கணக்குப் பார்த்துக் கொள்ளுங்களேன்! நீங்கள் ரேஷன் அரிசி வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து இன்றோடு ஐந்து நாட்களாக வில்லையா? இப்போது இருக்கும் அரிசி இராப் பொழுதுக்குத்தான் காணும். நாளைக்கு என்ன செய்வதாம்?"

"ஓஹோ! இன்று வியாழக்கிழமையா?—எனக்கு ஞாபகமே இல்லை......"

"உங்களுக்கு இதெல்லாம் ஞாபகம் இருக்காதென்றுதான் எனக்குத் தெரியுமே!—அதற்காகத்தான் ஞாபகப் படுத்தினேன்!"

"வாரா வாரம் இரண்டு நாட்களுக்கு அரிசி தேடும் வேலையே பெரிய வேலையாய்ப் போய்விட்டது. ஊரில் உள்ளவர்கள், 'கறுப்பு மார்க்கெட் ஒழிக, ஒழிக!' என்று கூச்சலிடுகிறார்கள். நம்மைப் போன்றவர்கள் உள்ளவரை 'கறுப்பு மார்க்கெட்' எங்கே ஒழியப் போகிறது!" என்று நான் அலுத்துக் கொண்டேன்.

"வயிற்றில் ஈரத் துணியைப் போட்டுக் கொண்டால் 'கறுப்பு மார்க்கெட்' தானே பிராணனை விட்டு விடுகிறது!" என்று தன் அபூர்வமான யோசனையை அவள் சந்தர்ப்ப மறிந்து வெளியிட்டாள்.

"ஈரத் துணியைப் போட்டுக் கொள்ள முடியுமா? நமக்கு இரண்டு நாட்களுக்குத் தானே மேற்கொண்டு அரிசி தேவையா யிருக்கிறது? எப்படியாவது அதை கிரகல் செய்து கொள்ளக் கூடாதோ......?"

"கிரவலாவது, செய்யவாவது! ஏகாதசி விரதம்தான் அனுஷ்டிக்க வேண்டும்!" என்று அவள் சீறினாள்.

நான் பேசாமல் நடையைக் கட்டினேன். அன்று மாலை வேறு வழியின்றி இரண்டரை படி 'கறுப்பு மார்க்கெட்' அரிசியுடன் வீடு திரும்பினேன்.

* * * * *

அன்று ஞாயிற்றுக் கிழமை. வழக்கம் போல் அந்த வாரத்து ரேஷன் அரிசியை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு என் அறைக்குள் சென்றேன். மிகவும் அலுப்பா யிருந்தது; மூலையில் கிடந்த ஈஸிச்சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தேன்.

"ஹேமா, ஹேமா!"

குரலிலிருந்து மிஸ் சோபனா-சம்பத் என் இல்லக் கிழத்தியைக் கூப்பிட்டுக்கொண்டே வருகிறாள் என்று தெரிந்தது.

"வாங்கோ, வாங்கோ! என்ன, அத்தி பூத்தாற்போல் இப்படி வந்து விட்டீர்கள்? என் வீடு தேடி நீங்கள் வந்ததில் எனக்கு ரொம்ப ரொம்பச் சந்தோஷம்!" என்று தன் மேலான தோழிக்கு மேலான வரவேற்புக் கூறினாள் என் மனைவி.

"எல்லாக் கவலைகளுக்கும் நான் ஒருவன் இருக்கும்போது உனக்குச் சந்தோஷமாக இருக்காதா!" என்று எனக்குள் நானே

வெறுப்புடன் கூறிக்கொண்டேன்—சம்பந்தமில்லாமல்தான்!

"இன்று நம் லீலா-கோபாலன் வீட்டிலே ஒரு விருந்து......" என்று எடுக்கும்போதே கொஞ்சம் எடுப்பாக ஆரம்பித்தாள் மிஸ் சோபனு.

"என்ன விசேஷமோ......?" என்று குறுக்கிட்டுக் கேட்டாள் என் சகி.

"அவர்களுடைய குழந்தைக்கு இன்று பிறந்த நாள்; அதற்காக வந்திருந்தேன். அப்படியே உன்னையும் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்."

"விருந்து எப்படி?"

"அதை ஏன் கேட்கிறாய், போ!—ரொம்ப ரொம்ப ஜோர்!"

"என்னவெல்லாம் செய்திருந்தார்கள்?"

"ஸங்கன் பேடா, சூரத் சொஜ்ஜி, டெல்லி புட்டிங், ஊர்தா கீர்,—அப்புறம் வேண்டியவர்களுக்குக் காப்பி!—எல்லாம் ஒரே அமர்க்களந்தான்!"

"ஏன், சாப்பாடு போடவில்லையா?"

"ஐயய்யே! இது என்ன கேள்வி? சுத்த அனாகரிகமான கேள்வி!—எப்பொழுது பார்த்தாலும் சாப்பாடு, சாப்பாடு, சாப்பாடு என்று ஒரே சாப்பாடுதானு!"

"சரி,—அது என்ன, ஸங்கன் பேடா? புதிசாயிருக்கிறதே!"

"ஆமாம், புதிசுதான்! மாவள்ளிக் கிழங்கில் அந்த அருமையான பக்ஷணத்தைச் செய்திருந்தார்கள்!"

"எப்படி என்று தெரிந்ததோ?"

"தெரியாமலென்ன? மாவள்ளிக் கிழங்கை வேகவைத்துத் தோலை உரித்து விட வேண்டும். அப்புறம் முள்ளங்கியைச் சீவுவதைப் போல அதைச் சீவி எடுத்துக் கொண்டு, அதனுடன் சர்க்கரை, துருவிய தேங்காய் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். வாசனைக்கு இரண்டு ஏலக்காய், குங்குமப் பூ—அழகுக்குக் கொஞ்சம் ஆரஞ்சுப் பௌடர் எல்லாம் போட்டு ஒரு தட்டில் அடையாகத் தட்டிவிட வேண்டும். பிறகு துண்டு போட்டுவிட்டால் அதுதான் மனம் கவரும் ஸங்கன் பேடா!"

"தின்பதற்கு நன்றாயிருந்ததோ?"

"பேஷாயிருந்தது!"

"அப்புறம் சூரத் சொஜ்ஜி என்னவென்று தெரியவில்லையா?"

"தெரியவில்லை; ஆனால் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அது சோளத்தில் செய்த சொஜ்ஜியாம். பார்ப்பதற்கும் அழகாயிருந்தது; தின்பதற்கும் ருசியாயிருந்தது."

"டெல்லி புட்டிங் என்பது கப்பு மாவைக் கொண்டு செய்ததாயிருக்குமோ?"

"ஆமாம், ஆமாம்'—தேவலையே, எப்படியோ நீ விருந்துக்கு வராமலே கண்டு பிடித்துவிட்டாயே!"

"ஏதோ மனதில் பட்டதைச் சொன்னேன்; அது சரியாயிருந்துவிட்டது. ஊர்தா கீர் என்பது கேழ்வரகிலிருந்து பால் எடுத்து அதனுடன் ஐஸ், சர்க்கரை சேர்த்துக் குளிர்ச்சியாகவும் செய்யலாம்—அல்லது, ஐஸ் இல்லாமல் சூடாக வேண்டுமானாலும் அடுப்பில் கொதிக்க வைத்து எடுத்துக்கொள்ளலாம் இல்லையா?"

"ஆமாம், அப்படியேதான்!"

"இதெல்லாம் நம் கவர்னர் ஜெனரல் ராஜாஜி யோசனையின்பேரில் செய்த பக்ஷணங்கள் மாதிரி தோன்றுகிறதே?"

"ஆமாம், அவைதான் தற்கால நாகரிகப் பக்ஷணங்களும்கூட......"

"இப்போதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது; ஒரு நாள் சாயந்திரம் அந்த லீ வீட்டுச் சாரதா இங்கே வந்திருந்தாள். பேச்சு வாக்கில், 'இன்று உங்கள் வீட்டில் என்ன டிபன்?' என்று கேட்டாள். 'இட்டிலி' என்றேன். 'சேச்சு......!'



என்றான். 'தோசை' என்றேன். இதைக் கேட்டு, அவன் 'இடி இடி' யென்று சிரித்து விட்டு, "சுத்த கர்நாடகமாயிருக்கிறாயே" என்று சொல்லி விட்டுப் போனான். எனக்கு அப்போது ஒன்றும் புரியவில்லை. 'இட்டிலியும் தோசையும் கர்நாடகமா!' என்று எண்ணிப் பேசாமலிருந்து விட்டேன். இப்போது நீ சொன்ன பிறகு தான் எனக்கு எல்லா விஷயமும் புரிகிறது!"



"அந்த மட்டும் இப்போதாவது புரிந்ததே!— ரொம்ப சந்தோஷம்; நான் வருகிறேன்" என்று நல்லவேளையாக அத்துடன் விடை பெற்றுக் கொண்டான் மஸ்லோபனு.

பேசா மழை பெய்து பெரு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி, திடீரென்று ஓய்ந்தது போல் இருந்தது, எனக்கு!

*****

மறுநாள் மாலை வழக்கம்போல் காரியாலயத்திலிருந்து வீடு திரும்பினேன். 'உத்தியோக வேஷ'த்தைக் கலைத்துவிட்டு 'உஸ்......' என்று மேஜைக்கு அருகே யிருந்த நாற்காலியில் உட்கார்ந்தேன். அங்கே எனக்கென்று ஓர் அதிசயம் காத்திருந்தது. அதாவது, ரங்கூன் பேடாவும் சூரத் சொஜ்ஜியும் என்னை முகமலர்ச்சியுடன் வரவேற்றன.

அடுத்த நாள் 'கம்' என்ற மணத்துடன் சுடச்சுட வார்த்த [illegible] என்னுடைய வரவை ஆவலுடன் எதிர் நோக்கிக்கொண்டிருந்தது.

அதற்கடுத்த நாள் டெல்லி புட்டில் 'ஸ்டேபிரைட்' தட்டில் மின்னிக் கொண்டிருந்தது!

இப்படியாக, நாளொரு மேனியும் தினம் ஒரு புதுப் பட்சணமுமாக நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன; நானும் ஜமாய்த்துக் கொண்டிருந்தேன்.

அன்று வியாழக்கிழமை. எனக்கு நன்றாக ஞாபகமிருந்தது. வழக்கம் போல் சட்டையை மாட்டிக் கொண்டு காரியாலயத்தை நோக்கிக் கிளம்புவதற்கு ஆயத்தமானேன்.

என் மனைவி ஒன்றுமே சொல்லவில்லை. அதாவது, அந்தப் பாழும் அரிசியைப் பற்றி ஞாபகப் படுத்தி, அவள் என் கழுத்தை அறுக்கவேயில்லை!

'சரி, மறந்துவிட்டாளாக்கும்!' என்று எண்ணி, "என்ன, நாளைக்கு அரிசி வேண்டாமா?" என்றேன் வேதனையுடன்.


"என்னத்துக்கு? சூரத் சொஜ்ஜியும் டெல்லி புட்டிக்கும் வந்துதான் நம் அரிசிப் பஞ்சத்தை விரட்டி விட்டதே!" என்றாள் அவள் சிரித்துக் கொண்டே.


அவ்வளவுதான்; என்னுடைய மகிழ்ச்சி எல்லை மீறிவிட்டது. "வாழ்க, ராஜாஜி!" என்று நான் இரைந்தேன்.

பதிலுக்கு "வாழ்க, நாகரிகம்!" என்று அவள் இரைந்தாள்.

எங்கள் இருவரையும் மீறி, "ஒழிக, கறுப்பு மார்க்கெட்! அழிக, அரிசிப் பஞ்சம்!" என்று உச்சஸ்தாயியில் கத்தினான் என் பத்து வயதுப் பையன்.

யாரைக் காப்பாற்றுவது?






மழைக்காலம்

திரண்ட மேகம் வானத்தில் சஞ்சரிக்கிறது. தாரைதாரை மழை கொட்டுகிறது. வீசும் காற்றில் வளைந்து கொடுக்கின்றன மரங்கள். [illegible] மேடு இயற்கையன்னை புது விளைவுக்கு ஏற்பாடுகள் செய்துவரும் நேரத்தில் மனிதன்மட்டும் குளிருக்கஞ்சி வீட்டினுள் அடைந்து கிடக்கிறான். வீடெங்கும் ஒரே ஈரம். ஆனால் சந்தோஷத்துக்கு குறைவில்லை அவனுக்கு—களைப்பு உண்டு, உணவு உண்டு, உஷ்ணமளிக்க சுத்த சுவையுள்ள டீயும் அருந்துகிறான். டீ உடலுக்கும் இருதயத்திற்கும் உஷ்ணம் அளிக்கிறது. மந்தமான குளிர்காலத்தின் மனதுக்கு உற்சாகமளிக்கிறது.

சத்தியதேவரின் சாமர்த்தியம்

பி. எஸ். மணி



ஒரு கிராமத்தில் எண்ணெய் வியாபாரி ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரே மகன்; அவன் பெயர் இருளப்பன். அந்த வியாபாரிக்கு வயதாகி விட்டபடியால் அவனது மகன் இருளப்பன் தன் தந்தையின் தொழிலை ஏற்று நடத்தி வந்தான்.

ஒரு நாள் இருளப்பன் தன் எண்ணெய்க் குடத்தைத் தலையில் வைத்துக் கொண்டு பட்டணத்தை நோக்கி நடந்தான். பெரிய கடைத் தெருவுக்குப் போனதும் அங்குள்ள வேப்ப மரத்தடியில் எண்ணெய்க் குடத்தை இறக்கி வைத்தான். பிறகு அவன் வழக்கம்போல் தான் எப்பொழுதும் உட்காரும் இடமாகிய கல்லின் அருகில் வந்து உட்கார்ந்தான். அன்று அவனுடைய அதிர்ஷ்டமோ என்னமோ, அவன் கொண்டுவந்த எண்ணெய் அவ்வளவும் விரைவில் விற்றுப் போய் விட்டது. அவனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. அந்த ஆனந்தத்தில் கண்ணயர்ந்து விட்டான். பிறகு கொஞ்ச நேரங்கழித்து எழுந்தான். அவன் எப்பொழுதும் பணத்தைப் பத்திரமாகக் கல்லினுள்ள குழியில் வைப்பது வழக்கம். அன்று அவன் எழுந்ததும் கல்லிலிருந்து பணத்தை எடுக்கப் போனான். என்ன அநியாயம்! என்றும் பத்திரமாக இருக்கும் காசு அன்று காணமற் போய் விட்டது. பணத்தைப் பறிகொடுத்த இருளப்பன் தேம்பித் தேம்பி அழுதான்.



அச்சமயத்தில் அந்த வழியாக நீதிபதி சத்திய தேவர் தனது சேவகர்களுடன் வந்து கொண்டிருந்தார். அவர் இருளப்பன் அழுவதைக் கண்டதும் அவனருகில் வந்து, "என்ன விஷயம்?" என்று விசாரித்தார்.

"ஐயா! நான் பக்கத்துக் கிராமத்திலுள்ள எண்ணெய் வியாபாரியின் மகன். நான் எப்பொழுதும் எண்ணெய் விற்ற பணத்தைக் கல்லின் இடுக்கில் பத்திரமாக வைப்பது வழக்கம். இன்றும் அப்படியே செய்தேன். ஆனால் கல்லினுள் வைத்த பணம் காணமற் போய் விட்டது" என்று கூறி அவன் அழுதான். இதைக் கேட்டதும் நீதிபதி சத்திய தேவர் சிறிது நேரம் யோசித்தார். பிறகு, "தம்பி! இந்தக் கல்லில்தானே பணத்தை வைத்தாய்?" என்று கேட்டார்.

"ஆமாம்!" என்று பதிலளித்தான் இருளப்பன்.

உடனே சேவகர்களை அழைத்து, "இதோ, இந்தக் கல்லைக் கைது செய்திருக்கிறேன். இதை எடுத்துச் செல்லுங்கள். நாளைக் 'காலையில் இக் கல்லை நீதி ஸ்தலத்தில்

ஆஜர்ப்படுத்த வேண்டும்" என்றார்.



சேவகர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. சிறிது நேரம் திகைத்து நின்றனர். பிறகு நீதிபதியின் கட்டளையை நிறைவேற்றினர்.

பிறகு நீதிபதி அந்தப் பையனைப் பார்த்து, "சரி! நீ நாளைக் காலையில் நியாய சபைக்கு வந்தாயானால் நீ தொலைத்த பணத்தைத் தேடித் தருகிறேன்" என்றார். அப்பாவி இருளப்பனும் சரியென்று சொல்லிவிட்டு வருத்தத்துடன் வீடு போய்ச் சேர்ந்தான்.

இந்த விநோத வழக்கின் விசாரணையைக் காண ஜனங்கள் நிறையக் கூடியிருந்தார்கள். விசாரணை ஆரம்பமாயிற்று.

"தம்பி! இந்தக் கல்தானே உன் பணத்தைத் திருடியது?" என்று நீதிபதி இருளப்பனை நோக்கிக் கேட்டார்.

"ஆமாம்" என்று தலையசைத்தான் இருளப்பன்.

"சரி! இந்தக் கல்லுக்குத் தண்டனை விதிக்கிறேன். சேவகர்களே! இக் கல்லுக்குக் குண்டாந் தடியால் ஐம்பது அடி கொடுங்கள்!" என்றார் சத்தியதேவர்.

நீதிபதியின் ஆணையைச் சேவகர்கள் நிறைவேற்றத் தொடங்கினார்கள். இதைப் பார்த்ததும் அங்கு கூடியிருந்த ஜனங்கள் அனைவரும் 'கொல்'லென்று சிரித்து விட்டார்கள்.

நீதிபதி சத்திய தேவர் கோபத்துடன் எழுந்திருந்து, "நீங்கள் எல்லோரும் சிரித்து நியாய ஸ்தலத்தின் கௌரவத்தை அவமதித்து விட்டீர்கள். ஆதலால் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஓரணா அபராதம் விதிக்கிறேன். அபராதத் தொகையை வாசலில் இருக்கும் ஜாடியில் போட வேண்டும்?" என்று கூறிவிட்டு, நியாய ஸ்தலத்தின் வாசலில் வந்து நின்று கொண்டார்.


முன்பே ஒரு ஜாடியில் தண்ணீர் நிரப்பி நியாயஸ்தலத்தின் வாசலில் வைக்கப் பட்டிருந்தது. அந்த ஜாடியின் அருகில் சத்தியதேவர் நின்று கொண்டிருந்தார். ஒவ்வொருவராக அதில் தங்கள் அபராதத்தைச் செலுத்திவிட்டுக் கொஞ்ச தூரத்தில் போய் நின்று கொண்டார்கள். கடைசியாக ஒருவன் தன் அபராதத்தைச் செலுத்தினான். அதைக் குறிப்பாய்க் கவனித்துக் கொண்டிருந்த நீதிபதி, "இதோ, இவனைக் கைது செய்யுங்கள்! இவன் தான் குற்றவாளி. இவனுக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனை விதிக்கிறேன்" என்றார். குற்றவாளி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்கி விட்டனர். அங்கு கூடியிருந்த பெரியவர்களில் ஒருவர் நீதிபதியின் அருகில் வந்து, "ஐயா! தாங்கள் எப்படிக் குற்றவாளியைக் கண்டு பிடித்தீர்கள்?" என்று கேட்டார்.

நீதிபதி, "ஐயா! ஒவ்வொருவராகக் காசு போட்டுக்கொண்டு வந்தார்களல்லவா? இந்த மனிதன் காசைப் போட்டதும் ஜாடியில் சிறிது எண்ணெய்ப் பிசுக்கும் எண்ணெயுமாக மிதந்தது. பணத்தைப் பறிகொடுத்த பையன் எண்ணெய் வியாபாரம் செய்பவன். அவன் பணத்தை எண்ணெய்க் கையினால்தான் வாங்குவது வழக்கம். ஆகையினால் இக் காசு அப்பையனைச் சேர்ந்ததாகத்தானிருக்க வேண்டும். ஆகவே, இவன்தான் குற்றவாளி என்று முடிவு செய்தேன். அவனும் குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டான்" என்று கூறி முடித்தார்.

இதைக் கேட்ட ஜனங்கள் அனைவரும் நீதிபதியின் புத்திசாலித்தனத்தை மெச்சினார்கள். நீதிபதி அந்த ஜாடியில் சேர்ந்த பணத்தையெல்லாம் இருளப்பனிடம் கொடுத்தனுப்பினார். எண்ணெய்க்காரப் பையனுக்குத் தொலைந்த பொருளைவிட மிகுந்த பொருள் கிடைத்தது. அதைப் பெற்றுக் கொண்டதும், அவன் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. நீதிபதிக்கு வணக்கம் செலுத்திவிட்டு அவன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

இழந்த வாழ்க்கை



ஸரோஜா ராமமூர்த்தி

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. ஜிலுஜிலுவென்று ஊதைக் காற்று வேறு அடித்தது. மத்தியானம் பன்னிரண்டு மணி வேளை என்று அப்பொழுது யாரும் சொல்ல முடியாது. வழக்கத்துக்கு விரோதமாக அன்று விடிந்ததிலிருந்து சூரிய ஸ்பரிசத்தையே பூமாதேவி அறியாமல் இருந்தாள். நீண்ட காலங்களுக்குப் பிறகு—அதாவது, இரண்டு வருஷங்களுக்குப் பிறகு—நான் என் பிறந்த வீட்டுக்கு வந்திருந்தேன். கல்கத்தாவிலிருந்து அடிக்கடி பிறந்த வீட்டுக்கு வருவதென்பது லேசான விஷயமல்ல. நகரத்து வாழ்க்கை அலுத்துச் சலித்துப் போய் இரண்டு மாதங்கள் நிம்மதியாக இருந்து விட்டு வரவேண்டும் என்ற பேராவலால் தூண்டப்பட்டு ஒருவாறு பூந்திடல் வந்து சேர்ந்தேன். நான் பிறந்த ஊரும் அதுதான். என் குழந்தைப் பருவத்து நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் அந்த ஊர் மண்ணில்தான் நிகழ்ந்தன. கல்யாணமும் அங்குதான் நடந்தது. தழுகிய ஏரிக் கரையும், அதன் கரையிலுள்ள வெற்றிலைத் தோட்டங்களும், பிஞ்சுக் கத்தரிக்காயும், கள்ளமற்ற என் பால்யத் தோழி லக்ஷ்மியும் கல்கத்தாவில் கிடைப்பார்களா, என்ன?

நீண்ட ரயில் பிரயாணத்தால் அலுத்துப் போய்க் கண்களை மூடிக் கொண்டே படுத்திருந்தேன். தூக்கமுமல்லை, விழிப்புமில்லை; ஒரு வித மயக்க நிலை அது. "ஜகதா!" என்று எனக்குப் பழக்கமான குரல் ஒன்று என்னை அழைத்தது. எந்தப் பெண்ணுடன் புழுதியில் புரண்டு விளையாடி, வாய்க்காலில் அலைந்து விஷமம் செய்தேனோ, அந்த லக்ஷ்மி என் எதிரில் நின்று கொண்டிருந்தாள். எங்கள் இருவருடைய உள்ளங்களும் ஒன்று பட்டுப் போயிருந்தன. ஆனால், லக்ஷ்மி குடியானவப் பெண்ணாகப் பிறந்திருந்த தோஷத்தால் என்னுடன் பால்யத்தில் ஒன்றாகச் சாப்பிடவோ தூங்கவோ முடியாமல் ஒன்றுபட்ட உள்ளங்கள் வருந்தின.

பரட்டைத் தலையுடனும், அழுக்கேறிய உடையுடனும், சோகம் நிரம்பிய முகத்துடனும் அவள் என் எதிரில் நின்று கொண்டிருந்த காட்சி என் மனதை உறுத்திற்று.

"வா, வா, லக்ஷ்மி! உன்னை வீட்டில் வந்து பார்க்கவேண்டுமென்று இருந்தேன். ஒரு வேளை புருஷன் வீட்டில் இருக்கிறாயோ என்னவோ என்று பேசாமல் இருந்து விட்டேன்" என்றேன்.

ஏற்கனவே சோகத் திரைக்குள் மறைந்திருந்த அந்த முகம் மேலும் வாட்டமடைந்தது.

"புருஷன் வீட்டிலே இல்லே, அம்மா! இங்கேதான் இருக்கேன்" என்று அவள் கூறும்போது குரல் தழுதழுத்துக் கண்ணில் நீர் ததும்பிற்று.

அதற்குள் உள்ளேயிருந்து என் தாயார் வந்தாள். "வந்து விட்டாயா, லக்ஷ்மி? ஜகதா வந்திருக்கிறாளே, சொல்லி அனுப்பலாம் என்று இருந்தேன். நீயே வந்து விட்டாயே?" என்றாள்.

"களத்து மேட்டுப் பக்கம் மாட்டு வண்டியிலே டாக்தராக அண்ணன் சொல்லிச்சு, அம்மா! வேலையைப் போட்டுட்டு ஓடியாந்தேன், ஜகதாவைப் பார்க்க!"

"என்னவோ பாவம்! அவளைப் போல நீயும் குடியும், குடித்தனமுமா இருந்தா எவ்வளவோ நன்றாயிருக்கும். அவன்தான் உன்னை வருஷக் கணக்கிலே தள்ளிவைத்து விட்டு இருக்கானே!" என்று அனுதாபப் பட்டாள் என் தாயார்.

லக்ஷ்மி மௌனமாகக் கண்ணீர் வடித்து நின்றாள். என் பால்யத் தோழியின் துயரம் கண்டு என் மனம் வருந்தியது. அம்மா ஏதாவது சொல்லுவாளோ என்பதையும் மறந்து அன்புடன் அவள் கரங்களைப் பற்றினேன்.

"வா, லக்ஷ்மி! நாம் விளையாடிய இடங்களையெல்லாம் பார்த்துவிட்டு வரலாம்" என்று அவளை அழைத்துக் கொண்டு ஏரிக் கரைக்குப் புறப்பட்டேன்.

லக்ஷ்மி வழியில் என்னுடன் அதிகமாகப் பேசவில்லை. அவள் உதிர்த்த கண்ணீரைப் போல் வானம் அவ்வப்போது சடசடவென்று தூறிக் கொண்டிருந்தது. முதலில் கூறியபடி ஊதைக் காற்றும் அடித்துக் கொண்டிருந்தது. சுற்றியிருந்த வயல் வெளிகளில் உழவர்கள் நாற்று நட்டுக் கொண்டிருந்தார்கள். உழத்திகள் சளசளவென்று குடும்ப விஷயங்களைப் பற்றிப்

பேசிக் கொண்டே சாசவென்று காற்று வெளியில் ஈடுபட்டிருக்கிறார்கள். சுற்றியிருந்த கிராமிய நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருந்த என் மனதை லக்ஷ்மியின் விம்மல் அவள்பால் திருப்பியது.

“என்ன, லக்ஷ்மி? ஏன் இப்படி அழுகிறாய்?” என்று அவள் கரங்களைப் பற்றிக் கொண்டு கேட்டேன். அவள் சோகம் நிரம்பிய கதை இதுதான்:

2

லக்ஷ்மிக்குக் கல்யாணமாகி ஆறு ஏழு வருஷங்கள் ஆகிவிட்டன. எனக்கு விவாகம் நடப்பதற்கு முன்பே அவளுக்கு நடந்து விட்டது. லக்ஷ்மியின் கணவன் நல்ல அழகன். நிலம், நீச்சு, தோப்பு எல்லாம் இருந்தன. வருஷம் பூராவும் வயலில் பாடுபட்டுத்தான் சாப்பிட வேண்டும். தாய் தந்தையருக்கு ஒரே பிள்ளை; செல்லமாக வளர்ந்தவன். வயலிலேகூட அவன் வேலை செய்யப் போக மாட்டான். அவனுடைய தகப்பன்தான் எல்லா வேலைகளையும் ஏற்று நடத்துகிறவன். பிள்ளையின் சுகவாழ்வு ஒன்றிலேயே தாய் தந்தையருக்கு நாட்டம். பிள்ளைக்குக் கல்யாணம் பண்ண வேண்டும், குடியும் குடித்தனமும் பெருக வேண்டும் என்பதே அவர்களுடைய லட்சியம்.

லக்ஷ்மியின் கணவனான முத்து, அப்பா, அம்மாவின் வார்த்தையைத் தட்டாதவன். அவர்கள் கீறின கோட்டைத் தாண்ட அவனுக்குத் தைரியம் கிடையாது. ஆயிரம் சகுனம் பார்த்து, ஜோஸியம் பார்த்து லக்ஷ்மிக்கும் முத்துவுக்கும் கல்யாணம் நடந்தது. மருமகள் வந்ததில் லக்ஷ்மியின் மாமியார் சொர்ணத்துக்குக் கட்டுக்கடங்காத பெருமை.



“என்னடி சொர்ணம், மருமகள் வந்து விட்டாற்போலிருக்கிறதே!” என்று என் தாயார் அவளைக் கல்யாணம் விசாரித்தாள்.

“வந்துட்டா, அம்மா! எங்க குடி பெருகி வாழ வேண்டும், அம்மா!” என்று ஆவலுடன் அவள் பதில் கூறியது இன்று எனக்கு நினைவு வருகிறது.

லக்ஷ்மி தான் பிறந்த வீட்டில் இருக்கும்போதே புக்ககம் சென்றுவிட்டாள். அவள் ஊருக்குப் போகு முன்பு என்னிடம் வந்து, “ஜகதா! உனக்குக் கல்யாணமாகி நீயும் உன் புருஷனுடன் சந்தோஷமாக ஊருக்குப் போகிறதைப் பார்க்க எனக்கு ஆசையாயிருக்கு. சீக்கிரம் கல்யாணம் பண்ணிக் கொள். ஜகதா! படிச்சதெல்லாம் போதும்” என்றாள்.

“கூடிய சீக்கிரமே அவளுக்கும் கல்யாணம் பண்ணி விடுகிறேனடி, லக்ஷ்மி! அப்போது உனக்கும் சொல்லி அனுப்புகிறேன். நீயும் வா!” என்று என் தாயார் அவளிடம் கூறினாள்.

அன்று மகிழ்ச்சியுடன் என்னிடம் விடை பெற்ற லக்ஷ்மி இன்று கணவனால் தள்ளப் பட்டுக் கண்ணீருடன் நிற்கிறாள் என்றால் என் மனம் வேதனைப் படாமல் இருக்குமா? காரணம் இதுதான்—லக்ஷ்மி மாமியார் வீட்டுக்குச் சென்று ஏழு வருஷங்கள் ஆகியும் அவளுக்குக் குழந்தை பிறக்கவில்லை. வம்சம் பெருக வேண்டும் என்று ஆசைப்பட்ட சொர்ணத்துக்கு இது சங்கடமாக இருந்தது. முதலில் மருமகளுக்கு ஏதோ காற்று சேஷ்டை என்று மந்திரமும் மாந்திரீகமும் செய்தாள். பிறகு நாட்டு மருந்து வாங்கிக் கொடுத்தாள். குல தெய்வத்துக்குப் பூஜை போட்டாள். ஏழுமலையானை வேண்டிக் கொண்டாள். பிறகு பட்டணம் அழைத்துப் போய் ஆஸ்பத்திரியில் இங்கிலீஷ் வைத்தியமும் செய்தாள். ஆனால், அவளுக்குப் பேரனோ, பேத்தியோ பிறக்கிற வழியாக இல்லை. இதெல்லாம் நான்கு வருஷங்கள் நடந்தன. என் கல்யாணத்தின் போதே கசமுசவென்று சிலர் பேசிக் கொண்டார்கள். “சொர்ணத்துக்கு மருமகளைக் கண்டால்

ஆகவில்லையாம்; கரித்துக் கொட்டுகிருளாம்!" என்று அம்மா என்னிடம் சொன்ஞள். லக்ஷ்மி என் கல்யாணத்துக்கு வரவில்லை. "ஆமாம், பிள்ளையில்லாதவர்களுக்குக் கல்யாணமும் கார்த்திகையும்தான் குறைச்சல்!" என்று சொல்லிவிட்டுச் சொர்ணம் என் கல்யாணத்துக்கு வந்திருந்தாள். "லக்ஷ்மியை ஏன் அழைத்து வரவில்லை?" என்று அவளிடம் கேட்டதற்கு, "அது எதுக்கம்மா இங்கே?" என்று அசிரத்தையாகப் பதிலளித்தாள்.

நானும் கல்கத்தாவுக்கு லக்ஷ்மியைப் பாராமலேயே சென்றுவிட்டேன்.

3

இவ்விதம் சிந்தனையில் மூழ்கியவர்களாக இருவரும் ஏரிக்கரையை அடைந்து அங்கிருந்த ஓர் அரச மரத்தடியில் உட்கார்ந்தோம். சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. லக்ஷ்மி வெறிச் சென்ற பார்வையுடன் ஏரியைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"லக்ஷ்மி!" என்று நான் மெதுவாக அவளைத் தொட்டு அழைத்தேன்.

"என் ஜகதா?" என்ருள் அவள்.

"நீ பிறந்த வீட்டுக்கு வந்து எவ்வளவு காலாச்சு?"

"இரண்டு வருஷம்."

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. "மூர்த்தி வரவேயில்லையா? உன்னை வந்து கூப்பிடவில்லையா?" என்று கேட்டேன்.

"இல்லை, ஜகதா! அவருக்கு என்னைப் பற்றி என்ன அக்கறை? அவர் தம்பி இன்னும் எட்டு நாளில் வேறு கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிருரே!" என்று கூறிவிட்டு அவள் விசித்து விசித்து அழுதாள்.

எனக்குக் கோபமும், ஆத்திரமும் கலந்து வந்தன. "சரி, அவன் கல்யாணம் பண்ணிக்கொண்டு போகட்டும்; நீ என்னோடு ஊருக்கு வந்து விடு!" என்றேன்.

லக்ஷ்மி பரிதாபமாகச் சிரித்து விட்டு, "அதெல்லாம் எதற்கு ஜகதா? இந்த அதிர்ஷ்டக்கட்டை உன் வீட்டில் காலடி எடுத்து வைக்கக்கூடாது" என்ருள்.

அவள் புருஷன் அவளை அடித்து விரட்டியதற்குக் காரணம் என்னவென்று கேட்டேன் நான்.

"ஊரிலே இருந்து என் நாத்தனர் வருவதற்கு இருந்தாள். அவள் ஐந்தாறு மாதம் கர்ப்பம். அவள் என் முகத்திலே முழிக்கக் கூடாதாம். நான் அங்கே இருந்தால் அவளுக்குப் பிறக்கும் குழந்தைகூடத் தங்காதாம். மாமியார் ஜாடை மாடையாகத் தினம் இதைப் பற்றிச் சொல்லிக்கொண்டே இருந்தாள். 'உன் பிறந்த வீட்டுக்குப் போ!' என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாகச் சொல்லி வந்தாள். எனக்கும் ஆத்திரமாக இருந்தது. 'போய் விடுகிறேன், மாமி!' என்று ஒரு நாள் சொல்லிவிட்டேன். வயலுக்குச் சென்றிருந்த என் புருஷன் வந்ததும், 'உன் பெண்டாட்டி பிறந்த வீட்டுக்குப் போகிருளாம், அப்பா! இந்த வீட்டிலே இருந்து வாழ அவளுக்கு இஷ்டமில்லையாம்!' என்று மாமியார் கூறினாள். 'போகட்டுமே, கழுதை! இப்பவே போகச் சொல்!' என்று காகாவென்று என் கையைப் பிடித்து இழுத்து வெளியே தள்ளிக் கதவைச் சாத்திவிட்டார், அவர்!"

லக்ஷ்மி கூறிய வரலாறு இதுதான். நான் சிந்தனையில் மூழ்கினேன். பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளில் தள்ளிவைக்கும் கொடுமையை நினைத்து நினைத்து என் மனம் புழுங்கியது.

"லக்ஷ்மி! இந்தக் கல்யாணத்தை நடக்கவிடாதே! கல்யாணத்தன்று பந்தலில் போய் நின்று நாலு பேரிடம் முறையிடு!" என்று அவளிடம் கூறினேன்.

"ஜகதா! நீ படிச்ச பெண். எனக்கு இதெல்லாம் புரியவில்லை. நானே மலடி. அவருக்கு என்னாலே சுகம் ஒண்ணும் கிடையாது, பார்!" என்ருள் லக்ஷ்மி.

அவளுடைய பெருந்தன்மை எனக்கு அளவில்லாத வியப்பை அளித்தது.

பெயர் என்ன?



"ஐயரே! உமதுடைய முழுப் பெயர் என்ன? ராமய்யரா? அல்லது கிருஷ்ணய்யரா?"

"இரண்டுமில்லை, ஸார்! என் பெயர் ஸப்ளையர்!"

லக்ஷ்மியின் கணவன் மறுமணம் செய்து கொண்டான். ஏழு வருஷ காலம் கஷ்டங்களில் பங்கெடுத்துக் கொண்டவளை விலக்கிவிட்டுத் தன்னுடைய சுகவாழ்வையே பெரிதாக நினைத்து விட்டான்.

"இப்படியும் ஒரு அநியாயம் உண்டா?" என்று என் தாயார் அங்கலாய்த்தாள்.

நான் லக்ஷ்மியை என்னுடன் கல்கத்தாவுக்கு வரும்படி மீண்டும் அழைத்தேன். அவள் மறுத்து விட்டாள். "நாலு வீடு வேலை செய்து பிழைத்தால் போச்சு!" என்று உறுதியாகக் கூறி விட்டாள்.

இதெல்லாம் நடந்து இரண்டு வருஷங்கள் ஆகி விட்டன. நானும் கல்கத்தாவிலிருந்து ஊர்ப் பக்கமே வரவில்லை. என்னுடைய தேக அசௌகரியம் காரணமாக அம்மா ஊரிலிருந்து வந்திருந்தாள். வந்ததும் வராததுமாக அம்மா ஒரு அதிசய சமாசாரத்தை என்னிடம் கூறினாள்.

"லக்ஷ்மிக்குப் பிள்ளை பிறந்து ஒரு வருஷமாகிறது, ஜகதா!" என்றாள் அம்மா.

"அதுதான் சரி, அம்மா! அவன் எப்பொழுது இவள் வாழ்வைக் கெடுத்தானோ இவள் மட்டும் தன் வாழ்வை ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்? மேல் நாட்டில் பெண்களுக்கு மறு மணம் செய்து கொள்ள உரிமை இருக்கும்போது நம் பெண்களுக்கும் அது அவசியம் வேண்டியதுதான்!" என்றேன்.

"சீ சீ, பைத்தியம்! முத்துதானடி குழந்தையின் தகப்பன். நீ என்னவோ உளறுகிறாயே!" என்றாள் அம்மா.

"இவள் போய் அவன் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டு அவன் வீட்டு வேலைக்காரியாக இருக்கிறாளாக்கும்!" என்றேன் நான்.

"அதெல்லாம் இல்லை, ஜகதா! அவனுக்கு வேறு கல்யாணம் ஆனபிறகு அவன் அம்மா சொர்ணம் திடீரென்று இறந்து விட்டாள். கல்யாணம் ஆன பெண்ணுக்கும் ஏதோ வியாதி வந்துவிட்டது. குடும்பத்தைக் கவனிப்பாரின்றிச் சில நாட்கள் தவித்து விட்டு, இவளை அவனாகவே வந்து அழைத்துக்கொண்டு போனான். பாரேன், சோதனையாக வேறு கல்யாணம் நடந்த பிறகு இவளுக்குப் பிள்ளை பிறக்க வேண்டும் என்று இருந்தது!" என்றாள் அம்மா.

அதுவரையில் மன உறுதியுடன் காத்திருந்த லக்ஷ்மியின் பொறுமையை எண்ணி நானும் சந்தோஷமடைந்தேன்.



கேட்காத குற்றம்!

மாஜிஸ்ட்ரேட்:—சட்! இந்தக் கேஸைக் கோர்ட்டுக்கு வெளியிலேயே தீர்த்துக் கொள்ளக் கூடாதா?

அடிதடி கேஸில் எதிரி:—நாங்க இரண்டு பேரும் அதைத்தான் செய்து கொண்டிருந்தோம். போலீஸ்காரர்கள்தான் சொல்லச் சொல்லக் கேட்காமல் இழுத்துக் கொண்டு வந்து விட்டார்கள்!

★

வியாதி இல்லை!

மாடு வாங்கினவர்:—என்னங்க, உங்ககிட்டே வாங்கின மாடு, பத்து அடிக்கு ஒரு தரம் நின்று நின்று வருதே! ஏதாவது வியாதியா யிருக்குமோ?

மாடு விற்றவர்:—அதெல்லாம் ஒண்ணுமில்லேங்க! 'கார்ப்பரேஷன்' குப்பை வண்டியை இழுத்த மாடுங்க; அதுக்கு வியாதி ஒன்றும் இல்லைங்க!

★

நன்னடத்தை!

வேலைக்கு வந்தவன்:— ஆமாங்க, நான் முந்தி இருந்த இடத்திலே ஒழுங்காக நடந்து கொண்டதற்காக முன்னாடியே போகச் சொல்லிவிட்டாங்க!

வீட்டு எஜமான்:—அதென்ன, நீ சொல்லுவது நம்பக்கூடியதா யில்லையே! எந்த இடத்தில் உன்னை அப்படிப் போகச் சொன்னார்கள்? யார் போகச் சொன்னது?

வேலைக்கு வந்தவன்:— வேலூர் ஜெயிலிலேங்க! இருபத்தைந்து நாள் முன்னதாக அனுப்பிவிட்டாங்க, வெளியே!

★

அதிசயமில்லை!

மனைவி (சினிமாக் கொட்டகையில்):—இதோ பாருங்கோ, எதிர் வீட்டில் ஒருவன் தூங்கிக் கொண்டிருக்கிறதை!

கணவன்:—போடி, பைத்தியம்! இந்தப் பிரமாத அதிசயத்தைக் காண்பிப்பதற்குத் தான் நன்றாய்த் தூங்கிக் கொண்டிருந்த என்னை நீ எழுப்பினாயோ?

பஸ் பிரயாணிகளின் துயரம்

ஸ்ரீபாதசங்கர்

சென்னையில் பஸ் பிரயாணிகள் படும் கஷ்ட நஷ்டங்களை எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் போதாது. மந்திரி கோபால் ரெட்டி அவர்கள் பஸ் வருமானம் குறைந்து வருகிறபடியால் அதைச் சரிப்படுத்த மூவர் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார். ஆனால் அந்தக் கமிட்டி அங்கத்தினர்களில் ஒருவராவது பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்கள் அல்ல; சொந்த மோட்டாரிலேயே போகிறவர்கள். அவர்கள் எப்பொழுது கூடப் போகிறார்களோ, என்ன செய்யப் போகிறார்களோ, தெரியாது.

இன்றைய தினம் ஓடுகின்ற பஸ்களின் நிலைமையைப் பார்த்தால் அவை இன்னும் ஒரு வருஷம்கூட ஓடாது போல் இருக்கிறது. என்ன ஆட்டம்! என்ன சத்தம்! உடம்பைக் குலுக்கித் தள்ளிவிடுகிறது; காதைச் செவிடாக்கி விடுகிறது. இது மட்டுமா? — நின்று கொண்டு பிரயாணம் செய்பவர்களுக்குப் பிடித்துக் கொள்ளக் கம்பி இல்லை. ஓட ஆரம்பிக்கும் பொழுதும், நிற்கும் பொழுதும் ஒருவர்மேல் ஒருவர் மோதிக் கொள்கிறார்கள். உட்காரும் சீட்டுகளும் கழன்று போயிருக்கின்றன. பஸ்ஸின் தரையில் ஒட்டியிருக்கும் ரப்பர் 'ஷீட்'டுகள் கிழிந்து பிரயாணிகளின் காலில் மாட்டிக் கொள்ளுகின்றன. வண்டிகளுக்குள்ளேயும், மேலேயும் ஒரே அழுக்கு. ராத்திரியிலோ வண்டிக்குள் இருக்கும் விளக்கு கண்ணுக்கே தெரிவதில்லை. கண்டக்டர்கள் டிக்கெட்டைக் கிழித்துக் கொடுப்பதற்கு வேண்டிய வெளிச்சம் இல்லை. இவைகளைக் கவனிக்க யாராவது உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்களோ, என்னவோ!— இருந்தால் அவர்களை உடனே 'டிஸ்மிஸ்' செய்ய வேண்டும். சிரத்தையுடன் நன்றாக வேலை செய்பவர்களுக்கே உத்தியோகம் கொடுக்கவேண்டும்.

ஜனங்கள் சௌகரியமாகப் பிரயாணம் செய்வதற்குத் தேவையான பஸ்கள் இல்லாவிட்டாலும் இருக்கின்ற பஸ்களையாவது சரியாக ஓட்டலாம் அல்லவா? அதுதான் இல்லை. முதலில் வெளியூர்களுக்கு சர்க்கார் பஸ் விடுவதை உடனே நிறுத்த வேண்டும். திருப்பதிக்குத்தான் ரயில் போகிறதே! சர்க்கார் பஸ்ஸில் போய்தானா மொட்டை அடித்துக் கொள்ளவேண்டும்? இதில் என்ன விசேஷமோ? கோபால் ரெட்டி காரு அப்படி ஏதாவது பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறாரோ, என்னமோ!

மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, தியாகராய நகர் ரூட்டுகளில் பஸ்களை அதிகமாகவும் பெரம்பூர் ரூட்டில் குறைவாகவும் ஓட்டுகிறார்கள். மயிலாப்பூருக்கும், திருவல்லிக்கேணிக்கும் டிராம் போகிறது. தியாகராய நகருக்கு 'எலக்ட்ரிக் ட்ரெயின்' போகிறது. ஏழைகள், தொழிலாளிகள் வசிக்கும் பெரம்பூருக்கு என்ன போகிறது? சென்ட்ரல் ஸ்டேஷனில் இரவு 8 மணிக்கு ரயிலை விட்டால் மறு வண்டி இரவு 9-30க்குத்தான்! ஆகவே, இந்த ரூட்டுகளில் வண்டிகளைக் குறைவாக விடுவது சரியாகாது.

14–7–49 அன்று நான் பெரம்பூர் போவதற்காகப் புரசவாக்கம் குளத்தண்டை பஸ் ஏறப் போனேன். அந்த 7–A ரூட்டில் அரை மணிக்கு ஒரு பஸ்தான் ஓடும். 7–30 மணிக்கு ஓடும் பஸ்ஸைப் பிடிக்க 7–20க்கே போய் நின்றேன். 7–40க்கு ஒரு வண்டி வந்தது. ஆனால் இடமில்லை.



பரட்டைத் தலையர்:— ஏன், ஐயா! இப்படிக் குழந்தையைப் போட்டு அடிக்கிறீங்க!

மிஸ்டர் நாஸவக்:— ஆம், ஐயா! இப்படித் தலையைப் பிசாசு மாதிரி விரிச்சுப் போட்டுக் கொண்டு நின்னால் கோபம் வராதா?

பிறகு 8 மணி பஸ்ஸிலாவது போகலாமென்று நின்று கொண்டிருந்தேன். 8 மணி பஸ்ஸூம் வரவில்லை. 8–30 மணி பஸ்ஸூம் வரவில்லை. 8–50 க்கு ஒருவர் சொன்னார், இந்த 'ரூட்டி'ல் இனி வரவேண்டிய பஸ்ஸே இல்லை என்று! என்ன செய்வது? வீடு போய்ச் சேரவேண்டுமே! கொஞ்ச நேரத்திற்குப் பிறகு வந்த பிராட்வே போகும் வெளியூர் பஸ்ஸில் ஏறி, அங்கு வேறு அரை மணி நேரம் காத்திருந்து, பிறகு 7–ம் நம்பர் பஸ் ஏறி, பெரம்பூருக்கு இரவு 10 மணிக்கு வந்து சேர்ந்தேன். புரசவாக்கம் குளத்திற்கும் பெரம்பூர் வீனஸ் சினிமாவிற்கும் நான்கு ஸ்டேஜுகள்; கட்டணம் 3 அணா. என் வீடும் அதற்கு அருகில்தான். ஆனால் அன்று ஐந்தரை அணா செலவு செய்தும் 3 மணி நேரம் காத்திருந்தும் 6 பர்லாங்கு தூரம் நான் நடக்கவேண்டியதாயிற்று.

16–ம் தேதி 15–ம் நம்பர் பஸ் ஏற நானும் இரண்டு நண்பர்களும் டாக்டர் குருசாமி ரோட் பஸ் ஸ்டாண்டில் புரசவாக்கம் செல்வதற்காகப் பகல் 3–30 மணிக்கு வந்து நின்று கொண்டிருந்தோம். 20 நிமிஷத்துக்குப் பிறகு ஒரு வண்டி வந்தது; இடமில்லை. இன்னும் கொஞ்ச நேரம் கழித்து மற்றொரு வண்டி வந்தது; அதிலும் இடமில்லை. வேறு வழியில்லாமல் பஸ் புறப்படும் இடத்திற்கு ஒரு வண்டியில் ஏறிப் போனோம். நாங்கள் மூன்று பேர். ஆனால் அங்கு புறப்பட இருந்த பஸ்ஸிலோ இருவருக்குத்தான் நிற்க இடமிருந்தது!

3 அணா செலவில் 25 நிமிஷத்தில் சேரவேண்டிய இடத்திற்கு ஐந்தரை அணா செலவும் மூன்று மணி நேரமும். ஒன்றரை அணாவில் 15 நிமிஷத்தில் சேர வேண்டிய இடத்திற்கு இரண்டரை அணாவும் ஒரு மணி நேரமும்! இதுவேதான் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பிரயாணிகள் படும் கஷ்டமும், நஷ்டமும். இது பெரும் அநியாயம்.


பஸ் ஸ்டாண்டில் மணிக் கணக்காக நிற்கவேண்டியிருந்தும் நிற்பவர்களுக்குத் தக்க வசதியும் கிடையாது. பஸ்கள் புறப்பட ஆரம்பிக்கும் இடங்களிலாவது உடனே 'ஷெட்'டுகள் கட்டவேண்டும். பெண்கள் குழந்தைகளை வைத்துக் கொண்டு வெய்யிலிலும், மழையிலும் மணிக் கணக்காக நின்று தவிப்பது பஸ் நடத்தும் அதிகாரிகளுக்குச் சம்மதமாக இருக்கலாம். ஆனால் பொது ஜனங்கள் யாரும் இதைச் சகிக்க மாட்டார்கள்; சபிக்கத்தான் செய்வார்கள்.

பம்பாய், ஹைதராபாத், கல்கத்தா நகரங்களில் பஸ் சர்வீஸ் நன்றாக இருக்கிறது. அழகான, சௌகரியமான பஸ்கள். கூட்டம் கொடுப்பதில்லை; சத்தம் காதைச் செவிடாக்குவதில்லை. பெண்களுக்குப் பிரத்தியேகமான இடம் உண்டு. டிக்கெட் புஸ்தகங்கள் வரிசையாகத் தகரப் பெட்டியில், தகர அட்டையில் கோர்த்து வைத்திருக்கிறார்கள். ஆதலால் சுலபமாகவும், சீக்கிரமாகவும் கண்டக்டர்கள் டிக்கெட் கொடுக்க முடிகிறது.

டிக்கெட் கொடுப்பதற்காக ஐந்து அல்லது பத்து நிமிஷம்—அதிலும் ஆபீஸ் போகிற வேளையில்—ஸ்டேஜ்களில் பஸ்களை நிறுத்தி வைத்து விடுகிறார்கள். சென்னையைத் தவிர வேறு எந்த நகர்களிலும் இப்படி நிறுத்துவதே கிடையாது.


சென்னையில் ஓடிக்கொண்டே இருக்கிற பஸ்கள் திடீரென்று நின்றுவிடுகின்றன. ஆபீஸ் போகும் நேரத்திலும் இரவில் வீடு திரும்பும் நேரத்திலும் பஸ்கள் நின்று விட்டால் ஜனங்களுக்கு ஏற்படும் கஷ்டம் சொல்லி முடியாது.

சர்க்கார் நியமித்திருக்கும் மூவர் கமிட்டி மாதக்கணக்காகத் தாமதம் செய்யாமல் உடனடியாக இந்தச் சிறு சீர்திருத்தங்களையாவது செய்தால் ஓரளவு சென்னைப் பஸ் பிரயாணிகளின் துயரம் நீங்கும்.



பிரபல திருமணம்

ரயில்வே மந்திரி கனம் கே. சந்தானம் அவர்களின் சகோதரர் புதல்வி ஸ்ரீமதி கோதைக்கும் சேலம் அட்வகேட் ஸ்ரீ கோபாலய்யங்கார் அவர்களின் புதல்வர் ஸ்ரீ ஜி. பார்த்தசாரதி பி. ஏ. அவர்களுக்கும் ஸ்ரீரங்கத்தை அடுத்த உத்தமர் கோவிலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. பல நண்பர்களும் உறவினர்களும் திருமணத்துக்கு விஜயம் செய்து மணமக்களை வாழ்த்தி மகிழ்ந்தார்கள்.



13. ஆத்ம தரிசனம்

ரவுலட் கமிட்டியின் அறிக்கையை எதிர்த்து நாடெங்கும் கிளர்ச்சி ஏற்பட்டு வந்தது. அந்தக் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்து நடத்துவதற்காகக் காந்தி மகான் தான் மேற்கொண்டிருந்த பாலருந்தா விரதத்தை ஓரளவு தளர்த்தி உடம்பைக் குணப்படுத்திக் கொண்டு வந்தார். அதே சமயத்தில் ரவுலட் கமிட்டி சிபார்சுகளை யொட்டிச் சட்டம் செய்வதில் சர்க்காரின் உறுதி வலுவடைந்து வந்தது.

ரவுலட் கமிட்டியின் சிபார்சுகளை யொட்டிச் சர்க்கார் ஒரு மசோதா தயார் செய்து வெளியிட்டார்கள். பிறகு அந்த மசோதா இந்திய சட்ட சபையில் விவாதத்துக்கு வந்தது.

அப்போதெல்லாம் இந்திய சட்ட சபையில் உத்தியோகஸ்தர்களும் சர்க்கார் நியமித்த அங்கத்தினர்களுமே அதிகமாயிருந்தார்கள். பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் ஒரு சிலர் தான். அவர்களிலும் மக்களின் கட்சியை எடுத்துச் சொல்லக் கூடியவர்கள் மிகச் சிலராயிருந்தனர்.

இந்திய சட்ட சபை விவாதத்தின் போது ரவுலட் மசோதாவை எதிர்த்து அதிதீவிரமான பிரசங்கம் செய்தவர் மகாகனம் சீனிவாச சாஸ்திரியார். அம் மசோதாவுக்கு விரோதமான வாதங்களையும் கண்டனங்களையும் மகா கனம் சாஸ்திரியார் சரமாரியாகப் பொழிந்தார். அந்த மசோதாவைச் சட்ட மாக்குவதினால் விளையக்கூடிய விபரீதங்களைப் பற்றிச் சர்க்காருக்கு எச்சரிக்கை செய்தார்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தவர்களில் இருவர் முக்கியமானவர். ஒருவர் இராஜப் பிரதிநிதி செம்ஸ்போர்டு பிரபு; இன்னொருவர் காந்தி மகான். இந்திய சட்ட சபையின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காகக் காந்தி மகான் அங்கே போயிருந்தது அதுதான் முதல் தடவை. சாஸ்திரியாரின் ஆவேசமான உணர்ச்சி நிறைந்த பேச்சு செம்ஸ்போர்டு பிரபுவின் மனதைக் கூட மாற்றியிருக்கலாம் என்று மகாத்மா எண்ணினார். ஆனால் அவ்விதம் நடைபெறவில்லை. தூங்கிக் கொண்டிருக்கும் மனிதனைத் தட்டி எழுப்பலாம்; தூங்குவதாகப் பாசாங்கு செய்கிறவனை என்ன செய்தாலும் எழுப்ப முடியாது அல்லவா?

ஆகையால் தேசத்தில் நடந்த கிளர்ச்சியோ, சட்ட சபையில் சாஸ்திரியார் நிகழ்த்திய பிரசங்கமோ, சர்க்காரின் தீர்மானத்தை மாற்ற முடியவில்லை. உத்தியோக அங்கத்தினர்கள்—நியமன அங்கத்தினர்களின் வோட்டுகளால் இந்திய சட்ட சபையில் ரவுலட் மசோதா நிறைவேறி விட்டது.

காந்தி மகாத்மா இராஜப் பிரதிநிதிக்கு அந்தரங்கமாகவும் பகிரங்கமாகவும் எழுதிய கடிதங்களினாலும் யாதொரு பயனும் விளையவில்லை.

இத்தகைய நிலைமையில் சென்னையிலிருந்து மகாத்மா காந்திக்கு அழைப்புக் கடிதம் வந்தது. மகாத்மா காந்தியின் உடல் நிலை இன்னமும் திருப்திகரமாக இல்லை. பொதுக் கூட்டங்களில் உரத்துப் பேசச் சக்தி கிடையாது. சிறிது நேரம் நின்றுகொண்டு பேசினால் உடம்பு நடுங்கத் தொடங்கியது. இவ்வளவு பலவீனமான நிலைமையிலும் மகாத்மா காந்தி

பொருத்தம்!



கிராப்புக்காரர் :—அதோ ராஜா மாதிரி ஒருவர் ஜோராய் நடந்துபோகிறாரே, அவர் யார் தெரியுமா?

வழுக்கைக்காரர் :—தெரியாமல் என்ன? அவர் தான் நம்ம மாப்பிள்ளை நடராஜன்!

தென்னாட்டிலிருந்து அன்பர்கள் அனுப்பியிருந்த அழைப்பை ஒப்புக்கொண்டு சென்னைக்குப் பிரயாணமானார்.

மகாத்மாவின் சென்னை விஜயம் மிக முக்கியமான விளைவுகளுக்குக் காரணமாயிருந்தது. சென்னையில் இருந்தபோது தான் காந்திமகான் ரவுலட் சட்டத்தை எதிர்த்துச் சத்தியாக்கிரஹம் செய்வதற்கு ஒரு வழியைக் கண்டு பிடித்தார். அதன் காரணமாக இந்தியா தேசம் நெடுங் காலமாகத் தான் இழந்திருந்த ஆத்மாவைத் திரும்பவும் பெற்றது. பாரத சமுதாயம் புனர்ஜன்மம் எடுத்தது.

சென்னைக்குச் சென்றது பற்றிக் காந்தி மகான் தம் சுயசரிதத்தில் எழுதியிருப்பதைக் கேளுங்கள் :—

"தென்னாட்டுக்கு எப்போது சென்றாலும் என் சொந்த இடத்தில் இருப்பதாகவே எனக்குத் தோன்றும். தென்னாப்பிரிக்காவில் நான் செய்த வேலையின் காரணமாக, தமிழர்கள் மீதும் தெலுங்கர்கள் மீதும் எனக்கு ஏதோ தனி உரிமை உண்டென்று நான் எண்ணுவதுண்டு. தென்னாட்டார் என் நம்பிக்கையை ஒரு போதும் பொய்ப்படுத்தியதில்லை. ஸ்ரீ கஸ்தூரி ரங்க ஐயங்காரின் கையொப்பத்துடன் அழைப்பு வந்தது. ஆனால் அந்த அழைப்புக்குப் பின்னால் நின்றவர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி என்பதாகச் சென்னைக்குப் போகும் வழியில் அறிந்து கொண்டேன்.

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி சமீபத்தில் தான் ஸேலத்திலிருந்து சென்னைக்கு வக்கீல் தொழில் நடத்த வந்திருந்தார். காலஞ்சென்ற ஸ்ரீ கஸ்தூரிரங்க அய்யங்கார் முதலியோர் அவரை வற்புறுத்தி அழைத்திருந்தார்கள். பொது வாழ்வில் இன்னும் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்பது அவரது நோக்கம். சென்னையில் ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியின் விருந்தினராகவே நாங்கள் தங்கினோம். ஆனால், இரண்டு மூன்று நாள் ஆனபிறகே இதை நான் கண்டு பிடித்தேன். ஸ்ரீ கஸ்தூரிரங்க அய்யங்காருக்குச் சொந்தமான வீட்டில் நாங்கள் தங்கியிருந்தபடியால் நாங்கள் அவருடைய விருந்தினர் என்று எண்ணியிருந்தேன். மகாதேவ தேஸாய் எனக்கு உண்மை தெரிவித்தார். அவர் விரைவில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாருடன் நெருங்கிய பழக்கம் கொண்டார். ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி தமக்கு இயற்கையாக உள்ள ஸங்கோச குணத்தினால் எப்போதும் பின்னாலேயே இருந்தார். ஆனால் மகாதேவ் தேஸாய் எனக்கு அவரைப் பற்றித் தெரியப்படுத்தினார். 'இந்த மனிதரிடம் நீங்கள் பழக்கம் செய்து கொள்ள வேண்டும்' என்று அவர் ஒரு நாள் கூறினார்.

அவ்வாறே செய்தேன். போராட்டத்துக்குரிய திட்டங்களைப் பற்றி நாங்கள் தினந்தோறும் விவாதித்தோம். ஆனால் பொதுக் கூட்டங்கள் நடத்துவதையல்லாமல் வேறெந்த வேலைத் திட்டமும் எனக்குத் தோன்றவில்லை. ரவுலட் மசோதா முடிவில் சட்டமாகி விட்டாலும் அதை எதிர்த்து எப்படி சாத்வீக மறுப்புச் செய்வதென்பது எனக்கு விளங்கவில்லை. அரசாங்கம் அதற்குரிய சந்தர்ப்பம் அளித்தால்தானே சட்டத்துக்குக் கீழ்ப்படிய மறுக்கலாம்? அதில்லாவிடில் மற்றச் சட்டங்களையும் சாத்வீக முறையில் மறுத்தல் கூடுமா? இது போன்ற பல விஷயங்களையும் குறித்து நாங்கள் விவாதித்தோம்.

இது சம்பந்தமாக நன்கு ஆராய்ச்சி செய்யும் பொருட்டு ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்கார், தலைவர்களின் சிறு மகாநாடு ஒன்றைக் கூட்டினார். அதில் சிறப்பாகக் கலந்துகொண்டவர்களில் ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரும் ஒருவர். சத்தியாக்கிரஹ சாஸ்திரத்தின் நுட்பமான அம்சங்

போகலாமா?



களையுங்கூட விளக்குமாறு ஒரு விரிவான நூல் நான் எழுத வேண்டுமென்று அவர் யோசனை சொன்னார்.

இந்த யோசனைகளெல்லாம் நடந்து கொண்டிருக்கையில் ரவுலட் மசோதா சட்டமாகி விட்டது என்னும் செய்தி கிடைத்தது. அன்றிரவு அதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டே நித்திரையில் ஆழ்ந்தேன். மறுநாள் அதிகாலையில் சிறிது வழக்கத்தைவிட முன்னதாகவே விழித்துக் கொண்டேன். தூக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையிலுள்ள நிலையில் இருக்கும்போது சட்டென்று எனக்கு வழி புலனாயிற்று. கனவு கண்டது போலவே இருந்தது. காலையில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியிடம் அதைப் பற்றிய விவரம் முழுவதும் கூறினேன்.

'ஒரு நாள் பூரண ஹர்த்தால் (வேலை நிறுத்தம்) நடத்துப்படி தேச பக்தர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று நேற்றிரவு கனவில் யோசனை உதித்தது. நம்முடைய போராட்டம் புனிதமான போராட்டம் ஆதலின், ஆத்மத் தூய்மைக்குரிய ஒரு காரியத்துடன் அதைத் தொடங்குவதே தகுதியென்று நினைக்கிறேன். அன்றைய தினம் இந்திய மக்களனைவரும் தங்கள் வேலைகளை நிறுத்தி உபவாசமிருந்து பிரார்த்தனை நடத்த வேண்டும். எல்லா மாகாணங்களும் நமது வேண்டுகோளுக்கு இணங்குமா என்று சொல்லுதல் கஷ்டம். ஆனால் பம்பாய், சென்னை, பீஹார், சிந்து இம்மாகாணங்களைப் பற்றி எனக்கு நிச்சயமுண்டு. இவ்விடங்களிலெல்லாம் ஹர்த்தால் சரிவர நடந்தாலும் நாம் திருப்தியடையலாம்' என்றேன்.

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி உடனே இந்த யோசனையை அங்கீகரித்தார். பின்னால் மற்ற நண்பர்களுக்கு அது தெரிவிக்கப் பட்டபோது அவர்களும் அதை வரவேற்றார்கள். சுருக்கமான விண்ணப்பமொன்றை நான் தயாரித்தேன். முதலில் 1919 வருஷம் மார்ச்சு மாதம் 30-ந் தேதி ஹர்த்தால் தினமாகக் குறிக்கப்பட்டது. பின்னர் ஏப்ரல் மாதம் 6-ந் தேதிக்கு மாற்றப்பட்டது. ஜனங்களுக்குச் சொற்பகால அறிக்கையே தந்தோம். வேலை உடனே தொடங்கவேண்டியிருந்தபடியால் நீண்டகால அறிக்கை தருவதற்கு அவகாசம் இல்லை.

ஆனால் அவ்வற்புதம் எப்படி நடந்ததென்று யாரால் சொல்ல முடியும்? பாரத நாடு முழுவதிலும் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரையில் நகரங்களும், கிராமங்களும் அன்றைய தினம் பரிபூரணமான ஹர்த்தால் அனுஷ்டித்தன. அது யாரும் எதிர்பாராத அற்புதமான காட்சியாயிருந்தது."



ஒரு வேடிக்கை!

கே.ஏ. அப்பாஸ்

மொழிபெயர்ப்பு: கே. கணேஷ்

பெரிய பஞ்சத்தின்போது பாபு பாரிசால் கிராமத்திலிருந்து கல்கத்தாவுக்குக் கால்நடையாகவே சென்றான். வழியில் கிழவர்கள், வாலிபப் பெண்கள், பால் குடிக்கும் குழந்தைகள் ஆகியோர் நூற்றுக் கணக்கில் விழுந்து சாவதைக் கண்ணாலே கண்டான்; ஆனால் பாபு மட்டும் சாகவில்லை. அவன் உயிர் தப்பிப் பிழைத்தது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. ஒருவேளை அவனைக் கவனிக்கத் தாய், தகப்பன், பெண்டாட்டி பிள்ளை குட்டிகள் உதவோர் இல்லாதது தான் அதற்குக் காரணமோ, என்னவோ! அவனே நினைத்தபடி எங்கும் போகலாம். காலையில் மற்றவர்களெல்லாம் தூங்கிக் கொண்டிருக்கையில், தெருக்களில் பிச்சை எடுக்கப் போய்விடுவான். குப்பைத் தொட்டிகளிலுள்ள உணவுகளைத் தேட முண்டியடித்துப் போய் அவனே எல்லோருக்கும் முன் வரிசையில் சுட சுடக் கஞ்சி பெறுவதற்குக் காத்திருப்பான்.

அவனோடு சேர்ந்த மற்ற அகதிகள், 'அவன் ஒரு மைல் தூரத்திலேயே உணவின் வாசனையை மோப்பம் பிடித்து விடுவானே' என்று கூறுவார்கள். பட்டணத்தில் யாராவது தர்மாத்மாக்கள் தானம் கொடுத்தால், அங்கே பாபு நிச்சயமாக இருப்பான். எங்காவது சமையலறையிலிருந்து எச்சிற் பண்டங்கள் வீசப்பட்டால் அவை தரையில் விழுவதற்கு முன்னரே பிடிப்பதற்கு பாபு தயாராக இருப்பான். அவன் உணர்ச்சிகளெல்லாம் உணவு என்ற ஒரே விஷயத்தின் மீதே பதிந்திருந்தது. எங்காவது தூரத்தே ஒரு மைலுக்கு அப்பால் சமைக்கப்பட்டால் அந்த வாசனையை அவன் மூக்கு நிட்சண்யமடைந்து வேட்டை நாய்போல் மோப்பம் பிடிக்கும். முழு இருட்டடிப்பில்கூட வீதியில் ஏதாவது ஒரு தானியம் விழுந்திருந்தாலும் கண்டு பிடித்து விடுவான். தூங்கும் பொழுது பாலாறுகளையும், சோற்று மலைகளையும், தூண்போல் ஆகாயத்தை நோக்கி வளர்ந்த ரசகுல்லாக்களையும் சொப்பனம் காண்பான். விழித்திருக்கும் பொழுதெல்லாம் அடுத்த வேளை நிஜச் சாப்பாடு கிடைக்கும் வழியை ஆராய்வான். சாப்பாட்டுக்காக பாபு வகுக்கும் திட்டங்களைப்போல் ஒரு ராணுவ ஜெனரல்கூட, ஒரு கடும் யுத்தத்திற்குத் திட்டமிட மாட்டான். பாபு உணவை எண்ணித் தன்னையே மறந்திருப்பதுபோல் ஒரு காதலன்கூடத் தன் காதலியை எண்ணி அவ்வளவு ஏங்க மாட்டான். பட்டினி அவனது மற்ற எல்லா உணர்ச்சிகளையும் கொன்று விட்டது. தெருவில் யாராவது இள நங்கை நடந்து சென்றால்கூட, அவளது கன்னங்கள் நன்றாய்ச் சுடப்பட்டு உப்பிய ரொட்டிபோல் இருக்கிறதென்றும், அவளது நிறம் மாதுளங்காய்போல் இருக்கிறது என்று மட்டுமே எண்ணுவான். அவள் மட்டும் வெறும் பெண்ணாக இல்லாமல் ஒரு வாய்ச் சோறாகவோ ஒரு ஆப்பிளாகவோ ஒரு ரசகுல்லாவாகவோ இருந்திருந்தால் நிச்சயமாக அவளையே தின்றிருப்பான்!

அரசாங்கத்தின் அறிக்கைப்படி இனிமேல் வங்காளத்தில் பஞ்சமே கிடையாது. கிராமங்களிலிருந்து வந்து முற்றுகையிட்ட அகதிகளெல்லாம் கல்கத்தாவிலிருந்து விரட்டப்பட்டனர். ஆனால் பாபு மட்டும் எப்படியோ போலீஸின் கழுகுக் கண்களிலிருந்து தப்பி, கல்கத்தாவில் இன்னும் வசித்துக் கொண்டுதா னிருந்தான்.

கொடிய மேகத்தைப்போல் பஞ்சம் விவசாயிகளின் மண் குடிசைகளையெல்லாம் கடந்து சென்றது. அதன் கரிய நிழல் நகரங்களிலும் பட்டணங்களிலுமுள்ள மத்திய தர வகுப்பினர்களின் இல்லங்களின் மீதும் படர்ந்தது. பஞ்ச நிவாரண சமையற்கூடங்களெல்லாம் மூடப்பட்டன. ஒருவர்கூடத் தானம் கொடுப்பதில்லை. குப்பைத் தொட்டியில் ஒருவரும் அலட்சியமாக உணவை வீசுவதில்லை. அப்படியானால் பாபு எப்படிச் சாப்பிடுவான்?

அவன் கற்ற எல்லா முறைகளையும் கைக்கொண்டான். மானமின்றிப் பிச்சை பெறுத்

தான்; குப்பை கூளங்களை ஆராய்ந்து உணவு தேடினான். ஆனால் ஒரு பொழுதும் திருடி னது மட்டும் கிடையாது. எக்காரணத் தாலோ இத்தகைய பாதகத் தொழிலைக் கைக் கொள்ளவில்லை. ஒருவேளை கடவுள் மீதுள்ள பயமோ பக்தியோ என்னவோ? அவன் ஒவ்வொரு முறையும் உணவு திருட எண்ணும்பொழுது ஏதோ ஓர் உணர்ச்சி அவனைத் தடுத்து விடும்.


ஒருவனுடைய ஒழுக்கத்திற்கும் ஒரு எல்லை யுண்டல்லவா? மூன்று நாள் பட்டினி கிடந்த பின்னர் அவனது மனச்சாட்சியும் லேசாக மறைந்து கொண்டிருந்தது. வயிறு ஒட்டிப்போய் அவன் கால் தள்ளாடியது. நடக்க முடியவில்லை. அவனது கண்களில் ஒரு விசித்திரச் சோர்வு—சாவின் முன்னறி விப்பு தோன்றியது. உணவு தேடுவது எப்படி? பிச்சை கேட்க, அவன் உதட்டை அசைக்கக்கூட முடியவில்லை. அவன் மனதில் எண்ணங்கள் தோன்றவில்லை; இருதயத்தில் உணர்வில்லை.

நான்காம் நாள் கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே எதையாவது திருடித் தின்பதென முடிவு செய்தான் பாபு. ஆனால் எங்கே? எப்படித் திருடுவது? தன் னிடம் மிகுதி யிருந்த பலம் முழுவதை யும் வரவழைத்துக் கொண்டு கால்கள் தள்ளாட 'தர்மத்தலா வெல்லஸ்லி' வீதிவழியாக 'சௌரிங்கி' என்னும் இடத்தை நோக்கி நடந்தான்.

பட்டணத்தில் ஒரே களிப்புணர்ச்சி பொங்கி யிருந்தது. வீட்டு மாடங்களி லும் முற்றங்களிலும் வானவில் போன்ற பல நிறங் கொண்ட கொடிகள் தொங் கின. பள்ளிகளில் மணி யடித்தன. சந்தோஷத்துடன் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் பல முகங்கள் தென் பட்டன. நன்றாய் நாளுக்காக உடுத்திய மங்கைகள் சௌரிங்கியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர். காக்கி யுடை உடுத்திய சோல்ஜர்கள் நடுத் தெருவிலும், வீட்டு வாசற்படிகளிலும் புட்டியோடு உட்கார்ந்த வண்ணம் குடித்துக் கொண்டிருந்தனர். "ஏதோ ஒரு கொண்டாட்டம் போலிருக்கிறது" என்று பாபுவின் மனதில் தோன்றியது. ஒரு மூடிய கடையின் வாயிலில் ஒரு குடிகார சோல்ஜர் அரைகுறையாகக் குடித்த பாட்டிலைக் கையில் வைத்துக் கொண்டு தூங்கி வழிந்து கொண்டிருப்ப தைக் கண்ட பாபுவுக்கு, ஒரு புதிய யோசனை தோன்றியது. சுற்று முற்றும் பார்த்துத் தெருவில் ஒருவரு மில்லாமல் போகவே, சோல்ஜரின் கையிலிருந்த பாட்டிலைப் பிடுங்கினான். அதிலிருந்து ஒரே துர்நாற்றம் வீசியது. ஆயினும் பாபுவுக்கு அழுகிய உணவுகளை உண்டு பழகி யிருந்த தால் தெரியவில்லை. பாட்டிலிலிருந்த திரா வகத்தை ஒரே மடக்காகத் தொண்டையில் ஊற்றினான். ஊற்றியதும் யாரோ தனது தொண்டையில் மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்ததுபோல் தோன்றியது. பின் அதன் ஜ்வாலைகள் விரைவில் குடலிற் குள்ளும் வயிற்றிற்குள்ளும் சென்றன. அவன் வயிற்றிற்குள் நீராவி தோன்றுவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அப் பொழுது யாரோ அவனது நெற்றியில் தாக்கினார்கள். தலை நிமிர்ந்து யாரென நோக்கினான்—அது ஒரு சுவராக இருந்தது.

அதன் பின்னர் அவனது கால்கள் எப்படி எங்கு இழுத்துச் சென்றன வென் பதே அவனுக்குத் தெரியவில்லை. ஆயினும் அவனது உள்ளுணர்ச்சி உணவுள்ள இடத்தின் அருகில் இருப்பதாகக் காட்டி யது. அவன் தனது பருத்த புருவமுள்ள

தம்பி, அழாதே!



கீழே விழுந்தவர்:—தம்பி, நான் கீழே விழுந்துவிட்டேன் என்று அழு கிறாயா? வேண்டாம், அழாதே!

பையன்:—நான் உங்களுக்காக அழு வில்லை, மாமா! நான் வாங்கிக் கொண்டு வந்த வாழைப்பழம் வீணாய்ப் போய் விட்டதே என்று தான் அழுகிறேன்.

கண்களை அகல விரித்துத் தன் கனவு நனவாகியுள்ளதைக் கண்டான். அவனுக்கு முன்னுல் திறந்த கதவுக்கு மப்பால்—கேக்குகளும், மிட்டாய்களும், கிண்ணங்கள் நிறைய சூப்புகளும், தாம்பாளம் நிறைய தக்காளிகளும், பழங்களும், காய்கறிகளுமாகத் தென்பட்டன. அது 'கிராண்டு ஹோட்டலின்' சமயலறை. பாபு அதிகமாகக் குடித்திருந்ததால் அதைப்பற்றித் தெரிந்து கொள்ளவோ, புரிந்து கொள்ளவோ முடியவில்லை. ஒரு க்ஷணமும் தாமதமின்றி உள்ளே நுழைந்து ருசியுள்ள ஒரு தின்பண்டத்தை எடுக்க அவன் கை சென்றபொழுது, மேஜையின் மீது ஒரு பெரிய கத்தியின் அருகிலிருந்த அரைத்துண்டு ரொட்டியைக் கண்ணுற்ருன்.

"ரொட்டி! ஆஹா ரொட்டி!" என்று அவனது மனது இன்ப கீதம் பாடியது. மற்ற உணவுகளைத் தொடுவதற்கு முன்னரே ரொட்டியை எடுத்தான். எப்பொழுதும் பழக்கமான மாவின் மணமும் புளிப்பின் வாசனையும் மூக்கைத் துளைக்கவும், தனக்குள்ளாகவே 'ரொட்டிக்கு ஈடானது இந்த உலகத்தில் என்ன இருக்கிறது?' என்று கூறிக் கொண்டான். அதனைத் தின்ன வாயைத் திறந்தான். ஆனால் வாய் திறந்தபடியே நின்று விட்டது.

உடனே கோபக் குரல்களுடன் பல சமையற்காரர்கள் திறந்த கதவின் வழியாக வந்தார்கள். பாபு அகப்பட்டுக் கொண்டான். அவனது கையிலிருந்த ரொட்டி பிடுங்கப்பட்டது. அவனை அறைந்து, உதைத்து, இழுத்து முடிவில் போலீஸார் வசம் ஒப்புவித்தார்கள். அவனை இழுத்துச் சென்ற பொழுது, "அயோக்கியப் பயல்! இவன் இந்த வெற்றி தின டின்னர் சாப்பிடலாமென்று நினைத்தானே?" என்று ஒருவன் கூறக் கேட்டான். மற்றவரெல்லாம் அதைக் கேட்டுச் சிரித்தார்கள். அவர்கள் எதற்காகச் சிரித்தார்கள் என்பதே அவனுக்குப் புரியவில்லை. 'டின்னர்' என்பது என்ன என்று பாபுவுக்குத் தெரியும். உணவு சம்பந்தமான உலகத்திலுள்ள எந்த வார்த்தைதான் பாபுவுக்குத் தெரியாமலிருக்கும்? ஆனால் 'வெற்றி தினம்' என்றால் என்ன? 'லாக்அப்பி'லிருந்த பல மணி நேரமும் இதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான்.

சங்கிலி அசையும் சப்தத்தைத் தொடர்ந்து சிறையின் கற்சுவரில் சப்பாத்தி போன்ற வட்டமான வெளிச்சம் தோன்றியது. ஓர் இரும்புப் பாத்திரத்தைத் தள்ளி 'இதைத் தின்னு' என்று ஒரு குரல் உருமிற்று.

பாபு கீழே குனிந்து பார்த்துவிட்டுத் திடீரெனச் சிரிக்கத் தொடங்கினான்.

"என்னடா உனக்கு வந்த சிரிப்பு? அப்படி என்ன வேடிக்கை?" என்று போலீஸ்காரன் அதிசயத்துடன் கேட்டான்.

"என்ன சிரிப்பு? என்ன வேடிக்கை?"—பாபுவுக்கு மேலும் சிரிப்புத் தாங்கவில்லை. தொடர்ந்து சிரித்துக் கொண்டே இருந்தான். சிரித்துச் சிறிது ஓய்ந்ததும் தரையைப் பார்ப்பான்; பார்த்ததும் மீண்டும் சிரிக்கத் தொடங்கி விடுவான்.

"படு பைத்தியக்காரன்" என்று போலீஸ்காரன் தீர்மானித்துப் போய் விட்டான். ஆனால் பாபு போலீஸ் ஸ்டேஷனின் கற்சுவர்களைத் தனது சிரிப்பால் உலுக்கிக் கொண்டிருந்தான். தரையில் இருந்த இரும்புப் பாத்திரமும் அதிலுள்ள அரைத் துண்டு காய்ந்த ரொட்டியுமே அவனுக்குச் சிரிப்பு வரக் காரணமாக இருந்தன.

இந்திய சர்க்கார் விளம்பர இலாகாவின் மாஜி தலைமை ஆபீஸர் ஸ்ரீ ஏ. எஸ். ஐயங்காரின் புதல்வி சௌபாக்கியவதி ருக்மணிக்கும் பம்பாய் சர்க்காரின் போக்குவரவு போர்டு காரியதரிசி ஸ்ரீ ஏ. கே. சடகோபனின் குமாரர் சிரஞ்சீவி சுந்தரராஜனுக்கும் சென்னையில் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. மணமக்களை வாழ்த்திக் கவர்னர் ஜெனரல் ராஜாஜி அவர்கள் ஆசிச் செய்தி அனுப்பியிருந்தார்கள்.

வாழ்க ருக்மணி - சுந்தரராஜன்!



அக்கப் போர்

ரா. சு.

தேசிய பாஷை மகாநாடு ஒன்று புது டில்லியில் வருகிற ஆகஸ்டு மாதம் ஆறு ஏழு தேதிகளில் கூட இருக்கிறது. தேசத்தின் பல பாகங்களிலிருந்து பிரதிநிதிகள் மேற்படி மகாநாட்டுக்கு வருவார்களாம். ஆதலால் பிரதிநிதிகளுக்குத் தேசிய உணவு அளிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார் ஒரு போஜனப் பிரியர். 'அயிட்டங்கள்' பின் வருமாறு இருக்கலாம்:—மைசூர் ரஸம், மதராஸ் இட்லி, பாம்பே மிக்ஸ்சர், சூரத்காரி, பாட்னா பூரி, காசி ஹல்வா, காஷ்மீர் பழவகைகள், மலையாள அவியல்···அடேடே! ஆந்திர நாட்டை மறந்துவிட்டோமே! சாப்பிட்ட பிறகு இப்படி உணவை (சாப்பிட்டு)ச் சேதம் செய்கிறோமே என்று கண்களில் கண்ணீர் வரும்படி செய்ய ஆந்திர தேச மிளகாய்க் கொரடாவையும் கடைசியில் வைத்துக் கொள்ளலாமல்லவா?

★

ஸ்ரீ டி. பிரகாசம் சமீபத்தில் டில்லி ரயில்வே ஸ்டேஷனில் இறங்கிய போது அவரை ஒரு பெருங்கூட்டம் சூழ்ந்து கொண்டதாம். அவர் கொண்டுபோன புகார் மூட்டையைச் சுமப்பதற்காக ஓடி வந்த போர்ட்டர்களின் கூட்டமாகத் தான் இருக்க வேண்டும்.

★

தஞ்சை ஜில்லா பலவிதங்களில் புகழ் பெற்ற ஜில்லா. அறிவாளிகளுக்குப் பிறப்பிடமான ஜில்லா: காவேரி பாய்ந்தோடும் ஜில்லா; மலைகளே இல்லாத ஜில்லா; சமுத்திரக் கரையுள்ள ஜில்லா; கோயில்கள் பல கொண்டுள்ள ஜில்லா; நெல் விளையும் ஜில்லா. இத்தனை புகழும் போதாது என மேலும் ஒரு புகழ் உண்டாகி இருக்கிறது. சமீபத்தில் அறந்தாங்கிக்கு அருகில் சில ஹரிஜனங்கள் குழி தோண்டிய போது பூமியிலிருந்து சிற்ப வேலைப் பாடமைந்த நாற்பத்தொன்பது விக்ரஹங்களை வெளிப் படுத்தினார்களாம். இதில் என்ன புகழ் இருக்கிறது எனக் கேட்காதீர்கள். பல ஆண்டுகளுக்கு முன்பே விக்ரஹங்களைக் குழி தோண்டிப் புதைத்த புகழ்தான்!

★

கோயமுத்தூர் முதலிய நான்கு ஜில்லாக்களில் மதுவிலக்குச் சீராக நடைபெறவில்லையாம்.

முன்பெல்லாம் அதாவது மதுவிலக்கு இல்லாத போது தென்னை மரத்தில் கள் தயாரிக்கப் பானையைக் கட்டினால் குரங்குகளின் தொல்லை பொறுக்க முடியாதாம். பானையை ஓட்டை செய்து சொட்டுக் கள்ளை ருசி பார்த்து விட்டுக் கூத்தாடுமாம். மறு நாள் பானையில் ஒரு சொட்டுக் கள் கூட இருக்காதாம். தென்னந் தோப்புக்காரர்களைக் குரங்குகள் வளர்க்கும்படி சொன்னால் கள்ளத்தனமாகக் கள் தயாரிக்க முடியாதல்லவா? எப்படி என் யோசனை? குறைகள் பல இருக்கலாம். ஆயிரம், இரண்டாயிரம் என்று சம்பளம் வாங்கும் சர்க்கார் நிபுணர்களின் திட்டங்களிலேயே குறைகள் உண்டு என்கிறார்களே?

★

கடந்த ஜுலை மாதத்திலிருந்து ரேடியோவில் பெருத்த மாறுதல். இசைத் தட்டுகளுக்காகச் செலவிடப்பட்ட நேரத்தில் அரைமணி குறைக்கப்பட்டு கல்வி ஒலி பரப்பிற்காக ஒரு மணி அதிகமாக்கப் பட்டிருக்கிறது. உயர்தர நடுத்தர ஆரம்பப் பள்ளிகளுக்குத் தனித்தனியாக நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப் படுகின்றன. கிராமங்களில்தான் நடுத்தர ஆரம்பப் பாடசாலைகள் அதிகம். பள்ளிக்கூட நிர்வாகிகள் வகுப்புகள் வைத்து நடத்தவே இடம் இல்லாமல் திண்டாடுகிறார்கள். இந்த நிலையில் ரேடியோ வைக்க இடம் ஏது? பணம் ஏது? எல்லா வற்றிற்கும் மேலாக ரேடியோ இயங்க மின்சாரம் தான் ஏது? பள்ளி மாணவர்களுக்கு இதனால் ஒருவிதப் பிரயோஜனமும் இல்லாமல் போய்விட்டாலும், இந்த நிகழ்ச்சி காரணமாகப் பல பிரசங்கிகளுக்குப் பிரயோஜனம் ஏற்படுகிறது அல்லவா?

★

சமீபத்தில் ஆரம்பப் பள்ளிகளுக்கான ஒலி பரப்பில் 'அவை எப்படிக் கிடைக்கின்றன?' என்ற பேச்சு வரிசையில் 'கோழி முட்டைகள்' என்பது பற்றி ஒரு பேச்சு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இதைக் கண்ட அடுத்த வீட்டுப் பையன் விச்சு, "என்ன மாமா! தெரிந்த விஷயங்களையே ஒலி பரப்புகிறார்கள்" என்றான். "கோழி முட்டை எப்படியடா கிடைக்கிறது?" என்று அவனைக் கேட்டேன். அவனளித்த பதில்:—

"கணக்கைத் தப்பிதமாகப் போட்டால் வாத்தியார் சாக்கட்டி கொண்டு சிலேட்டில் போடுவதால் கிடைக்கிறது."

பிழைத்துக் கொள்ளக்கூடிய பையன்!

மகரிஷியின் ஸாயுஜ்யம்

ஸ்ரீ வாசுதேவாச்சாரியார் சுவாமிகள் தமது 24-வது பிராயத்திலிருந்து கல்வித் துறையில் அருந்தொண்டாற்றி வந்த பெரியார். பள்ளிக்கூட ஆசிரியராக இருந்திருக்கிறார்; பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியராக இருந்திருக்கிறார்; கல்லூரிப் பேராசிரியராகவும் உதவிப் பிரின்ஸிபாலாகவும் இருந்திருக்கிறார். இவை எல்லாவற்றையும்விட அவர் உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்ற பிறகு செய்ததுதான் அரும்பெருந் தொண்டு.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் சென்னைக்கு அருகிலிருக்கும் தியாகராஜ நகர் வளர்ச்சிபெறத் தொடங்கியது. பெரிய மனிதர்கள், ஓய்வுபெற்ற உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் மாம்பலத்தில் வந்து குடியேறினார்கள். நகரம் வெகு வேகமாக வளர்ச்சிபெற்று வந்தாலும் ஒரு பள்ளிக்கூடமிருக்கவில்லை. குடியேறியவர்கள் தங்கள் குழந்தைகளைப் படிப்பிக்க வேண்டுமென்றால் சென்னைக்குத்தான் அனுப்பவேண்டியிருந்தது. இதைப் பார்த்த ஸ்ரீமான் வாசுதேவாச்சாரியார் 1932-ம் வருஷம் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஆதரவில் 300 மாணவர்கள் கொண்ட பள்ளிக்கூடம் ஒன்று தொடங்கினார். திறந்த கொட்டகையில் ஆரம்பமான பள்ளிக்கூடம் பத்து ஆண்டுகளில் அபாரமான வளர்ச்சிபெற்று, இன்று பார்ப்போரை வியக்கவைக்கும் பிரம்மாண்டமான கட்டிடங்கொண்ட பள்ளிக்கூடமாக மாறிவிட்டது. இன்று அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் பலகிளைப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஒரு ஹாஸ்டல் இருக்கிறது. ராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலை, அதற்கு ஒரு ஹாஸ்டல் எல்லாம் இருக்கின்றன. வருஷத்துக்குச் சுமார் 5000 மாணவ மாணவிகள் படித்துப் பயன் பெறுகின்றனர். இவையெல்லாம் ஸ்ரீ வாசுதேவாச்சாரியாரின் தபோவலிமைக்கும் நிர்வாகத் திறமைக்கும் ஸ்தூலவடிவான சாட்சியங்கள்.



இத்தகைய பெரியாரிடம் சகோதரி ஸ்ரீ சுப்புலக்ஷ்மி அம்மையார் தாம் நடத்திவந்த சாரதா வித்யாலயத்தையும் ஒப்படைத்தார். அதுவும் இன்று நன்கு நடந்து வருகிறது.

இவ்வளவு ஸ்தாபனங்களை நிர்வகிப்பதில் எவ்வளவோ வேலைகளும் தொல்லைகளும் ஏற்படும். உபாத்தியாயர்கள் ஒருவருக்கொருவர் போட்டுக்கொள்ளும் சண்டைகள் அவரிடம் தீர்ப்புக்குப் போகும். பெற்றோர்களின் குறைகளைக் கேட்கவேண்டியிருக்கும். இன்னும் எத்தனை எத்தனையோ. இந்தத் தள்ளாத வயதில் எப்படித்தான் இவை அத்தனையும் சமாளித்தார் என்பது நினைக்க நினைக்க ஆச்சர்யமாகவே இருக்கிறது. இந்தத் தொல்லைகளிடையேயும் ஆத்மார்த்தமான விஷயங்கள் சம்பந்தமாக அறிவாளிகளுடனும் பண்டிதர்களுடனும் உரையாட நேரம் ஏற்படுத்திக் கொள்வார். காலையில் தினம் வேத வகுப்புகளும், பாகவத வகுப்புகளும் அவர் இல்லத்தில் நடக்கும்.

சென்ற மாதம் 15-ந் தேதி மாலை "மாம்பலம் மகரிஷி ஸாயுஜ்யம் பெற்றார்" என்று ஒருவர் என்னிடம் சொன்னார்; திடுக்கிட்டேன். "வேத காலத்து மகரிஷிகளின் நினைவூட்டி வந்த மகான் இனி நம்மிடை இல்லை!" என்ற ஏக்கம் ஒரு கணம் ஏற்பட்டது.

எண்பதாண்டு நம்முடன் இருந்தவர் எப்படி இனி இல்லாமற் போய்விட முடியும்? நமது மனதில் பசுமையாக இருக்கும் இனிய நினைவுகளுடன் தாமும் ஒரு நினைவாகக் கலந்து வாழ்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

எனினும் அவர் பிரிவு ஆற்றாது துயர் உறும் அவரது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் நம்முடைய அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வட்ட மேஜை

மிரட்டல் மசோதா

சென்னை மாகாணத்தில் விவசாயத் தொழிலை வளர்ச்சியுறச் செய்யும்பொருட்டு சென்னை சர்க்கார் விவசாய மசோதா ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள்.

இதில் முக்கியமான அம்சம் நேராகச் சாகுபடி செய்யப்படாத நிலத்தை எடுத்துக் கொள்ள சர்க்காருக்கு அதிகாரம் உண்டு என்பதே யாகும். இரண்டாவது முக்கியமான அம்சம் சாகுபடி முறை. உற்பத்தி செய்யவேண்டிய பயிர் ஆகியவைகளைப் பற்றி விவசாயிகளுக்குக் கட்டாய யோசனை சொல்ல சர்க்கார் அதிகாரம் பெறுவது.

மசோதாவின் விவரத்தைப் பார்க்கையில் விவசாயிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒத்துழையாமையை மேற்கொண்டு விட்டனரோ, இந்தச் சண்டித்தனத்தைத் தண்டிக்கத்தான் இந்த மசோதாவோ என்று யாரும் நினைப்புறக்கூடும். பொதுவாக, விவசாயிகள் அனைவரிடையும் இதனால் பீதியுண்டாகி விவசாயத் தொழிலுக்கே நாசம் ஏற்படக்கூடும்.

நிலங்களை நேராகச் சாகுபடி செய்யவில்லையெனில் அதற்குக் காரணம் பொருளாதார நிலைமைத் தவிர சாகுபடியில் சிரத்தைக் குறைவல்ல.

விவசாயத் தொழில் வளர்ச்சியடைய உண்மையிலேயே சர்க்கார் விவசாயிகளுக்கு உதவ வேண்டுமானால் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும்.

உதாரணமாக முதல்தரமான விதை, எரு முதலியவற்றைக் காலகாலத்தில் போதிய அளவு சப்ளை செய்வது, பாசன வசதிகளை வேண்டியவாறு விஸ்தரிப்பது, கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் நீண்டகாலத் தவணைக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுப்பது போன்ற உதவியை சர்க்கார் செய்யுமாயின் உற்சாகத்துடன் ஒத்துழைக்காத விவசாயி யாருமே இருக்க மாட்டார்கள். அதற்குப் பதிலாக நிலத்தின் நிர்வாகத்தையோ அல்லது நிலத்தையோ பறித்துவிடப் போவதாகப் பூச்சாண்டி காட்டுவது விவசாயிகளிடையே கலவரத்தை உண்டாக்கும்.

நாகை
14—7—49 வி. என். ரகுபதி

○●○

வீணாக்காதீர்!

ரயில்வே நிதியிலிருந்து ரூ. 45000 கொள்ளை போகாமல் தடுக்கப்பட்டதாக எழுதிய நண்பர் வி. என். மணியின் கடிதத்தைப் பார்த்தேன். ரயில்வே நிதியும் 'பொதுஜன' நிதிதான். மற்ற சர்க்கார் பணங்களும் பொதுஜன நிதிதான். இந்தத் தாலுக்காவில் குடிதண்ணீர்த் திட்டப்படி சர்க்காரால் கட்டிக் கொடுக்கப்படும் கிணறு வேலைகளில் நடக்கும் பகற் கொள்ளையைப் பாருங்கள். இந்தத் தாலுக்கா பூராவும் வெட்டுப்பாறை நிறைந்த பிரதேசம். உளி, கட்டப்பாறை போன்ற கருவிகளின் உதவிகொண்டே 40 அடி ஆழம் வரை கிணறுகள் வெட்டி விடலாம். குறைந்த பொருட் செலவுதான் ஆகிறது. விவசாயி ஒருவர் சர்க்காரின் உதவித் தொகையான 700 ரூபாயுடன் கைப்பணம் 500 ரூபாய் போட்டு தனக்காகக் கிணறு வெட்டிக் கொண்டிருந்தார். சிமிட்டிகொண்டு கட்டிட வேலை பூர்த்தி செய்ய 1000 ரூபாய் செலவாகும் அதிகம். மொத்தத்தில் 2500 ரூபாயில் கிணறுவேலை பூர்த்தியாக வேண்டியிருக்க ரூபாய் 4000 சர்க்கார் கிணறு வேலைகளுக்கு மட்டும் செலவு ஆவதின் காரணம் புரியவில்லை. வெடி வைத்து வேலைசெய்யும் கடினபாறைப் பிரதேசங்களான செங்கம், திருவண்ணாமலை போன்ற தாலுக்காக்களில்கூட 3000 ரூபாய்க்கு மேல் செலவு ஆவதில்லை! இங்கு மட்டும் ரூ. 4030 செலவு ஆவதற்கு ஒரு சில அதிகாரிகளும், கண்டிராக்டர்களுமே காரணம். சர்க்கார் பொதுஜன நிதியை இப்படியா வீண் அடிக்கவேண்டும்?

திருப்பத்தூர்
25—7—49 எஸ். ராமானுஜம்

○●○

வழி செய்ய வேண்டும்!

சென்ற இதழ் ''கல்கி''யின் 'குறையில்லாக் குறை' என்பதைப் படித்துவிட்டு வந்திருந்த கடிதங்களை—அதிலும் ஒரு சகோதரி எழுதியிருந்த கடிதத்தை நான் வரவேற்கிறேன். சில இடங்களில் ஒரு குழந்தைக்காக ஏங்கித் தவிக்கின்றனர். ஆனால் எனக்குத் தெரிந்தவரை அதிகக் குழந்தைகள் இருக்கும் இடம் தான் அதிகம் என்று நினைக்கிறேன். அந்தத் தாய்மார்கள் தங்களது நிலைமையும் மறந்து

உள்ளே வந்து ...



கணவன்:—பத்திரிகையைப் பிரித்தால் பத்த வச்ச சங்கதியாகவே இருக்கு. பீஹாரிலே போஸ்டாபீஸைப் பத்த வச்சுட்டாளாம். ஹைதராபாத்திலே ரயில்வே ஸ்டேஷனை எல்லாம் பத்த வைக்கிறாளாம். கல்கத்தாவிலே டிராம் வண்டி, பாங்கி, கிடங்கு எல்லாவற்றையும் பத்த வைக்கிறாளாம்...

மனைவி:— நீங்கள் கொஞ்சம் உள்ளே வந்து அடுப்பையாவது பத்தவையுங்களேன்!

'மரம் வைத்தவன் தண்ணீர் விடாமலா போவான்?' என்கிறார்கள். பாவம்! அவர்கள் தங்கள் குழந்தைகளுடன் வீட்டில் படும் அவஸ்தையும், வீட்டில் குழந்தைகளைத் தனியே விட்டு ஆஸ்பத்திரிக்கு மருந்து வாங்கச் செல்லும் கண்ணராவியும் மிகவும் பரிதாபகரமானது. இது மட்டுமல்ல. அவர்கள் வருஷம் தோறும் ஒவ்வொரு பிரசவத்தின் பொழுதும்-மேலுலகை எட்டிப் பார்த்து விட்டு வருகிறார்கள். இவையெல்லாம் தன் சுகமே பெரிதென்று எண்ணும் அந்த ஆண்களுக்குத் தெரிந்தால்தானே? எல்லாவற்றிலும் சர்க்கார் முயற்சி செய்வதுபோல் இந்த ஜனப் பெருக்கத்தையும் குறைக்க ஏதாவது ஒரு வழி செய்யவேண்டும்.

மதுரை
14—7—49 ஆர். லக்ஷ்மி

○●○

பள்ளிக் கணக்கு

'பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது' என்பது உலக வழக்கு. இந்த இழுக்கைப் பொதுமக்கள் ஆசிரியகுலத்தின் மீது சுமத்துகிறார்கள். சிந்து ஆராய்ந்து பார்த்தால் இக் குற்றம் அரசாங்கத்தையே சாரும் என்பது திண்ணம். உதாரணமாக 8 படி கொண்டது ஒரு மரக்கால் என்று எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் போதிக்கப்படுகிறது. ஆனால் அனுபவத்தில் ஒரு இடத்திலாவது ஒரு மரக்காலுக்கு 8 படி இருப்பதாகத் தெரியவில்லை. தஞ்சை ஜில்லாவில் ஒரு மரக்காலுக்கு 4 படி; திருச்சியில் சில இடங்களில் மூன்றரைப் படி; சில இடங்களில் 2 படி; மதுரை ஜில்லாவில் 4 படி. 6 படியாக இருக்கிறது. இதேபோல ஒரு கலத்துக்குத் தஞ்சையில் 24 படி; திருச்சியில் முப்பத்தேழரை படி; 43 படி; மதுரையில் 48 படி; 72 படி. நல்லெண்ணெய் வாங்கப்போனால் சென்னையில் ஒரு வீசைக்கு 5 சேர்; தஞ்சையில் ஒரு வீசைக்கு 4 சேர்; திருச்சியில் அரையே மூன்றுவீசம் படி கொண்டது ஒரு செம்பு! பால் வாங்கப் போனால் மதுரையில் ஒரு சேர் என்பது ஒரு படி; தஞ்சையில் ஒரு சேர் என்பது மூன்று வீசம் படிதான். மதுரையில் ஒரு வீசைக்கு 20 பலம்தான்; ஆனால் ஒரு பலத்துக்கு 6 தோலா. ஒரு தஞ்சை மிராசுதார் மதுரைக்குப் போய் வீசைக்கு 40 பலம் வீதம் சாமான் வாங்க முயற்சி செய்து வீண் சிரமப்பட்டார். மிட்டாய்க் கடையிலே ஒரு சேர் என்பது 75 தோலா. ரெயில்வே ஸ்டேஷனிலே ஒரு சேர் என்பது 82 தோலா. பலசரக்குக் கடையில் ஒரு சேர் 24 தோலா. அதேபோல விறகு ஒரு எடைக்குத் திருச்சியில் 56 பவுண்டு. மதுரையில் 50 பவுண்டு. இம்மாதிரி இன்னும் பல. தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு என்பது அந்தக் காலம். ஆனால் ஜில்லாக்கள் தோறும் அளவுகள் வேறு என்பது இந்தக் காலம். இம்மாதிரி அளவு வேறுபாடுகளை ஒன்று படுத்தினாலன்றி பள்ளிக் கணக்கைப் புள்ளிக்கு (வாழ்க்கைக்கு) உதவக் கூடியதாகச் செய்ய இயலாது. அரசாங்கத்தார் மாகாணமெங்கும் அளவுகள் ஒரே விதமாக இருப்பதற்குரிய சீர்திருத்தத்தைச் செய்வார்களா?

திருச்சி
24—7—49 எஸ். ரத்தினசாமி

○●○

"போல்டிங் காமிரா"

நான் பேப்பர்களில் வெளியாகும் விளம்பரங்களைப் பார்த்து, வட இந்தியாவில் உள்ள ஒரு கம்பெனிக்கு, ஒரு மடக்கக்கூடிய காமிரா (Folding Camera)வுக்கு ஆர்டர் செய்தேன். ஆர்டர் செய்து ஒரு மாதத்துக்கு மேலாகியும் ஒரு கடிதமாவது அல்லது காமிராவாவது காணாததினால், நான் அந்தக் காமிரா சங்கதியை அப்படியே விட்டுவிட்டேன்.

அப்படியிருக்கையில், ஒரு நாள் காலையில் அந்தக் கம்பெனியிலிருந்து நல்ல நிலையிலுள்ள ஒரு "போல்டிங் காமிரா" அனுப்பியிருப்பதாக 11-6-49 எழுதின கடிதம் ஒன்று 8-7-49 கிடைத்தது. தேதி வித்தியாசத்தையும் அந்தக் கடிதத்தினுடைய அழகையும் பார்த்தவுடன் காமிரா எப்படியிருக்குமோ என்று சந்தேகம் பிறந்துவிட்டது. எதற்கும், 'போல்டிங் காமிரா' அனுப்பியிருப்பதாக எழுதியிருந்தபடியால், ரூ. 21 கொடுத்து வி. பி. எடுத்தேன். ஐயா! காமிராவின் அழகை வர்ணிக்க என்னால் இயலவே இயலாது. போல்டிங் காமிராவுக்குப் பதிலாக ஒரு காயப்பெட்டி காட்சியளித்தது. எனக்குப் பகீரென்றது. முற்றிலும் ஏமாற்றம்! அனுப்பியிருக்கிற காமிராதான் நல்லதாக இருக்கவேண்டாமா? காமிரா 'லைட் ப்ரூப்' ஆக இருக்கவேண்டும் என்ற பொது விதிகூட இந்தக் காமிராவைப் பாதிக்கவில்லை. வெளிச்சம் காமிராவுக்குள் நன்றாகப் புகும்படி, ஜன்னல்களும், வாசல்களும் வைத்ததுபோல். அவ்வளவு அழகாக ஒரு தகரத் துண்டை வைத்து, பெட்டிமாதிரி செய்து அதில் கொஞ்சம் ஜப்பானையும் வாரிப் பூசி, 'லென்ஸ்'க்குப் பதிலாக ஒரு சோடாக் குப்பித் துண்டையும் வைத்து, காமிரா பாஷை

ஜுகச் செய்து அனுப்பியிருந்தார்கள். இந்தக் காமிராவை வைத்துப் போட்டோ எடுக்க முடியாது. வேறு என்ன செய்யலாம் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

இந்தமாதிரி தூர தேசங்களில் இருக்கிற ஏழை மக்களைப் படுமோசத்தனமாக ஏமாற்றிப் பணத்தை அபகரிக்கும் பாபிகளின் போலி விளம்பரங்களைக் கண்டு என்னைப்போல் ஏமாற வேண்டாம் என்று பத்திரிகை படிப்பவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நாகர்கோவில்
31—7—49 அனந்தராமன்

○●○

சர்க்கார் வேலைக்கு நிபந்தனைகள்

24-6-49 தேதி தினப் பத்திரிகை யொன்றில் வெளியாகி யிருக்கும் தபால் — தந்தி இலாக்காவில் 'கட்டிடங்கள் கட்டும் ஓவர்ஸியர்கள்' தேவை என்று ஒரு விளம்பரம் வந்திருந்தது. விண்ணப்பதாரர்களின் வயது 1—6—49ல் 25-க்கு மேலே போகக் கூடாது என்பது நிபந்தனை. அதுமட்டும் அல்ல; அவர்களுக்கு Degree in Engineering முதலிய பூரண யோக்கியதாம்சங்களும் இருக்கவேண்டுமாம். இதில் கவனிக்கவேண்டிய விஷயம் வயதைப் பற்றியதுதான். இவ் வேலைக்கு விண்ணப்பம் போடுபவர்களின் வயது 25க்குமேல் ஐந்தாறு அதிகமாகி விட்டால் அவர்கள் வேலைக்கு லாயக்கற்றவர்களாகி விடுவார்களா? அல்லது திறமையும் தேக வலிவும் இருக்காதா? இன்ஜினியரிங் காலேஜில் இடம் கிடைப்பதே குதிரைக் கொம்பா யிருக்கும்போது, ஒருவன் இண்டர், அல்லது பி. ஏ. படித்தபின் நான்கைந்து வருடங்கள் 'இன்ஜினியரிங்' படித்துப் பட்டம் பெறுவதற்குள்ளேயே அவனுக்கு வயது 30, 35க்கு மேலாகிவிடுமே! அப்படி யிருக்கும்பொழுது சர்க்கார் வேலைகளுக்கு இவ்வளவு குறைந்த வயதை ஒரு வரம்பாக நிர்ணயிக்கும் காரணம் என்னவோ?

விழுப்புரம்
14—7—49 சீனுவாசன்

○●○

ஓர் அரிய சேவை!

ஜுலை 24-ம் தேதி முடிய தெ. 16 என்ற மதுரை பார்ஸல் பாஸஞ்சர் வண்டி திருச்சி ஜங்ஷனை விட்டு மத்தியானம் 1-மணிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தது. ஆதலால் விருத்தாசலம், லால்குடி, ஸ்ரீரங்கம் முதலிய இடங்களிலிருந்து தஞ்சாவூர்ப் பக்கம் போகும் ஜனங்கள் அந்த மதுரை பார்ஸல் பாஸஞ்சரில் சௌகரியமாகப் பிரயாணம் செய்தார்கள். ஆனால் அந்த ஜனங்களின் துரதிருஷ்டத்தின் வசமாக ஜுலை 25-ம் தேதியிலிருந்து அவ் வண்டி திருச்சி ஜங்ஷனை விட்டு 11-13க்குப் புறப்பட்டுப் போய்விடுகிறது. ஆதலால் விருத்தாசலம், லால்குடி முதலிய இடங்களிலிருந்து தஞ்சாவூர்ப் பக்கம் போகும் ஜனங்களின் பாடு திண்டாட்டமாய் விட்டது. ஏனெனில் அவர்கள் தெ. 167 என்று சொல்லப்படும் விழுப்புரம் பாஸஞ்சரில் வரவேண்டி யிருக்கிறது. அவ் வண்டி பொன்மலையை 11-48-க்கு அடைகிறது. ஆனால் மதுரை பார்ஸல்—பாஸஞ்சர் வண்டி பொன்மலையை விட்டு 11-23க்குப் புறப்பட்டுப் போய்விடுகிறது. ஆகையால் தஞ்சாவூர்ப் பக்கம் போகும் மேற்படி ஜனங்கள் மாலை 5-15 மணி வரையில் பொன்மலை பிளாட்பாரமாகிற பொட்டலில் நரக வேதனைப் பட்டு தெ. 10 எனப்படும் திருவனந்தபுரம் பாஸ்டு — பாஸஞ்சர் வரும் வரையில் காத்திருக்கவேண்டி யிருக்கிறது. பொன்மலைப் பிளாட்பாரம் வெய்யில் அடித்தாலும் சரி, காற்றடித்தாலும் சரி, மழை பெய்தாலும் சரி எல்லாவற்றிற்கும் இடமளித்து அங்கு தங்கியிருக்கும் ஜனங்களுக்கு உபத்திரவத்தைக் கொடுக்கிறது. இப்பேர்ப்பட்ட ஸ்திதியில் பொது ஜனங்கள் நடுப்பகல் 12 மணியிலிருந்து மாலை 5-15 மணி வரையில் தஞ்சாவூருக்கு வண்டியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க வேண்டி யிருக்கிறது. அந்த நிலையில் அவர்களைப் பார்ப்பதற்கும் பரிதாபகரமாக இருக்கிறது. ஆகையால் தெ. 16-ஐ தெ. 167-க்குக் கனெக்ஷன் ஆக விடும்படி ரயில்வே அதிகாரிகளை மிக விநயத்துடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் திருவரும்பூர் மஞ்சத்திடல் முதலிய ஊர்களிலிருந்து பொன்மலை ஒர்க்ஷாப்புக்கு ஜனங்கள் காலை 7 மணிக்கு வேலைக்குப் போவதாலும், மேற்படி ஊர்களிலிருந்து பொது ஜனங்கள் டவுனுக்குத் தங்கள் காரியமாகப் போகவேண்டி யிருப்பதாலும் ரயில்வே அதிகாரிகள் தஞ்சாவூரிலிருந்து காலை 5-15 மணிக்கு ஓர் ஷட்டிலைப் புறப்பாடு செய்து திருச்சி ஜங்ஷன் வரையிலுள்ள எல்லா ஸ்டேஷன்களிலும் அவ்வண்டியை நிறுத்திப் போகும்படி செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். மேலும் தெ. 16க்குப் பிறகு மத்தியானம் 1-30 மணிக்கோ, 2 மணிக்கோ அதே மேற்படி ஷட்டிலைத் திருச்சி ஜங்ஷனை விட்டுப் புறப்பாடு செய்து தஞ்சாவூர் வரையிலுள்ள எல்லா ஸ்டேஷன்களிலும் அவ்வண்டியை நிறுத்திப் போகும்படியாகவும் ஏற்பாடு செய்தால் மிகவும் நலமாயிருக்கும்.

ஆலத்தூர்
28—7—49 ஆர். ஞானகிராமன்

○●○

★ மாற்றுத்தாய் மக்கள்

போலீஸ் இலாகா சிப்பந்திகளாகிய எங்கள் குறைகளுக்கும் 'வட்டமேஜை'யில் இடம் கிடைக்கும், அதன் மூலம் பாராமுகமான ஆட்சியாளரின் மனப்போக்கு மாறும் என்ற நம்பிக்கையில்தான் இந்தக் கடிதம் எழுதலானேன்.

நாங்கள் இரவு எல்லாம் இடுப்பொடிய வேலை செய்தாலும் காலை பல் தேய்க்கக்கூட

திருத்தம்

24-7-49 "கல்கி" இதழில் "சங்கீத அரங்கேற்று விழா" என்ற தலைப்பில் வெளியான செய்தியில் "திருச்சி ஜில்லா புரோபேஷனரி ரிஜிஸ்த்ரார் ஸ்ரீ டி. பி. ராமநாதய்யர்" என்று திருத்திப் படித்துக் கொள்ளக் கோருகிறோம்.

நேரமில்லாமல் விழுந்து அடித்துக்கொண்டு ஓடவேண்டும் ஸ்டேஷனுக்கு. அங்கு போய்ச் சேர்ந்ததும் சோதனையாக வந்துவிடும் விதவிதமான வழக்குகள்!

"சார், எங்கள் வீட்டில் நேற்றிரவு என் பாட்டியின் புதிய பட்டுப்புடவையில் முடிந்து வைத்த சம்புடமும், தாத்தாவின் தந்தப் பிடி போட்ட தடியும் திருட்டுப் போய் விட்டதால், தாத்தாவும் பாட்டியும் தந்தத் தடியும் சம்புடமும் இல்லாமல் தவிக்கிறார்கள். கொஞ்சம் கவனியுங்கள்!" இது ஒரு பேரனின் புலம்பல்.

போதாக் குறைக்கு, அக்கம்பக்கத்துக் குழாய்ச் சண்டையில் ஏற்பட்ட அடிதடியின் விளைவாகப் பல் உடைபட்ட 'பங்கஜ'ங்களின் பதறலும் கையொடிந்த 'கமலா'க்களின் கதறலும் வேறு வந்துவிடும்! அதுமட்டுமா புருஷன், பெண்சாதி சச்சரவின் விளைவாக "விசாலி"கள் சரிந்த கூந்தலைக்கூட முடியாமல் மயானகண்ட ஒப்பாரியோடு சோககீதம் பாட வந்துவிடுவார்கள்!

வழக்குகளை விசாரித்துக் கொண்டே இருக்கையில் நடு நடுவே வரும் அதிகாரிகளுக்கு வேறு எழுந்து எழுந்து தோப்புக்கரணம் போட்டுக்கொண்டே, ரயில்வே கைகாட்டி மரம் ஏறி இறங்குவதுபோல் 'ஸலாம்' அடிக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அதிகாரிகள் 'மரியாதைகெட்ட மடையன்' என்று அளித்து விடுவார்கள் ஒரு பட்டம்!

இதன் நடுவே நரி ஊளை விடுவதுபோல், "டேய் 384, பக்கத்துப் பெருமாள் கோவில் குளத்தில் ஒரு பாரி பிணம் மிதக்கிறதாம், நீ போய் என்ன என்று கவனி!" என்று அதிகாரி ஒருவர் அதட்டுவார். அங்கு சென்றாலோ அந்தப் பிணத்தைக் கரையில் எடுத்துப் போடவும், பிணம் பரிசோதிக்கும் சாலைக்கு எடுத்துச் செல்லவும் நம்மைத் தவிர வேறு ஆட்கள் கிடைக்க மாட்டார்கள். ஆதலால், அந்தப் பிணம்தூக்கி உத்தியோகமும் நாங்கள்தான் செய்யவேண்டும்!

பகல் என்றும் இரவு என்றும் பாராமல், நடு ரோட்டில் நின்றுகொண்டு கொளுத்தும் வெய்யிலிலும், கொட்டும் மழையிலும் "டேய், ரிக்ஷா! இப்படி வா" "ஏய், ஜட்கா அப்படிப் போ" "ஏம்பா டிரைவர், காரை சீக்கிரம் ஓட்டித் தொலையேன்" என்று இவ்வாறாகப் பல கருவிகளுடன் 'டப் டப்' என்று தட்டும் பூட்ஸ் சப்தத்தைத் தாளமாகப் பாவித்து அடி பிறழாமல், அட்டென்ஷன் (Attention) தவறாமல், நடராஜ நர்த்தனம் வேறு ஆடியாக வேண்டும். இதற்குத்தான் டிராபிக் உத்தியோகம் என்று பெயர். அதிலும் அக்கிரமமான வழக்குகளைச் செஞ்சித்துத் தவறான விலாசமும் கொடுத்து 'டிமிக்கி' கொடுக்கும் திருமூர்த்திகளைத் தேடிப் பிடித்துக்கொண்டு செல்லும்பொழுது பாதி உயிர் போய்விடும்; அங்கே நடக்கும் வக்கீல்களின் வறட்டுவாதம் மீதி இருக்கும் பிராணனையும் பரிபூரணமாகப் போக்கிவிடும்!

இவ்விதம் உடல் வியர்க்க விறு விறுக்க மாதம் முழுவதும் வேலை செய்தால், மாதக் கடைசியில் மாகாண சர்க்கார் எங்களுக்கு அளிக்கும் படி என்னவென்றால், பஞ்சப்படி சேர்த்து ரூபாய் 50 தான். இந்தச் சம்பளத்தைக் கொண்டு 'எட்டுக் குட்டியும், பெட்டை நாயும்' ஆகக் காட்சி அளிக்கும் மனைவி மக்களைக் கவனிப்பதா? அல்லது வயோதிகத்தினால் வாடும் பெற்றோரைப் பராமரித்துத் திருப்திப்படுத்துவதா? எதைச் செய்வது?

ஆனால் மத்திய சர்க்கார் சில குறிப்பிட்ட இலாகாக்களை மாத்திரம் தம் மேற்பார்வையில் வைத்துக்கொண்டு குறைந்த பட்சம் 80 ரூபாய் கொடுக்கிறார்கள்: விடுமுறைக்கு ஒரு விதியும் செய்து வைத்திருக்கிறார்கள். இவ்விதம் எங்களையும் இன்னும் சில இலாகா சிப்பந்திகளையும் மாத்திரம் "மாற்றாந்தாய் மக்களாகப்" பாவிக்கும் போக்கு நீடித்தால் எங்களுக்குப் போக்கிடம் ஏது?

ஆதலால் இனியாகிலும் ஆட்சியாளர்கள் எங்களையும் மத்திய சர்க்கார் சிப்பந்திகளைப் போல் பராமரிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

பெரம்பூர்
24—7—49 பி. எஸ். வேலாயுதம்

○●○

காதில் விழவில்லையா?

சென்ற 21-7-49 அன்று மதுரையில் வேலையின்மை காரணமாக ஒரு இளம் வாலிபர் தற்கொலை செய்துகொண்டார் என்ற செய்தியைத் தாங்கள் படித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

மதுரையில் மட்டுமில்லாமல் நம் மாகாணம் முழுவதிலும் வேலையில்லாத் திண்டாட்டம் சென்னை மந்திரிசபை மேலுள்ள புகார்களைப் போல நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. வருடா வருடம் படிப்பை முடிக்கும், பல்லாயிரக்கணக்கான படித்த வாலிபர்கள் வேலை தேடுவதைவிட்டால் வேறு விதியில்லையென்று வேலை தேடும் வேலையிலாழ்ந்து விடுகிறார்கள்!

தேசிய சேனையிலாவது சேரலாம் என்றால் ஒரு சிறு குறை இருந்தாலும் தள்ளிவிடுகிறார்கள். எட்டு அவுன்ஸ் ரேஷனில் பற்றாக் குறையாகப் பாதி வயிறு உண்ணும் நாம் பாரதப் போர் நடந்த காலத்து பீம—அர்ஜுனர்களாக எப்படி இருக்க முடியும்?

"வேலைதேடும் ஸ்தாபனம்" எந்த உதவியும் செய்வதில்லை. நான் அந்த ஸ்தாபனத்தில் என் பெயரைப் பதிவு செய்து ஒன்றரை வருடமாகியும் பலன் ஏதுமில்லை.

"ஹனுமான்" விமானத்தை "மயூரம்" ஆக்கலாமா என்பது போன்ற அர்த்தமற்ற சம்பாஷணைகளில் அசெம்பிளி மெம்பர்கள் ஈடுபட்டிருக்கிறார்களே தவிர, வேலையின்றித் தவிக்கும் சகோதர மக்கள் அனைவரும் இன்பமாய் வாழ்வதற்கான எந்தத் திட்டத்தையும் வகுப்பதாகத் தெரியவில்லை.

இவ்விதமாக வேலையில்லாத் திண்டாட்டம் பரவிக்கொண்டே போகுமானால் நாட்டில் இறுதியாகக் கலகமும் குழப்பமுமே அதிகமாகும். ஆரம்பத்திலேயே இதைத் தடுத்து மக்கள் குறையை சர்க்கார் தவிர்க்காதா?

நம் நாட்டு படித்த வாலிபர்களின் கதி தற்கொலை செய்துகொள்ளுவதுதானா?

ஏ சென்னை அசெம்பிளியே! ஏழை வாலிபர்களின் கதறல் உன் காதில் விழவில்லையா? இந்தக் கதறலுக்குச் செவி சாய்க்க வேண்டியது உன் கடமையல்லவா?

மதுரை
24—7—49 வி. வைத்தியநாதன்

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "பஸ்லிக் கணக்கு" என்ற கடிதம் எழுதிய திருச்சி ஸ்ரீ எஸ். ரத்தினசாமிக்கும், "மாற்றாந்தாய் மக்கள்" என்ற கடிதம் எழுதிய பெரம்பூர் ஸ்ரீ பி. எஸ். வேலாயுதத்துக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.



மகத்தான ஆரம்பவிழா......
ஆகஸ்டு 12உ
ஆயிரம் எண்ணங்களை
எழுப்பும் எழில் மங்கை
விரைவில் வருகிறாள்
எதிர்பாருங்கள்!
கடமைக்கும் காதலுக்கும்
இடையே ஏங்கும் மன்னன்!
அழகியை அடைய
ஆசிக்கும் அவலக்ஷணன்!
காதலை வெறுத்தவனை
கணவனாக்கிக்கொண்ட கதை
சங்கீதம்:
G.ராமநாதன்
பாட்டு:
K.M.ஷெரீப் &
A.மருதகாசி.
கதை & வசனம்
P.கண்ணன்
கணபதி பிக்சர்ஸாரின்
மாயாவதி
டைரக்ஷன்
T.R.சுந்தரம்
B.A.B.Sc.(Leeds)
மஹாலிங்கம். அஞ்சலிதேவி. சுப்பையா.
காளி N.ரத்னம். ராஜகாந்தம். லலிதா. பத்மினி
ஸ்டுடியோ. மாடர்ன் தியேட்டர்ஸ்

Edited, Printed and Published by R. Krishnamurthy, at the "Kalki" Press
116-119, Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI ஆகஸ்டு 7, 1949 4 அணா



தலையில்

தலை மயிர் தெரிகிறதா, அல்லது அடித் தலை தெரிகிறதா? அடித் தலை புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேச ராசிகளுக்குப் பதில் புதுக் கூந்தல் முளைக்கவில்லை என்பது நிச்சயம். அச்சமயம் கேசவர்த்தினியைக் கொண்டு பரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கையாக விடுவானேன்? வழுக்கையால் ஏற்படும் இழுக் தோற்றத்தையும் அனுபவிப்பானேன்?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைத்து விடும். ஆனால் சில சமயங்களில் உதிர்ந்த கூந்தல் சிகிச்சையில்லாமல் முளைப்பதில்லை. அச்சமயங்களில் கேசவர்த்தினியை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி, இளம் கூந்தலையும் இளமையையும் ஒருங்கே பெறுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 14

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை
கிராஸ் கட் ரோடு, கோயமுத்தூர்

இதய நோயா?

....என்ன செய்யவென்று கூறுவேன்



இவ்வுபாதைகள் அதி கோரமானவை என்றுணர்ந்தேன். மிக அசாதாரணமாகவும், ஊணுக்குப் பின் வயிற்றில் அஜீரணம், உப்புச உணர்வுகளைத் தரும் அமிலத்தின் சேர்க்கையாலேயே இவ்வுபாதைகள் ஏற்படுகின்றன. விஷ அமிலங்களுக்கு மாற்று, எப்போதும் போல ஜீரண சக்தி பணிப்பது, என உகந்த பிஸ்மாகை சிபாரிசு செய்கிறேன். 3 நிமிஷத்தில் வலி இடைஞ்சலின்றி ஜீரணமாக உதவுகிறது. இன்று பரிக்ஷியுங்கள்.

உங்களுக்கு வேண்டியது

எல்லா கெமிஸ்டுகளிடமும் ஸ்டோர்களிலும் பவுடராகவும் மாத்திரையாகவும் கிடைக்கும்.

BISMAG

இந்தியாவுக்கு பூரண விநியோகஸ்தர்கள்:

ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்

பம்பாய்-கல்கத்தா-டெல்லி-மதராஸ்